குடி அரசு வெளியீடு 27.

# இராமாயண ஆராய்ச்சி.

(நான்காம் பாகம்.)

## கிட்கிந்தா காண்டம்.

முதற்பதிப்பு 2000

சந்திரசேகரப் பாவலர் என்பவரால் 'இதிகாசங்கள்' என்னும்
தலைப்பின் கீழ் எழுதப்பட்ட
இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி

ஈரோடு
"குடி அரசு" பதிப்பகத்தாரால்
வெளியிடப்பட்டது.

1936

விலை] [அணா 4.

098
F02

| | | | |
|---|---|---|---|
| 1 | இராமாயண ஆராய்ச்சி | | |
| | | பாலகாண்டம் | 0—4—0 |
| 2 | ,, | அயோத்தியாகாண்டம் | 0—8—0 |
| 3 | ,, | ஆரண்யகாண்டம் | 0—4—0 |
| 4 | ,, | கிட்கிந்தாகாண்டம் | 0—4—0 |

4 காண்டமும் சேர்த்து வாங்குவோருக்கு ஒருரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு.

குடி அரசு வெளியீடு 27.

# இராமாயண ஆராய்ச்சி.

T. 21098

(நான்காம் பாகம்.)

## கிட்கிந்தா காண்டம்.

முதற்பதிப்பு 2000

சந்திரசேகரப் பாவலர் என்பவரால் 'இதிகாசங்கள்' என்னும்
தலைப்பின் கீழ் எழுதப்பட்ட
இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி.

ஈரோடு
"குடி அரசு" பதிப்பகத்தாரால்
வெளியிடப்பட்டது.

1935.

விலை] [அணா 4.

உண்மை விளக்கம் பிரஸ்,

ஈரோடு.

# கிட்கிந்தா காண்டம்.

———)✻(———

## முதலாவது அத்தியாயம்.

———)○(———

(சருக்கங்கள் 1- முதல் 5-முடிய)

இராமன் பம்பைக் கரையில் சீதையை நினைந்து விரகதாபம் மேலிட்டு இந்திரியச் சுவாதீனமற்றுப் புலம்பினான். அதனால் இராமன், "தம்பீ! நாம் அயோத்தியை விட்டு வந்து பதின்மூன்று ஆண்டுகளாகின்றன. இது வசந்த காலமானதால் குயில் முதலியவைகள் சத்தமிடுவது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. ஏனெனில் முன்னொரு சமையம் சீதை இவைகளின் சத்தத்தைக் கேட்டு ஆசைமிகுந்து என்னையழைத்துப் பலவிதமான இன்பங்களை அனுபவித்தாள். நாம் நகரத்தில் இருக்கும்போது இராவணன் சீதையை எடுத்துப்போகாமல் தனியாக மிகுந்த மேலான காம இன்பங்களை அனுபவிக்கத்தகுந்த இந்தக் காட்டில் வந்திருக்கும்போது எடுத்துப் போனானே! இத்தகைய தனி இடங்களில் தமது மனைவியருடன் விரும்பிய போகங்களை அனுபவிப்பவர்களே தவம் செய்தவர்கள். தம்பி! இந்தப் பெண் மயில் தனது ஆணிடம் வலியச் செல்வதைப்பார். இப்படியே என்னைப் பார்த்து மகிழ்ந்து சீதையும் என்னை வலியவந்து சேர்ந்து சுகத்தைக் கொடுப்பாளல்லவா? ஐயோ! இராவணன் அவளைத் தூக்கிப்போய்விட்டானே; அக்கட்டழகி யாரிடத்திலும் மிருதுவாகத் தானே முந்திப் பேசுகிறவள். சீதையைப் பிரிந்து உயிரை வைத்துக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. சீதை எனக்குக் கிடைத்து இவ்விடத்தில் அவளுடன் வாழ்ந்தால் நான் இந்திர லோகத்தையும் அயோத்தியையும் விரும்பமாட்டேன். இந்த அழகான இளம்புல் தரைகளில் சீதையுடன் கூடிக் காலங்கழித்தால் எனக்கு நாடிழந்த துயரமும் மறைந்துவிடும். தம்பி! நான் சீதையில்லாமல் பிழைத்திருக்கமாட்டேன்" என்று திக்கற்றவனைப்போல் புலம்பினான்.

இலக்குவன், "அண்ணா! கவலையை விடுங்கள். சீதை இடத்தில் அன்பு அதிகமாய் வைத்திருந்தமையால்தான் இவ்வேதனை உண்டாகிறது. யாரிடத்திலும் அதிகப் பற்று வைக்கக்கூடாது. சீதையைத் தேடியடைவோம்'' என்று தேற்றினான். அவர்கள் பம்பையைத் தாண்டிச்சென்றார்கள்.

மதம்பிடித்த யானையைப்போல இராமன் நடந்து சென்றான். இராமன் தன் நடையால் எல்லோருடைய மனதையும் கவர்ந்தாலும் இலக்குவன் அவனுடைய அழகில் தன் மனத்தை நாட்டிச் சிதறவிடாமல் பின் சென்றான். இதனாலேயே சுமித்திரை இலக்குவனிடம், "குழந்தாய்! நீ இராமனுடைய நடையழகைக் கண்டு மயங்கி மோசம் போகாதே'' என்று நல்லறிவுறுத்தினாள்.

அவர்கள் இருசியமூகமலையில் அடிவைத்தேறினர். அம்மலைமேலிருந்த சுக்கிரீவனும் அவனுடனிருந்த குரங்குகளும் அவர்களைக் கண்டு அஞ்சி ஓடி மதங்கமுனிவரின் குடிசையில் ஒளித்துக்கொண்டனர். சுக்கிரீவன் "தோழர்களே! இவர்கள் நமது பகைவனாகிய வாலியால் அனுப்பப்பட்டு நம்மைக் கொல்ல வந்திருக்கிறார்கள்'' என்றனன். எல்லோரும் வேறொரு மலைச் சிகரத்திற்குப் போனார்கள். அங்கும் அச்சமிகுந்து மலைக்கு மலை தாவ ஆரம்பித்தார்கள். பிறகு வேறு எண்ணங்கொண்டு அவர்கள் பழையபடி இருசியமூகமலைக்கே வந்தனர். அனுமான், "இம்மலைக்கு வாலி வரமாட்டான். இவர்கள் அவனால் அனுப்பப்பட்டவர்களும் அல்லர். குரங்குகளின் சஞ்சல சித்தம் தெளிவாக வெளிப்பட்டது'' என்றனன். அதனால் சுக்கிரீவன் தெளிந்து, வாலியோ அரசகாரியங்களில் இணையற்றவன். அவனால் அனுப்பப்பட்டார்கள் என்றே ஐயுறுகிறேன். அனும! நீ மனிதனைப்போல உருவெடுத்துச் சென்று அவர்களைச் சோதித்துவா. அவர்களுடைய உண்மையை அறிந்து கூடுமானால் எனக்கு அனுகூலமாக மாற்று'' என்றனன்.

அனுமான் அவர்களை ஏமாற்றுவதற்குத் துறவி உரு எடுத்துக்கொண்டு அவர்கள் முன் போய் "நீங்கள் முனிவர்களைப்போல் காணப்படுகின்றீர்கள். உங்களைக் கண்டு இக்காட்டிலுள்ள மிருகங்கள் நடுங்கி ஓடுகின்றன. நீங்கள் யார்? இங்கே எப்படி வந்தீர்கள்? நான் எவ்வளவு சொல்லியும் எனக்கு மறுமொழி சொல்லாமல் இருப்பதேன்? இங்கே சுக்கிரீவனென்ற குரங்கரசன் இருக்கிறான். அவனுடைய ஆணைப்

படி இத்துறவி உருவுடன் வந்தேன். நான் காற்றின் மகன், என் பெயர் அனுமான்" எனப் பலவாறு பேசினான். அதைக் கேட்ட இராமன், தம்பி! இவன் எல்லாம் கற்றுப்பேச்சு வல்லவனாகவும் இருக்கிறான். நாம் தேடிவரும் சுக்கிரீவனுடைய அமைச்சன்; இவனுக்கு மறுமொழி கூறு'' என்றனன். இலக்குவன், "அறிஞ! நாங்கள் சுக்கிரீவனையே தேடி வருகிறோம். அவனுடைய எண்ணப்படி நீ எதைச் சொல்லுகிறாயோ அப்படியே செய்கிறோம்'' எனப் புகன்றான். அனுமான் வாலியை வென்று சுக்கிரீவன் அரசாட்சியை அடைவானென்று மகிழ்ந்து "நீங்கள் இங்கே வந்த காரணம் என்ன?" என்று வினாவினான். இலக்குவன் தங்களுடைய வரலாறு முழுவதையும் மிக விவரமாகக் கூறி, "நாங்கள் காட்டிலிருக்கையில் இவருடைய மனைவியை யாரோ ஒரு அரக்கன் எடுத்துப்போயினன். சாபத்தால் அரக்கனான கவந்தன் உங்கள் அரசனான சுக்கிரீவன் சீதையைத்திருடிய அரக்கனை அறிவானெனக் கூறினன். நானும் இராமனும் சுக்கிரீவனைச் சரணமடைந்திருக்கிறோம். இராமன் இப்போது சுக்கிரீவனைத் தலைவனாக அடைய விரும்புகிறான். சுக்கிரீவனுடைய உதவியை நாங்கள் விரும்புகிறோம். தனது குடிகளுள் ஒருவனாகிய சுக்கிரீவனுடைய கிருபையை இப்போது இராமன் வேண்டுகிறான். சோகத்தால் பீடிக்கப்பட்டு புத்தி சிதறியிருக்கும் இராமன் உன்னுடைய அரசனிடம் சரணமடைந்தபடியால் சுக்கிரீவன் இவரிடத்தில் கிருபை செய்யவேண்டும்'' என்றனன். இப்படி இராமன் துக்கிப்பதைப் பார்த்துத் தானும் துக்கமடைந்து கண்களில் நீர் ததும்ப பரிதாபமாகப் பிரார்த்திக்கும் இலக்குவனுடைய சொற்களைக்கேட்டு அனுமான், "வாலி சுக்கிரீவனை ஏமாற்றி அவனுடைய மனைவியை எடுத்துக் கொண்டு துரத்திவிட்டான். நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம் வாருங்கள் சுக்கிரீவனிடம்'' என்று அழைத்தான். அவர்கள் இசைய, அனுமான் குறுங்குறு எடுத்து அவர்களைத் தோளில ஏற்றிக்கொண்டு போனான்.

சுக்கிரீவன் மலயமென்ற மலையில் ஒளித்திருந்தான். அனுமான் அவர்களை இருசிய மூகமலையில் வைத்துவிட்டு, சுக்ரீவனை யடைந்து "அவர்கள் மிகவும் நல்லவர்கள்; இராமனுடைய மனைவியை இராவணன் எடுத்துப்போனான். இராமன் உன் உதவியை விரும்புகிறான். நீ அவனுடன் நட்புச் செய்துகொள். அவன் ஒரு பெண்ணைப்பற்றி உன்னைச்சரணமடைகிறான்'' என்றனன். அதைக்கேட்ட சுக்கிரீவன் அச்சம்

தெளிந்து மனித உருவுடன் இராமனை வந்து கண்டான். அவன், "இராம! உனது பெருமையை அனுமான் கூறினன். உன் நட்பு எனக்கு லாபமே. உனக்கு என்னுடன் நட்புக் கொள்ள விருப்பமிருந்தால் இதோ கையை நீட்டுகிறேன். இதைப்பிடித்துக்கொள். ஏற்ற நிபந்தனைகளைஏற்படுத்திக் கொள்வோம்" என்று கையை நீட்டினான். இராமன் அதைப் பிடித்துக்கொண்டு அவனுடன் அனுமான் உண்டாக்கிய தீயை ச்சுற்றிவந்து அழியாத நட்பைச் செய்து கொண்டனன். இராமனும் சுக்கிரீவனும் ஒருவரை யொருவர் இமை கொட்டாமல் பார்த்து நின்றனர். சுக்கிரீவன் ஒருபெரிய ஆச்சா மரக்கிளையை முறித்துப் போட்டு அதில் இராமனுடன் உட்கார்ந்து, "என் மனைவியைக் கைப்பற்றிய வாலியைக் கொல்லுக" என்றான். இராமன் "அவனை விரைவில் என் அம்பால் கொல்வேன்" என்றனன். சுக்கிரீவன் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்ய வேண்டினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இதுமுதல் கிட்கிந்தா காண்ட ஆராய்ச்சி தொடங்குகிறது. இராமன் பம்பைக்கரையிலிருந்து விரக தாபத்தோடு சீதையை நினைந்து புலம்புகிறதிலிருந்து கதை தொடங்குகிறது. இராமன் இலக்குவனை நோக்கிக் காமவெறியுடன் புலம்புவதை நோக்கின் இப்படியும் ஒருவன் தன் தம்பியிடம் மானமில்லாமல் புலம்புவானா என்று தோன்றுகிறது. இந்த இராமனுடைய காமவெறி இருந்தவாறு என்னே! சீதையும் தானும் அனுபவித்த பலவிதமான இன்பங்களையும், அவள் தன்னை வந்து வலிய அணைத்துத் தந்த இன்பத்தையும் இராமன் நினைந்து ஏங்குகிறான். நினைத்தவாறெல்லாம் காம இன்பங்களை நுகர மிக வசதியான காட்டில் இராவணன் சீதையைப் பிரித்தானே என இராமன் பெருமூச்சு விடுகிறான். முன்னரும் இவன் இவ்வாறே ஏங்கியமை எடுத்துக்காட்டப் பட்டது. சீதையைப்பற்றிப் புலம்பும்போது, "அவள் யாரிடத்திலும் மிருதுவாக வலியப் பேசும் குணமுடையவள்" என்கிறான். இதனால் அவள் காமமிகுதியால் வலிய வந்தணையும் குணத்தோடு தனது காமத்தை யாரிடத்திலும் வலிய உரைக்கும் தன்மையினள் என்பதும் போதருகிறது. இதனால் இராமன் அவள் இராவணனோடு எங்கு ஏமாந்து சோரம் போய்விடுவாளோ என அஞ்சினன் போலும்! இராமன் எதையும் விரும்பாமல் சீதை இன்பத்தையேஎவற்றினும் பெரிதாக நினைக்கிறான். அவனுக்கு இந்திரலோக வாழ்வும்

அயோத்தி அரசும் கூடப் பெரிதாகத் தோன்றவில்லை. இலக்குவன் முன்னர் பேசியதைப் போலவே இப்போதும் சீதையிடம் அதிக அன்பு கொள்ளாதிருக்கும்படி இராமனிடம் கூறுகிறான்.

அதன்பின் வால்மீகி கூறுவதை ஒவ்வொருவரும் கவனித்துப்படிக்க வேண்டுகின்றோம். ஏனெனில், அது முன்னர் நாம் தசரதனைப்பற்றி எடுத்துக் கூறியசெய்திகளை நன்றாக வலியுறுத்துவனவாக இருக்கின்றன. அத்தகைய வால்மீகி கூற்று வருமாறு:—"இராமன் தன் நடையால் எல்லோருடைய மனதையும் கவர்ந்தாலும் இலக்குவன் அவனுடைய அழகில் தன் மனத்தை நாட்டிச்சிதறவிடாமல் பின் சென்றான். இதனாலேயே சுமித்திரை இலக்குவனிடம் "குழந்தாய்! இராமனுடைய நடையழகைக் கண்டு மயங்கி மோசம்போகாதே!" என்று நல்லறிவுறுத்தினாள். இதைக்கூர்ந்து நோக்குவார்க்கு தசரதன் ஏன் இராமனிடம் மற்றைய பிள்ளைகளைக் காட்டிலும் அதிக அன்பும், ஆசையும் கொண்டிருந்தான் என்பதும், அவ்வாசை காரணமாகவே அவன் சத்தியத்தையும் நியாயத்தையும் கைவிட்டுப் பரதனுக்குரிய அரசாட்சியை இராமனுக்குக் கொடுக்கப் பல்லாற்றானும் முயன்றதோடு இராமனைத் தன் பக்கத்திலேயே வைத்துக்கொள்ள ஆசைப்பட்டு அது கிட்டாமையால் உயிரையும் துறந்தான் என்பதும், இத்தனைக்கும் காரணமாயது தசரதன் இராமனிடம் ஆண் மையல் கொண்டு காம மிகுதியால் மார்போடணைத்தல் முதலிய செயல்களை வெளிப்படையாகச் செய்துவந்ததே என்பதும், இராமனும் அச்செயல்களுக்கெல்லாம் விருப்பத்தோடு இணங்கி இருந்தனன் என்பதும், இதை நிலை நாட்டுவான், நாம் முன் முன்னர் எடுத்துக் காட்டியுள்ள பல சான்றுகளும் தெள்ளிதின் விளங்கா நிற்கும். வால்மீகியார் நாம் ஊகித்தெழுதிய உண்மைக்குச் சான்று இங்கே தெளிவாகக் குறித்தார்.

இராமனும் இலக்குவனும் மலைமேல் ஏறி வருவதைக் கண்ட சுக்கிரீவன் அனுமான் முதலியோர் அஞ்சி மலைக்கு மலை தாவித்தாவி ஓடுகின்றனர். இதனால் அவர்களுடைய வீரமும் ஆண்மையும் இத்தன்மையன என அறியலாம். பிறகு அவர்கள் வேறு எண்ணங்கொண்டு பழையபடிஇருசிய மூக மலையிலிருந்தால் வாலியால் கொல்லமுடியாதென்பதே. வேற்றிடங்களிற் சென்றால் வாலீ சுக்கிரீவனைக் கொன்றுவிடுவான். அதனாலேயே அவர்கள் மறுபடி அம்மலையை

அடைந்தனர். இதனையே அனுமனும் கூறுகிறான். அனுமன் சுக்கிரீவனுடைய ஏவலால் இராமனையடைந்து தன் வரலாறு கூறுகிறான். அவன் பேச்சைக்கேட்ட இலக்குவன், "நாங்கள் சுக்கிரீவன் எதைச் சொல்லுகிறானோ அப்படியே செய்கிறோம். நாங்கள் சுக்கிரீவனைச் சரணமடைந்திருக்கிறோம். இராமன் உன்னுடைய அரசனான சுக்கிரீவனிடம் சரணமடைந்தபடியால் சுக்கிரீவன் கிருபை செய்யவேண்டும்" என்றுகண்ணும்கண்ணீருமாகக்கூறுகிறான்இதைப்பார்த்தால் அப்போது இராமனும் இலக்குவனும் இருந்த பரிதாபகரமான நிலைமை புலனாகிறது. இப்படி பேசும்போதும் கூட அவர்களுடைய குறும்புத்தனம் விளங்குகிறது. அனுமன் அமைச்சனாகையால் அரசனான இராமன் அவனுடன் நேரே பேசக் கூடாதாம்! அதனால் இலக்குவனைப் பேச ஏவுகிறான். இலக்குவன் பேச்சோடு பேச்சாக "தனது குடிகளுள் ஒருவனாகிய சுக்கிரீவனுடைய கிருபையை இப்போது இராமன் வேண்டுகிறான்" என்று கூறுகிறான். இது ஆரியருடைய அகம்பாவத்தையே உணர்த்தும்! எங்கேயோ ஒரு மூலையில் கிடக்கும் அயோத்திக்கரசன் உலகமெல்லாம் தன் ஆட்சிக்குட்பட்டது என்று கூறுகிறான். இது ஒரு மிகச்சிறிய வகுப்பினரான ஆரியருடைய குருவான சங்கராச்சாரியார் தைரியமாகத் தம்மை "உலககுரு" என்று சொல்வதை ஒக்கும். இது ஆரியர் பொதுத் தன்மை போலும்! இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாச ஐயங்காரும் பக்கம் இருப்தில் "கோசல தேசத்திற்கு மாத்திரம் அரசனான இராமனுக்கு சுக்கிரீவன் குடி என்பது எப்படி?" என்று குறித்திருக்கிறார். இது மிகப் பொருத்தமே.

அனுமான், சுக்கிரீவன், வாலி இவர்களெல்லோரும் குரங்கள்தானா என்று ஆராய்ந்தால், அவர்கள் குரங்குகள் அல்லர்; அல்லர். அவர்கள் அனைவரும் மனிதர்களே. அவர்கள் அனைவரும் தமிழ் மக்களே. அவர்களை வேண்டுமென்று ஆரியர்கள் குரங்குகள் என்றழைத்தனர். அவர்கள் மலையை அடுத்துள்ள இடத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் உண்மையில் குரங்குகளாக இருந்திருப்பரேல் செய்தற்கரிய வீரச் செயல்களையெல்லாம் எவ்வாறு செய்திருக்கமுடியும்? மனிதரினும் மிக அறிவுடன் எவ்வாறு விளங்கியிருக்கமுடியும்? பேச்சுத்தான் ஏது? ஆதலின் அவர்கள் மனிதர்களே. அநியாயமாக அவர்களை ஆரியர் குரங்குகள் என்றழைத்தனர் அவர்கள் மனிதர்களே என்பதற்குத் தகுந்த ஆதாரம் வால்

மீகியே கூறுகிறார். அதாவது, அனுமான் இராமன் முன் தோன்றியபோது மனித உருவுடனேயே தோன்றினான் என்று வால்மீகி கூறுகிறார். மேலும் சுக்கிரீவன் இராமன் முன் தோன்றியபோதும் மனிதனாகவே தோன்றினான் என அவர் கூறுகிறார். அவர்கள் குரங்குகள்தான், ஆனால் நினைத்த உருவத்தை எடுக்கவல்லவர்கள், அத்திறமையால் மனித உருவெடுத்துத் தோன்றினர் என்னில், அவர்கள் உண்மையில் குரங்குகளானால் மனித உருவத்தை அப்போது எடுக்கவேண்டிய அவசியமென்னை? ஒன்றுமில்லையே! மேலும் அவர்கள் இராமனிடம் நம்பிக்கையை உண்டுபண்ணவேண்டுமென்றால் தங்களுடைய இயற்கை உருவோடன்றோ வந்திருக்கவேண்டும். அனுமானாவது இராம இலக்குவனைச் சோதிக்கமாறுவேடம் பூண்டனனென்னில் சுக்ரீவன் மாறுவேடம் கொள்ள வேண்டிய அவசியம் ஒரு சிறிதுமில்லையே. இதனால் வாலி சுக்கிரீவன் முதலியோரை மக்களெனவே சொல்வதோடு அவர்களைக் குரங்குகளென்றது ஆரியர்தம் பொறாமையாலே ஏற்பட்ட குரங்குச் சேட்டையே என்று அறிஞர் ஐயம் ஓர் சிறிதுமில்லாமல் துணிந்து தெளியலாம்.

அனுமான் சுக்கிரீவனுடன் "இராமனுடைய மனைவியை இராவணன் எடுத்துப் போயினன்" என்று கூறுகிறான். இது அவனுக்கு எப்படித்தெரியும்? இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அது வருமாறு:-(பக்கம் 22) "எடுத்துப் போனவன் இன்னாரென்று தெரியாதென்று இலக்குவன் சொன்னான். அனுமானுக்கு இராவணனென்று எப்படித் தெரியும?", இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

இராமன் பம்பைக் கரையிலிருந்து புலம்பியதை வேறு விதமாகவும, மிகச்சுருக்கமாகவும் கம்பர் கூறுகிறார். மேலும் இராமன் பம்பையில் மூழ்கி அன்றிரவைக் கழித்து மறுநாள் மலையில் ஏறிச்சென்றதாகவும் கூறுகிறார். சுக்கிரீவன் முதலியோர் அஞ்சி மலைக்கு மலை ஓடியதை அவர் கூறவில்லை. மற்றும், அவர்களோடு அனுமானும் அஞ்சி ஓடியிருக்க, கம்பர் அவனை அஞ்சாதவனைப்போலக் காட்டுகிறார்.

சுக்கிரீவன் அனுமானை ஏவியதையெல்லாம் மறைத்துவிட்டு அனுமான் தானாகவே இராமனையடைந்ததாகக் கம்பர் கூறுகிறார். மேலும் அவன் துறவியுருக்கொண்டு சென்றனனாக, இவர் மாணவனைப் போன்ற (பிரமசாரி) உரு

வோடு சென்றனன் என்கிறார். ஆனால் பின்னர் பேச்சுக்காவில் அனுமான் தான் சுக்ரீவன் ஏறுபோல் வந்ததாகக் கூறுகிறான். இது உபசாரப் பேச்சேயாம்.

இராமன் அனுமானோடு பேசுதல் அழகன்றென இலக்குவனைப் பேசச்சொல்லியதையும், இலக்குவன் பலவாறு புலம்பி இராமனும் தானும் சுக்கிரீவனிடம் சரணம் புகுந்து பலமுறை "இராமன் சுக்கிரீவனிடம் சரணம்புகுந்தனன்" என்று கூறியதையும் கம்பர் முற்றிலும் மறைத்து விட்டு, இராமன் அனுமானை யாரென வினவியதோடு சுக்ரீவனிடம் தன்னை அழைத்துப் போகச் சொன்னதாகவும், அனுமன் இராமனிடம் சரணம் புகுந்ததாகவும் கூறுகிறார். இதெல்லாம் இராமனைப் பெருமையுறக் காட்டி மகிழவே; அனுமனைச் சுக்கிரீவனுடைய உத்தரவில்லாமலே வந்தானென்றது அனுமனுடைய பெருமையைக் காட்டி மகிழவே. இவ்வாறெல்லாம் கம்பர் கதையை மாற்றியெழுதியமை அவர்தம் இழிமதியையே காட்டும்.

முன்னர், புரோகிதருடைய உதவியில்லாமலே இராமன் தசரதனுக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலிய செயல்களைத் தானே தம்பியோடும் செய்தனன் என்று வால்மீகி கூறிய இடத்தைக் கம்பர்மாற்றி, இராமன் வசிட்டனைப்புரோகிதனாகக் கொண்டு அவைகளைச் செய்தான் என்று கூறிப் புரோகிதரின் இன்றியமையாமையை நிலை நாட்டிய செய்தியை விளங்க எடுத்துக் காட்டினோம். இவ்விதமான தீய பழக்கங்களையெல்லாம் தமிழுலகத்தாருக்கு எடுத்தியம்பக் கம்பரொருவர் பிறந்தார்! அனுமான் இராமனையும் இலக்குவனையும் மலைமேல் தூக்கிச் சென்றனன். சுக்கிரீவனிடம் அங்கே அவனைக் காணாமல் அவர்களை அங்கே வைத்து விட்டு அவனைத் தேடிக்கண்டு அழைத்து வருகிறான் என்று வால்மீகி கூற, அதற்குமாறாகக் கம்பர் அனுமான் அவர்களை வணங்கி விடைபெற்று சுக்கிரீவனை அழைத்து வருகிறேன் என்று போய் அவனைக்கூட்டி வருகிறான் என்று கூறுகிறார். ஏனெனில் இராமன் சுக்கிரீவனிருக்கும் இடத்துக்குப் போனால் அவனுக்குப் பெருமை குன்றுமாம்! கண்ணும் கண்ணீருமாக அலைந்து திண்டாடிக் கதறி சுக்கிரீவனிடம் அடைக்கலம் புகுந்த இராமனுக்குப் பெருமையென்ன பெருமை? அனுமான் "இராமன் உன்னைச் சரணமடைந்தான். நீ அவனோடு நட்புக்கொள்" எனக் கூறுகிறான் என வால்மீகி கூற, கம்பர், "இராமன் உன்னோடு நட்புக்கொள்ள

விரும்புகிறான். அவனைச் சரணமாகச்சேர்'' என்று அனுமான் கூறியதாகக் கூறுகிறார். எங்கெங்கெல்லாம் இராமனுக்கு இழுக்கு வருமோ அங்கங்கெல்லாம் கதையை மாற்றி, இராமனை மிக உயர்வாக உலகத்தாருக்குக் காட்டி வருகின்றார் கம்பர்! அதற்காகவே அவர் வால்மீகி எவ்வாறு இராமனும் சுக்கிரீவனும் நட்புக்கொள்கின்றனர் என்று கூறியதையெல்லாம் மறைத்துவிட்டு, சுக்கிரீவன் இராமனுடன் அடைக்கலம் புகுந்தான், இராமன் மனமிரங்கி அவனைக் காப்பதாக வாக்களித்தான் என்று துணிந்து கூறுகிறார். உண்மையில் சரணமடைந்தவன் இராமனேயன்றோ?

கம்பர் ஆரியப் பார்ப்பனருடைய ஆதிக்கத்தை தமிழ் நாட்டில் வேரூன்றச் செய்வதில் மிக முயன்றார் என்றும், கம்பராலேயே தமிழ் மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி மிக அற்றது என்றும், ஆதலின் அவர்தான் தமிழ் மக்களுக்கு மானக்கேட்டைவிளைத்து சுயமரியாதையற்றவர்களாகத் தமிழ்மக்களிற் பெரும்பாலோர் ஆகும்படி செய்த கோடரிக்காம்பாம் கொடும்பாவியென்றும் நாம் பல இடங்களிலும் எடுத்துக் காட்டிவந்துள்ளோம். இங்கே கம்பர் ஓர் பாடல் பாடியிருக்கின்றார். அதை நினைக்க நினைக்க அறிஞர் நெஞ்சம் துன் துன்புறுதிராது. எமது நெஞ்சம் கொதிக்கின்றது! பார்ப்பனன் ஒருவன் மிகச்சிறு பிள்ளையாகவிருந்தாலும், மற்றைய வகுப்பில் பிறந்தோரனைவரும் சிறுவரேயாயினும் சரி, அன்றி வயது முதிர்ந்த கிழவரேயாயினும் சரி, அவனைக் கும்பிட வேண்டுமாம்! ஆனால் அவன் மற்றைய வகுப்பாரைக் கும்பிடுதல் சாத்திரங்களுக்கு மாறுபட்டதாம்! இதனை இராமன் வாயினால் கூறச்செய்து உலகினருக்குக் கம்பர் நிலை நாட்டுகிறார். எவ்வாறெனில் கூறுதும். அனுமான் ஓர் பார்ப்பனச் சிறுவனுடைய உருவத்தை எடுத்துக்கொண்டு இராமனைக் காண்கிறான். இராமன் அவனைப் பார்ப்பனச் சிறுவனென்றே உணர்கிறான. இராமனுடைய வரலாற்றை இலக்குவன் கூறினன். உடனே அனுமான் இராமனுடைய அடிகளில் வீழ்ந்து வணங்குகிறான் (இது வால்மீகி கூறாதது.) அப்போது இராமன் பார்ப்பனச் சிறுவன் அரசன் மகனாகிய தன்னை வணங்கியமையால் நெஞ்சம் துணுக்குற்று, ''ஐயா! தகாத செயலைச் செய்தீரே'' என்று கூவினனாக அனுமான் ''நீ எண்ணுமாறு நான் பார்ப்பனனல்லன்; குரங்கு'' என்று மறுமொழி கூறினன். இங்ஙனம் கம்பர் கூறுகிறார். அக்கவி வருமாறு:—

"தாழ்தலும், 'தகாத செய்ததென்னை
நீ? தருமம் அன்றால்
கேள்வி நூல் மறைவலாள!' என்றனன்;
என்னக்கேட்ட
பாழியம் தடந்தோள் வீரமாருதி,
'பதுமச்செங்கண்
ஆழியாய் அடியேன் தானும் அரிக்குலத்
தொருவன்' என்றான்."

இதன் பொருள் வெளிப்படையே. ஆயினும் அது வருமாறு:—"அனுமான் தன்னை வணங்கலும் இராமன் அனுமானைப் பார்த்து கல்வி கேள்விகளில் சிறந்த அந்தணனே! நீ உன் குலத்துக்குத் தகாத செயலைச் செய்துவிட்டாய்! இதன் காரணம் என்னை? அரசனாகிய என்னை அந்தணனாகிய நீ வணங்கியது தரும சாத்திரங்களுக்கு ஏற்றதன்று" என்று வினாவினான். அதனைக்கேட்ட வலிமை பொருந்திய பருத்த தோள்களையுடைய வீரனாகிய அனுமான், "செந்தாமரைக் கண்ண! சக்கரம் தரித்தவனே! அந்தண உருவுடன் இருக்கும் நான் உன்னை வணங்கியதற்காக வருந்தாதே! ஏனெனில், நான் அந்தணன் அல்லேன். நான் குரங்குக்குலத்தைச் சேர்ந்தவன்" என்று மறுமொழி கூறினான்.

இதனைப் படித்தோரும் இதனைப் படிக்கக் கேட்போரும் இந்நூலை திருமால் புராணமென நம்பியோராயின் அவர்கள் பாடு யாது? அதற்குமுன்னர் அவர்கள் பார்ப்பனரைக் கும்பிடாதவராயிருந்தாலும், தெய்வத்தின் தோற்றமாகிய இராமனே பார்ப்பனரை வணங்கினான், ஆதலின் நாமும் இதுமுதலாவது பார்ப்பனரைக் கும்பிடவேண்டும். பார்ப்பனச் சிறுவன் உருவுடன் தன்னை வணங்கிய அனுமானைத் தகாத செயல செய்தாய்" என்று இராமன் கண்டித்தான். ஆதலின் பார்ப்பனன் சிறுவனாயிருந்தாலும் நம்மைக் கும்பிடல் கூடாது. அதுநமக்குப்பெரும் பாவத்தையும் கேட்டையும் தருவதாகும். பார்ப்பனச்சிறுவனாயிருந்தாலும் நாம் கும்பிட்டால் நமக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று இவ்வாறெல்லாம் சிந்தித்து அறிவற்ற வழிகளில் நடக்க முயலுவார்கள் அன்றோ? இவ்விதமான சுயமரியாதையற்ற பல செயல்கள் நிகழ்வதை நாம் இக்காலத்தில் கண்ணாரக் காண்கின்றோம். என்னையெனில், கூறுதும் பார்ப்பனரல்லாதார் தமது இரு கரங்களையும் குவித்து வணங்கவும், பார்ப்பனன் தனது

இடது கையைமட்டும் தூக்குகின்றனன். அதைக்கண்ட பார்ப்பனரல்லாதான் மகிழ்ந்து போகின்றனன். பார்ப்பனன் தன்னைத் தொடவந்தால் "நான் சூத்திரன், தொடாதீர்" என்கிறான் இவ்வித சுயமரியாதை அறிவின்மைக்குக் காரணம் கல்வியின்மையே, வேறிடத்தில் இதனை விரித்துரைப்போம்.

தமிழ் உலகில் கல்வியறிவில்லாத மக்களே பெரும்பாலோர். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர் படியாதவர்கள். படித்தவர்களாகிய மீதிஐந்துபேரிலும் நாலரைக்குப் மேற்பட்டவர் பார்ப்பனராகவே இருக்கின்றனர். ஆதலின்பார்ப்பனரல்லாத மக்களில் படித்தாரெனப்பட்டார் 100-க்கு ஒருவருமில்லாமல் அரைப்பெயரே இருக்கின்றனர். இவ்வாறாகப் படியாதவரே மிதமிஞ்சி தமிழ்நாட்டில்வாழும் மக்களில் 10 -க்கு நாலரைப் பெயர் பார்ப்பனராகவும், மீதியுள்ள தொண்ணூற்றைந்தரைப் பெயர் பார்ப்பனரல்லாதவராகவும் இருக்கின்றனர். அவர்களுள் பார்ப்பனர் அனைவரும் படித்தவர்கள்; பார்ப்பனரல்லாதார் அனைவரும் பெரும்பான்மை படியாதவர்கள். படித்தவர்களாகிய சிலருள்ளும் ஒரு சிலர் உண்மைப் படிப்பில்லாதவர்களாய் பார்ப்பனரைத் தெய்வம்போல நினைந்து அவர்களுடைய வால்பிடித்தலையும் கோடரிக்காம்புகளாக இருக்கின்றனர். இந்நிலையிலுள்ள பார்ப்பனரல்லாத மக்களின் பரிதாப நிலைதானென்னே! பார்பனரல்லாதாருள் பரவி வரும் இச்சிறு கல்வியறிவும் சில காலமாகத்தானே தோன்றியிருப்பது? சுயமரியாதை உணர்ச்சி பெற்றுப்படிக்க முன்னுக்கு வரும் மக்களுக்கு இப் பார்ப்பனர் சூழும் கேடுகள் சொல்லும் அளவினவோ? எங்கெங்கே போனாலும் பார்ப்பனர்களே! கல்வித்துறைகள், கடைத்துறைகள், கச்சேரித்துறைகள், கட்சேரித்துறைகள் எங்கெங்கு போனாலும் அங்கங்கெல்லாம் பார்ப்பனரல்லாதவருடைய முன்னேற்றத்தைக் குலைக்கக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும்பார்ப்பனர் மேலேயேவிழவேண்டியதாக இருக்கிறது. பார்ப்பனருள்ளும் ஒரு சிலர் வேறுபாடு காட்டாமல் ஒழுகுகின்றனரே என்னில், அவர்களையும் கிட்ட நெருங்கிப்பார்த்தால் உண்மை வெளிப்படாதிராது. நஞ்சற்ற தேளும் உளதாமோ? மக்களுடைய முன்னேற்றத்திற்கு மிகவும் பாதுகாப்பு உளதாகும் என்று கருதப்படுகிற இக்காலத்திலேயே இத்துணை இடையூறுகளென்றால், பாதுகாப்பு ஒரு சிறிதும் இல்லாதிருந்த பண்டைக்காலத்தில் பார்ப்பனரல்லாதார் பரிதாபநிலை எவ்வாறிருந்திருக்க வேண்டும்? அந்தோ! அதனை நினைக்க நினைக்க நெஞ்சம் புண்ணாகின்றதே! அறிஞரே! சிந்தியுங்கள்! படிக்க முயன்ற பார்ப்பனரல்

லாதார் அனைவரும் கொடுமையாக நடத்தப்பெற்றனர். வடமொழி தேவர்பாடையாதலின் அதனைத் தமிழ்மக்கள் ஓதாதபடி மிகவும் கொடுமையாகக் கண்டிக்கப் பெற்றனர். அதிலும் வேதமோதுவதை எவரேனும் கேட்டு விடுவரேல் அவருடைய காதின் கேள்வியுணர்ச்சியைத்தைக் காய்ச்சி விடுதல் போன்ற கொடுஞ் செயல்களாற் பறிக்கப்பெற்றது! இக்காலத்திற்போலவே அக்காலத்திலும் கல்வியறிவு பெற்றோர் ஒருவர் இருவரும் பார்ப்பனருக்கு அஞ்சியோ, பெருமைபெற நினைந்தோ, பொருள்பெற நினைந்தோ குலத்தைக் கொடுக்கும் கோடரிக் காம்புகளாய் அலைந்து வந்தனர். அதனால் அக்கோடரிக்காம்புகள் நன்மதிப்பையும் பெறலாயினர். அத்தகையாருள் தலை சிறந்தவரே கம்பர். கம்பர் தமது உடன் பிறப்பாளராகிய பார்ப்பனரல்லாதாருக்கு இழிவைஉண்டுபண்ணுமாறும், பார்ப்பனருக்குஏற்றம் விளைக்குமாறும் இராமாயணக் கதையைப்பாடி, தமிழ் மக்களின் பகைவனாகிய கொலைஞன் இராமனைத் தமிழ்மக்களே தமது தெய்வமென நினைத்து வழிபாடியற்றுமாறும், புரோகிதர் சிறப்பு, பார்ப்பனர்பெருமை இவைகளைத்தமிழ்மக்கள் உண்மைக்கு மாறாக உணர்ந்துசுயமரியாதையற்றுத் தமது நெற்றி வியர்வை நிலத்தில் விழத்தேடிய அரும்பாட்டால் வந்த பொருளை அந்நியனும் பகைவனும் தமிழ் மக்கள் கேட்டில் கண்ணுங்கருத்துமாக இருப்பவனுமாகியதான் வாழ, பார்ப்பான் காலில் வீழ்ந்து கும்பிட்டுப் புகழ்ந்து அப்பொருளை எடுத்துக்கொண்டு போகும்படி குறையிரந்து நிற்குமாறும் செய்துவிட்டனரே! பரிதாபம்! பரிதாபம்!

பார்ப்பனர் தமது நூல்களை வானமளாவப் புகழ்வர். நெடுக ஊரூராகச்சென்று, "இப்பண்டிதருக்குச் சமானம் இவ்வுலகமுழுதுமே இல்லை; இவரைப்போலும் தமிழ் கற்றோர் எவ்வுலகத்திலும் இரார் தமிழ்நாடு உய்யவே இவரைக் கடவுள் தோற்றுவித்தார்" என்று எடுத்தோதி ஒன்றுமறியா மக்களை ஏமாற்றுவர். மக்களும் அதனை உண்மையென மயங்கிப்பொய்யையே மெய்யாகக் கருதி அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உண்மையாக உழைக்கும் தமது உடன் பிறந்தாரை நம்புவதற்கும் அஞ்சுவர். பார்ப்பனர் ஒன்றுமறியாத பேர்களைப் பணம் கொடுத்துப் பல இடங்களுக்கும் உடனழைத்துச் சென்றுபுகழ்ந்துநிற்பர். பணப்பித்தேறியோர் ஆகிய சில பண்டிதர் பணம் பெறும் வரையேனும் அப்பார்ப்பனர் பின் அலைந்து தமது உடன் பிறப்பாளருக்குக்கேடு சூழ்ந்து

பேசுவர். தமது சகோதர துரோகிகளாகிய இவர்கள் உலக சகோதரத்துவம் பேசிப்பேசிப் பொதுமக்கள் முன்னிலையில் தமது உடன் பிறந்தோருக்கே குழிதோண்ட முயல்வர். இவ் விதபரிதாப காலம் என்றுநீங்குமோ? அவர்கள் என்றுபொய்ந் நிலைவிடுத்து மெய்ந்நிலைக்கு வருவரோ? இவர்கள் உண்மையை உணர்ந்திருந்தும் பணம் புகழ் முதலிய அற்பப் பயன்களைக் கருதித் தவறி ஒழுகும் இத்தவறான ஒழுக்க நிலை இவர்களை விட்டு என்று நீங்குமோ? உண்மைக்குழைக்க அவர்களும் முன் வருவார்களேல் நமது நாடு எவ்வளவு விரைவில் முன்னேற்ற மடையும்?

பார்ப்பனர்கள் பெரிய அரசியல் அதிகாரங்களில் இருப்பதால் பார்ப்பனரல்லாதார் உயர்நிலைக்கு வருவதைத்தடுத்து, தமது இனத்தாரையே ஒன்றுக்கும் உதவாரேனும் முன் நிலைக்கு ஊக்கி வருகின்றனர். பார்ப்பனரல்லாதாருள் பெரும் பட்டங்கள் பெற்றுத் தகுதியுடையவர்களாய்பலர்இருந்தும் அவர்களுடைய உரிமை யெல்லாம் புறக்கணிக்கப்பெறுகின்றன. யாரேனும் ஒருவர் உயர்ந்த நிலையில் வந்தால் அவருக்கும் உயர்ந்த நிலையிலிருக்கும் பார்ப்பனர் அவரை வேலையிலிருந்து தள்ளுவதற்கு முயல்கின்றனர். முடியாது முனையின் தமது அதிகாரத்தால் அப்பார்ப்பனரல்லாதார்பார்த்து வரும்வேலையே தேவையில்லை யென்பதாகத் தீர்மானித்து அவரை வீட்டுக் கனுப்பி விடுகின்றனர். இதற்கு நாம் தருந்த ஆதாரங்கள் பலகூற இயலும். இப்போது நமது நாட்டில் பெரிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவிக்கும் மேற்பட்ட பதவியிருந்தாலும் திறம்படப் பார்க்கச் சட்ட ஆற்றலுடையபெரியார் உளர். அவர் இவ்விந்தியா முழுதிலுமே கூட தமக்குச்சட்டக்கல்வியில் நிகரில்லை யென்னுமாறுபுகழ்பெற்றவரே. அவருக்கு ஒரு ஜில்லா ஜட்ஜ் பதவி கூடக் கிடைத்தல் அரிதாக இருக்கிறது. அவரிடம் உள்ள பெருங்குற்றம் ஒன்றே ஒன்று; அது அவர் பார்ப்பனரல்லாத வராகப் பிறந்ததே. அவர் மட்டும் பார்ப்பனராக இருந்திருப்பாரேல், அவர் இதற்குள் மிக உயர்ந்த நிலையில் இருப்பர் என்பதற்கு என்னே தடை? இங்ஙனமாகவே பார்ப்பனர்கள் தமக்குப் பெரும்புகழ் தேடிய கம்பரைப் புகழத் தொடங்கினர். அவரைக் காட்டிலும் ஆயிர மடங்கு இனிமையும் அழகும் தகுதியோடமைந்த கவிவாணர்களுடைய நூல்கள் பல இருந்தாலும் அவைகளை யெல்லாம் புகழாமல் கம்பருடைய இராமாயணம் ஒன்றையே மிகப் புகழத் தொடங்கினர். அதனைப் புகழ்ந்து பொதுமக்களிடைப் பரப்பினால் தானே

பொதுமக்கள் பார்ப்பன நடையை கம்பர் காட்டும் பெருமைகளில் ஈடுபட்டுத்தமது பொருளை கொடுத்துக் காலில் வீழ்ந்து கும்பிடுவார்கள்! பார்ப்பனர்கள் கம்பரைக் கல்வியிற் பெரியார் என்றனர். ''கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'' என்றது போன்ற சில சொற்றொடர்களைப் புனைந்து பரப்பினர் அவருக்குக் கவிச்சக்கரவர்த்தி என முடியும் புனைந்தனர்.

கம்பர் பார்ப்பனர் அடிமையாகவே இருந்தார் என்பதற்கு அவர் தமது இராமாயணத்தை அரங்கேற்றியதே தக்கவாறு சான்று பகரும். அவர் தமது நூலை அரங்கேற்றியது திருவரங்கத்திலேயிருந்த வைணவப் பார்ப்பனர் முன்னிலையில், அவ்வைணவப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியைப்பாருங்கள். அவர்கள் மட்டும் அந்நூலைக் கேட்டுத்தலையசைத்துப் புகழ்ந்தால் பார்ப்பனரல்லாதாருள் சிறு பகுதியினராக இருக்கும் வைணவர்கள் மட்டுமே அந்நூலை ஏற்றுப் பாராட்டிப் படிப்பார்கள். அதற்காக அவர்கள் கம்பரைச் சிதம்பரம் போய் அங்குள்ள தில்லைவாழந்தணர்களிடம் ஒப்பம் பெற்று வரும் படித்தூண்டினார்கள். ஏனெனில் தில்லைவாழந்தணர்கள் பார்ப்பனரல்லாத சைவ மக்களால் தெய்வம் போல் நன்கு மதிக்கப்பெற்று வழிபடப் பெறும் நிலையினர். அவர்கள் ஒப்பம் தந்தால் சைவப் பார்ப்பனரல்லாத உலகமும் இராமாயணத்தைப் பாராட்டிப் படிக்கத் தொடங்கும். அதனால் தமிழுலக முழுவதுமே இராமாயணத்தைப் படிக்கும். அதனால் ஆரியரைத் தமிழ் மக்கள் தெய்வம்போல் மதித்துத்தமது பொருளைக் கப்பமாகக் கட்டி மகிழ்வர்! இவர்கள் செய்த சூழ்ச்சியும் நன்றாகப்பலித்தது. இராமன் தெய்வத்தன்மையும், சீதை கற்பும், தசரதன் பெருமையும், சுக்கிரீவன் விபீஷணன் இவர்களுடைய புகழும் இதுவரைத் தமிழுலகில் தலைசிறந்து விளங்குவதாயிற்று. இடையிடையே தோற்றிய மெய்யறிஞராம் தமிழ்ப்புலவர் சிலர் இராமன் தமிழரைக் கெடுத்த ஆரியன் என்பது ஆதியாகிய உண்மைகளை எடுத்தோதி வந்தனர். வடமொழியிலிருந்த வால்மீகி இராமாயணத்தைப்பல ஆரியரே தமிழில் மொழி பெயர்த்துதவினர். அதனால் இராமாயணத்தின் உண்மைத் தன்மை அறிஞருக்குப் புலப்படுவதாயிற்று. அதனால் அவர்கள் தமது உடன் பிறந்தாருக்குத்தாம் கண்ட உண்மைகளை எடுத்தியம்புவாராயினர். அதனால் இப்போது இராமாயணம் தமிழ்மக்களைக் கொலை செய்தவனாகிய இராமனுடைய வரலாறு என்றும், இராமன் கொடிய வஞ்சகன் என்றும், சீதை கற்பில்லாதவள் என்றும், தசரதன் ஆண்மை

யில் மக்களிற் பக்க பாதம் செய்த கொடியோனென்றும், சுக்கிரீவனும் விபீஷணனும் சகோதரத் துரோகிகளென்றும், இத்தகைய கொடியோரை மிக நலம் படைத்தவர் போலக் கம்பர் காட்டி ஏமாற்றி விட்டார் என்றும், இவை முதலிய உண்மைகளைத் தமிழ் மக்களிற் பெரும்பாலான மெய்யறிவாளிகள் உணரத் தொடங்கி, தாம் கண்ட மெய்ம்மைகளைப் பொது மக்களுக்கும் எடுத்தியம்பி மெய்த் தொண்டு ஆற்றி வருகின்றார்கள். கெட்டிக்காரன் பொய்யும் எட்டு நாளையில் வெளிப்படுமன்றோ! எத்தனை நாளைக்குத்தான் மேலும் நிற்கும்: பொய்ம்மையே நெடுநாளைக்கு நில்லாமல் அழிந்து படும். மெய்ம்மையே சில காலம் மங்கியிருந்தாலும் இரவி ஒளிபோலத் தோன்றி என்றும் நின்றுலவும்.

---

# இரண்டாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 6 முதல் 12 முடிய)

**சுக்கிரீவன்** மறுபடியும் இராமனை நோக்கி, "நீ இங்கு வந்த காரணம் அறிவேன்; ஒரு அரக்கன் சீதையை எடுத்துப்போனதையும், சடாயுவைக்கொன்றதையும் அறிந்தேன். சீதையை எவ்வாறாவது கொண்டு வந்து சேர்ப்பேன். உங்கள் பெயரைக்கூவிக்கொண்டு ஓர்பெண் இராவணனுடைய மடியில் இருப்பதைப் பார்த்தேன். அவள் தன் மேலாடையில் தன் நகைகளை முடித்து போட்டாள்" என்று அவைகளைக் காட்டினான். இராமன் அவைகளைக்கண்டு கண்ணீர் வடித்து அலறிக் கீழே விழுந்தான். அவைகளை அடிக்கடி மார்போடணைத்து பெருமூச்சு விட்டுக்கண்ணீர் பெருக, "தம்பி! இவை சீதையின் நகைகளா, பார்த்துச்சொல். கண்ணீர் வெள்ளத்தால் என் கண் மறைந்து பார்க்க முடியவில்லை" என்றான். இலக்குவன், "அண்ணா! நான் அவளுடைய பாத

சேவை செய்திருந்தவனாகையால் அவளுடைய கால்களில் அணிந்திருந்த சிலம்புகளையே அறிவேன். தோளிலும், தலையிலும் அணிந்திருந்த நகைகளை அறியேன்'' என்றான். இராமன், ''குரங்கரசே! என்னுடைய மனைவியை எடுத்துப்போன பகைவன் இன்னானென்று சொல்'' என வினவினான். சுக்கிரீவன் கண்ணீர் வடித்து, ''அந்த இராவணனைப்பற்றிய செய்தி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவனைக் கருவறுப்பதில் உழைப்பேன், நீ வருந்தாதே. நானும் மனைவியை இழந்தவனே'' என்றனன். இராமன் துணியால் கண்ணீரைத்துடைத்துக் கொண்டு, சுக்கிரீவனை த தழுவி ''உன்னை நண்பனாகப்பெற்றது என் புண்ணியமே. இராவணனைத் தேடிக்கண்டுபிடி. உனக்கு வேண்டியதைச்சொல், நான் செய்து முடிக்கிறேன்'' என்றான். சுக்கிரீவன், நமது நட்பு வெகுநாளிருக்க வேண்டியது, வாலியுடன் பகைத்து வாழ்கின்றேன்'' என்றனன். இராமன், ''அந்தப்பாவியை என் அம்பால் கொல்கிறேன்'' என்றான். சுக்கிரீவன் ''வாலி என்னை அடித்துத் துரத்தி இன்னும் கொல்ல முயல்கிறான், அனுமன் முதலியோரே என் துணைவர். வாலியை விரைவில் கொல்லவேண்டும்'' என வேண்டினான். இராமன் அவர்களுக்குள் விளைந்த சண்டையின் காரணத்தை வினவினான்.

சுக்கிரீவன், ''இராமா! எங்கள் தந்தைக்கு வாலியிடம் மிக்க அன்பு, தந்தை இறந்தவுடன் எங்களில் மூத்தவனான வாலி அரசனாயினான். துந்துபியின் மூத்த மகன் மாயாவிக்கும் வாலிக்கும் ஒரு பெண்ணைப்பற்றி பகை உண்டாயிற்று. ஒரு நாள் இரவு நாங்கள் தடுத்தும் வாலி மாயாவியைத் துரத்திச் சென்றான். நானும் பின்னே போனேன். மாயாவி ஒரு குகையுள் நுழைந்தான். வாலி என்னிடம் அவ்வாசலிலேயே காத்திருக்கும்படி சத்தியம் வாங்கிக் கொண்டு அதனுள் நுழைந்தான். ஓராண்டு கழிந்தும் அவன் வராததால் அவன் செத்தானென்றே நினைத்தேன். இரத்தமும் ஓடிவந்தது. அதனால் நான் நான் அஞ்சி பாறையால் அந்தவாசலை மூடிவிட்டு வாலிக்கு உத்தரகிரியைகளையும் செய்து விட்டு கிட்கிந்

தைக்கு வந்து வாலி இறந்ததை ஒருவருக்கும் சொல்லவில்லை. அமைச்சர்கள் அதை எவ்வாறோ அறிந்து என்னை வற்புறுத்தி அரசனாக்கினார்கள். சில நாளில் வாலி அரக்கரைக் கொன்று கிட்கிந்தைக்கு வந்து என்னைக் கண்டு தண்டித்தான். நான் அவனை வெல்ல முடியுமேனும் அண்ணன் என்ற மரியாதையாய் சும்மா இருந்தேன். பின் நிகழ்ந்ததைச் சொல்லி மன்னிப்புக்கேட்டேன். அவன் அமைச்சரையும் குடிகளையும் அழைத்துச் சபைகூட்டி, தான் குகைக்குள் போன ஓராண்டின் பின் அரக்கனைக் கொன்றதையும், வெளியில் வந்து பார்த்த போது குகை அடை பட்டிருந்ததையும், காலால் மிதித்துப் பாறையைத்தள்ளி வந்ததையும் கூறி, நான் அவனைக் கொல்லவே வாயிலை அடைத்தேன் எனச் சொல்லி என்னை ஒற்றை ஆடையுடன் துரத்தி விட்டான். அவனை நீ கொல்லவேண்டும்" என்றான். இராமன் அதற்கு இசைந்தான்.

சுக்கிரீவன் பின்னரும், "இராம! வாலியினுடைய வல்லமையைக் கூறுகிறேன். அவன் விடியுமுன் நான்கு கடலுக்கும் போய் வருவான். அவனுக்கு இணையான வீரர் ஒருவருமிலர். துந்துபி என்ற ஆயிரம் யானை வலியுடைய எருமை உருவினனான அரக்கன் கடலரசனையும் அவன் சொற்படி மலையரசனையும் போருக்கழைத்து, மலையரசன் சொற்படி வாலியையடைந்து போருக்கழைத்தான். வாலி அவனோடு போரிட்டு வலி மிகுந்த துந்துபியைக் கொன்று காலரல் எறிந்தான். அப்பிணத்திலிருந்து சிந்தின இரத்தத்துளிகள் மதங்க முனி குடிலில் தெறித்தன. உடனே முனி, "இது செய்தவன் இதனருகே வரின் அழியக்கடவன். அவனைச் சேர்ந்தோர் வந்தாலும் அழிவாராக. நாளை முதல் இவ்வனத்துள் வரும் குரங்குகள் கல்லாக" என்று வெவ்வுரை இயம்பினன். இதையறிந்த வாலி அவனையடைந்து மிகப் பணிந்து பொறுத்தருள வேண்டினன். அம்முனி அவனை ஏறெடுத்தும் பாராது தனது குடிலுள் புகுந்தான். அதுமுதல் வாலி இங்கே வருவதில்லை. அவன் இங்கே வரமாட்டானாதலால் நான் இங்கே வாழ்கின்றேன். இது தான் துந்துபியின் எலும்பு. இதோ

தெரிகிற ஏழு ஆச்சாமரங்களையும் வாலி தனது பலத்தால் ஒரே காலத்தில் ஒரு இலையேனும் இல்லாது போகுமாறு செய்யவல்லவன். இத்தகைய வாலியை நீ எவ்வாறு கொல்வாய்? என்றனன்.

இராமன் யாது செய்து சுக்கிரீவனுடைய ஐயத்தைத்தீர்க்க வேண்டுமென்று இலக்குவன் வினாவ, சுக்கிரீவன்,'துந்துபியின் எலும்பைக் காலால் எறியவேண்டும். இவ்வாச்சாமரங்களில் ஒன்றைத் துளைக்கவேண்டும்' என்றனன். அவன் மேலும், "வாலியைப் போரில் வெல்ல முடியாதென்றே இங்கே வாழ்கிறேன். இராம! உன்னுடைய போர் வலியை நான் நேரில் பார்க்காததாலேயே இது கூறினேன்" என்றான். இராமன் "என்னுடைய ஆண்மையில் சந்தேகமிருக்குமானால் இதோ தீர்த்து விடுகிறேன்" என்று சொல்லி துந்துபி எலும்பைக் காலால் எறிந்தான். சுக்கிரீவனோ, "இராம! இது வாலியால் எறியப்பட்டபோது தசை இரத்தத்தோடிருந்தது. வாலியும் போரிட்டுக் களைத்திருந்தான். நீ அந்நிலையில் இதை எறியாததால் உங்கள் இருவரில் யார் வலி அதிக முடையோன் என அறியக் கூடவில்லை. இம்மரத்தைத் துளைத்தால் அறிவேன்" என்றனன். இராமன் ஓர் அம்பால் ஏழு மரங்களையும் துளைத்தான். அது கண்ட சுக்கிரீவன் மகிழ்ந்து, "வாலியை இன்றே கொல்லவேண்டும்" என்று வேண்டினான். இராமன் அவனைக் கட்டித்தழுவி, "நீ போய் வாலியைப் போருக்கழை" என்றான். எல்லாரும் கிட்கிந்தைக்குச் சென்று அடர்ந்த காட்டிலுள்ள மரங்களில் மறைந்து நின்றார்கள். இவ்வரலாற்றையும் ஆராய்வோம்.

சுக்கிரீவன் சடாயு இறந்ததையும் அறிவேன் என்றனன். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் (பக்கம் 24) "இலக்குவன் இச் செய்தியை அனுமானுக்குச் சொல்லவில்லை. சுக்கிரீவனுக்கு எப்படித் தெரியும்?" என்று எழுதுகிறார். இது கவனிக்கத் தக்கதே. சுக்கிரீவன் சீதையை இராவணனது மடியில் கண்டேன் என்றும், அவள் தனது மேலாடையில் நகைகளை முடிந்து போட்டாளென்றும் கூறுகிறான். இதனால்

அதன் பின் சீதை இராவணனது மடியில் மேலாடை இல்லாம லே இருந்தாள் என அறியலாம். இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? காமங்கொண்டு தன்னை எடுத்தேகும் இராவ ணனிடம் மேலாடையை எறிந்துவிட்டுச் சீதை இருந்தாள் என்றால் அவளுடைய செயலையும் மன நிலையையும் என்ன என்பது?

இராமன் அந்நகைகளைக் கண்டு கோவென்றலறுகிறான். அவைகளை மார்போடணைத்துக்கலங்கி, "தம்பி! கண்ணீ ரால் என்கண் தெரியவில்லை. நீ இவைகளைப் பார்த்துச் சொல்" என்று கூறுகிறான். இப்படியும் ஒரு ஆண் மகன் இருப்பானா? இவனும் ஒரு வீரனா? இவ் அற்பத் தன்மை யுடையவனையும் தெய்வமெனச் சிலர் மதிக்கின்றனரே! என் னே அவர்தம் மதியுடைமை! இலக்குவனோ பெரும் பொய்ய னாக இருக்கிறான்! தான் அவளைப்பார்த்துக் கொண்டே வெறி கொண்டவனைப்போல நின்றகோடு "அடா பாவி! நீ என்னைப்பார்த்துக் கொண்டாவது இங்கேயே நிற்கலா மென நினைக்கிறாயா? நான் இதோ தீயில் விழுகிறேன்" என்று சீதை கதறு மளவும் அவளைப் பார்த்துக் கொண்டி டிருப்பதை விடாதிருந்ததை முற்றிலும் மறந்தவனைப்போல இலக்குவன் "நான் சீதை காலைத்தவிர வேறு அங்கங்களைப் பார்த்தறியேன்" என்று கூறுகிறான். இவனுடைய பொய்ம் மைக்கோர் எல்லையும் உளதாமோ? இவர்களுக்கு மனச்சாட்சி என்பதே கிடையாது போலும்!

இராமன் சுக்கிரீவனிடம் சீதையை எடுத்துப்போன அரக் கன் யார் என்று வினாவுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய் யங்கார் பக்கம் 22-ல் பின்வருமாறு குறித்துள்ளார்:— "அவனை இன்னாரென்று தெரியா"தென்று இலட்சுமணன் சொன்னான். மாருதி அவன் இராவணனென்று சொன்னான். சுக்கிரீவனும் இராவணன் எடுத்துப்போனதாகச் சொன் னான். இராமனும் பிறகு அப்படியே சொன்னான் ஆனால், இங்கே அவன் யாரென்று கேட்கிறான்." இக்குறிப்பால் இராமன் அறிவு கலங்கியிருந்தானென அறியலாம்.

அவ்வினாவுக்கு மறுமொழியாக சுக்கிரீவன் தனக்கு இராவணனைப் பற்றி ஒன்றும் தெரியாதென இராமனிடம் கூறுகிறான். இது முழுப்பொய். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார், "இது உண்மையல்ல, இதே விஷயங்களைப் பிறகு வானரர்களுக்கு இவன் சொல்லுகிறான்" என்று பக்கம் 26-ல் குறித்திருக்கிறார். இதேஇடத்தில் மற்றொரு மொழிபெயர்ப்பாளராகிய அ. வீ. நரசிம்மாச்சாரியார் ஓர் நீண்ட குறிப்பு எழுதியிருக்கிறார். அது ஒவ்வொருவருக்கும் அவசியம் தெரிய வேண்டுமாகையால் அதனை இங்கே குறிக்கிறோம். அவர் பக்கங்கள் 1651, 1653, 1553, 1654 ஆகிய நான்கு பக்கங்களில் விவரித்தது வருமாறு:—

"இங்கு சுக்கிரீவன் தனக்கு இராவண விருத்தாந்தம் ஒன்றுமே தெரியாதென்றனன். ஆனால், அவன் சீதையைத் தேட வானரர்களை அனுப்பும்போது, 'அந்தச் சமுத்திரத்தினுடைய அக்கரையில் நூறு யோசனை தூரம் விஸ்தாரமுடையதும், மனிதர்களும் தேவதைகளும் புகக்கூடாதுமாகிய ஓர் தீவம் இருக்கின்றது. அங்கு முழுவதும் தேடிப்பாருங்கள். அந்தத்தேசம் துஷ்ட ஸ்வபாவனும், தேவேந்திரனை நிகர்த்த தேஜஸ் உடையவனும், ராக்ஷத சாதியுமாகிய இராவணனுடையது' என்றமையால், சுக்கிரீவனுக்கு இராவணனுடைய இருப்பிடமும், சாமர்த்தியமும், பராக்கிரமும் நன்கு தெரியுமென்று வெளியாகிறது. இப்படியிருக்க அவன் இராமனைப்பார்த்து அவை ஒன்றும் தனக்குத் தெரியாதென்பது எப்படியெனில் இது தவறே. ஆயினும் சுக்கிரீவன் தன் காரியத்தை முதலில் நடத்திக்கொள்ளும் பொருட்டு இங்ஙனம் கூறினன். ஆனது பற்றியே இராமன் பின்பு 'சுக்கிரீவ! எவ்விடத்திற்கு சீதையை எடுத்துக்கொண்டு போகக்கண்டனை?' என்று வினாவினதற்கும் கூட மறுமொழி கூறவில்லை. ஏனெனில் "அவள் எடுபட்டுப் போகையில் கண்டேன்" என்று சொன்னால், தனக்கு அவள் போன இடங்கூட எப்படித் தெரியாமற்போகும்? இங்ஙனம் தெரிந்ததாகச் சூசனை செய்ததையும் கூட, மீளவும் வினவியபொழுதும் சொன்னவனல்லன். இங்ஙனம் தெரிந்தும் சொல்லாதிருப்பின்

ஆதியிலேயே மித்திரத்துரோகம் செய்தானென்று சொல்ல லாகாது. சுக்கிரீவன் தீர்க்க ஆலோசனையோடு தன் மனத் தில் நான் இராவண விருத்தாந்தம் எனக்குத்தெரியுமென்று சொல்வேனாயின், அப்பொழுது இராமன் பெரும் விசனத்தில் ஆழ்ந்திருக்கையில் முதலிலேயே சீதையைத் தேடவேண்டு மென்பான். அது யுக்தமன்று. வானரர்கள் வாலிக்கு ஆதீ னகர்களாயிருக்கிறார்களேயன்றி எனக்கு வசப்பட்டவரல்ல. எப்படியாவது அவர்களில் சிலரை வசப்படுத்திக்கொண்டா லும் இராவணனுடன் சிநேகம் பண்ணிக்கொண்டிருக்கிற வாலி நாம் விரும்பினபடி நடத்த எப்படிப் பொறுத்திருப்பான். ஆகையால் இருவர் காரியமும் பாழாய் விடும் என்று ஆலோ சித்து, மிகுந்த மதியுடையோனாகையால் தெரியாதது போல் நடித்தனன். இப்படியாயின் பிறகு வானரர்களை அனுப்பும் பொழுது சுக்கிரீவன் இராவணனைக் குறித்துச் சொல்லும் வார்த்தைகளைப்பற்றி இராமனுக்குச் சங்கை உண்டாகாதி ருக்குமா என்னில்—தாரை இலட்சுமணனோடு சொன்ன வார்த்தைகளைக் கேட்டதனால் இராமனுக்கு அங்ஙனம் சங் கை உண்டாக அவசியமில்லை. அதாவது 'சுக்கிரீவன் பூர்வ த்தில் இராவணனுடைய சங்கதியை அறியான். பிறகு தா ரையின் வார்த்தைகளால் அறிந்தான்' என்று இராமனுக்கு மனதில் தோற்று மென்க. இலட்சுமணனைப்பார்த்துத்தாரை 'இலங்கையில் நூறாயிரங்கோடி இராட்சதர்கள் இருக்கின்ற னர். அவர்களெல்லோரையும் கொல்லாமல் சீதையை எடுத் துக் கொண்டு போன இராவணனைக் கொல்லச்சாத்திய மில்லை' என்றனள். மேலும் சக்கரவாள பர்வதம் வரையில் பூமி முழுவதும் திரிந்த சுக்கிரீவனுக்கு அதனுள்ளிருக்கும் இராவணனுடைய இருப்பிடம் முதலியவை எப்படித்தெரியா திருக்கும்? அங்ஙனம் தெரிந்திருப்பது பற்றியே இராமனது பலத்தைப் பரீட்சிக்கும்பொழுது, வாலி துந்துபி முதலான வர்களோடு எதிரிட்டதைப் பிரஸ்தாபிக்கும் சமயத்தில் வாலி இராவணனைச் செயித்த விருத்தாந்தத்தைச் சொல்லவில்லை. ஆனால், சுக்கிரீவனுக்கு அப்பொழுது தெரியாது, தாரை சொன்ன பிறகே தெரியுமென்னலாகாதோ? என்னில், தாரை யைப்பார்த்தது முதலாகக் காம விகாரங்கொண்டு செய்ம

ந்திருக்கும் சுக்கிரீவன் தாரையோடு இராம காரியத்தைக் கலந்தாலோசிப்பதற்கு ப்ரசக்தியே நேரிட்டிராது. சுக்கிரீவன் சர்வப்பிரகாரத்தாலும் இராவணன் சங்கதி அறியானாயின் அப்பொழுது சீதையின் கூக்குரல் முதலியவற்றால் அவன் போன திக்கையாயினும் நன்றாகத் தெரிந்தமட்டும் அவசியம் சொல்லியிருப்பான். இங்ஙனம் தெரிந்ததையும் கூடச் சொல்லாமையால் மற்றவையும் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே சொல்லாதிருந்தானென்று ஊகித்துக்கொள்க. சிலர் இராவணனுடைய தலத்தை அறியேன் என்பதற்கு இப்பொழுது இராவணன் இருக்குமிடம் தெரியாது என்று பொருள் கொள்ள வேண்டுமென்பர். ஆனால், அது சரியன்று. இராமன் சர்வப்பிரகாரத்தாலும் இராவண விருத்தாந்தம் தெரியாமல் அவன் சுயரூபம் கொஞ்சமாயினும் தெரியட்டுமெனனும் எண்ணத்துடன் சுக்கிரீவனைப்பார்த்து, 'அந்த இராட்சதன் எங்கே வாசஞ்செய்வான்' என்று வினாவினன். அதற்கு சுக்கிரீவன் தனக்குத்தெரிந்த அளவும் சொல்லாமல் 'அவன் இப்பொழுதிருக்குமிடம் எனக்குத் தெரியாது' என்று மறுமொழியுரைப்பது கபடமாகும். அவன் எப்போதும் வசித்திருக்குமிடத்தை இராமன் வினாவினானன்றி அப்பொழுதிருக்குமிடத்தை வினவவில்லை. இராவணனுடைய இருப்பிடம் மாத்திரம் தெரியினும் அதை வாசஞ்செய்கையில் அவன் தானே அவ்விடம் வருவானென்றன்றோ இராமனுக்குக் கருத்து. மேலும்சுக்கிரீவனுக்கு அப்பொழுது இராவணனிருக்குமிடம் தெரியாமல் போயினும் தனக்குத் தெரிந்திருக்கிற அவனுடைய சாமர்த்திய பராக்கிரமங்களையாயினும் சொல்ல வேண்டுமல்லவா? அவைகளையுங்கூடச் சொல்லவில்லை. சுக்கிரீவனுக்கு இராவணன் இருக்குமிடம் தெரிந்திருக்குமாயின் அந்தத் திசைக்கு மாத்திரமே வானரர்களை அனுப்புவானன்றி மற்ற திசைகளுக்குங்கூட அனுப்புவானோ? ஏனெனில் அவன் அந்த வானரர்களைப்பார்த்து இராவணனையும் சீதையையும் இங்குமங்கும் தேடிப்பார்க்க வேண்டும் என்றுரைப்பது, இராவணன் சீதையைக்கொண்டு சென்று வெகு காலமானபடியால் அவன் சீதையை எங்கேனும் மறைத்து வைத்திருப்பான் என்னும் எண்ணத்துடன் சொன்னதாகக் கொள்ளவேண்டுமாகையால்

இதுவும் பொருந்துகின்றது. மற்றும் சிலர், 'சர்வ விதத்தி லும் அந்தப்பாப இராட்சதன் இருக்குமிடம் தெரியாதென் கையால் அவனிருக்குமிடம் எல்லா விதத்திலும் அடிமுதல் நுனிவரையில் தெரியாது. ஏதோ சில விதமாகக் கொஞ்சமே தெரியுமென்றும், இங்ஙனம் கொள்கையால் மேல் சுக்கிரீவன் கொஞ்சம் இராவணனுடைய சங்கதியைத்தெரிந்து கொண்டு சொல்லுவதோடு விரோதம் வராதென்றும், சொல்லுகின்ற னர். இப்படியாயின் சுக்கிரீவன் பின்பு வானரர்களோடு இராவணனைக்குறித்து எவ்வளவு சொன்னானோ அவ்வ ளவு முதலிலும் இராமனோடு சொல்லியிருக்க வேண்டு மல்லவா? அங்ஙனம் சொல்லாமையால் இப்படியும் கூறலா காது. மற்றும் சிலர், 'ஒரு சம்வத்சரம் வரையில் இராவ ணன் சீதைக்குத்துயரம் விளைக்காதிருந்ததுபற்றி அவனுக்கு அவளைக்கொண்டு வந்ததனால் பயன் இல்லாமற் போயிற்று. இராவணன் தினந்தோறும் சிவபூசை செய்வது தான் விரும் பியதெல்லாம் கைகூடும் பொருட்டே. அவன் சீதையைக் கைப்பற்ற விரும்பி அவனுக்கு அது கைகூடாதாயின் அவன் செய்த சிவபூசை வீணாமென்று நினைத்து அந்தப் பூசைக்கு வேறொரு பலனையாயினும் கொடுப்பதற்காகத் தெய்வமே நின்று தடை செய்கையில் சுக்கிரீவனுக்கு இராவணனைப்பற் றித் தெரிந்தும் தெரியாததுபோலவே ஆயிற்று' என்பார் கள். நேரான காரணம் இருக்கையில் அதிர்ஷ்டத்தைக்கார ணமாகக்கற்பித்துச் சொல்வது யுக்தமன்று. பர தாரங்களைப் புணருவது சிவ பூசாபலமென்பது நிரம்பவும் அழகாயிருக்கி ன்றது; ஆகையால் சுக்கிரீவன் இராவண விருத்தாந்தம் தெரிந்தும் வேண்டுமென்று மறைத்தானென்பதே பொருந்து கின்றது.''

மேலே கண்டதே நரசிம்மாச்சாரி யாருடைய குறிப்பா கும். எவ்வாற்றானும் சுக்கிரீவன் பெரிய சூதன் என்பதே வெளிப்படை. மேலும் சுக்கிரீவன் எடுத்ததெல்லாம் ஐயுறும் தன்மையன் என்பது அவன் இராமனுடைய ஆற்றலிலும் ஐயு றுவதால் விளங்கும். தான் இராமனுடைய ஆற்றலில் ஐயுறுவ வதை அவனிடம் நேரிலேயே கூறுகிறான். அவன் கூறிய

படி துந்துபியை எறிந்து மரங்களையும் துளைத்த பின்னரே இராமனை நம்புகிறான். இராமனோ எப்படியாவது சுக்கிரீவனைத் திருப்தி செய்தால்தான் தன் காரியம் நிறைவேறுமென எண்ணி அவன் சொல்லுகிறபடியெல்லாம் நடக்கிறான்.

சுக்கிரீவன் கொடிய சகோதரத் துரோகி. வாலியினிடம் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு பின் அவ்வாக்குறுதிக்கு மாறாக சுக்கிரீவன் குகை வாயிலை விட்டுக் கிட்கிந்தைக்குப் போகிறான். போகிறவன் சும்மா போகாமல் குகை வாசலையும் அடைத்து விட்டுப் போகிறான். அவன் வாலி இறந்ததாகத் தான் எண்ணியதை ஊரில் ஒருவரிடமும் கூறாதிருக்கிறான். ஏனெனில் உண்மையில் அவனுக்கு வாலி சாகவில்லை என்ற நம்பிக்கை யிருக்கிறது. அதனால் கூறாதிருந்து பின் கொஞ்சகாலத்தில் ஒருவாறு துணிந்து அரசனுமாகிறான். இவனுடைய தீவினையே இவனைச் சுட்டது. இவ்வளவு தீமையை இவன் செய்யவில்லை யென்றால் இவனுக்குப் பின்னால் அதிக துன்பத்தை வாலி செய்திரான். வாலியோ மிகவும் நல்லவன். அவன் தனது அமைச்சர்களையும் குடிகளையும் அழைத்து அவரிடம் சுக்கிரீவனுடைய தீமதியைக் கூறியே அவனை நாட்டிலிருந்து துரத்தியிருக்கிறான். இது சுக்கிரீவனுடைய வாய்மொழியாலேயே தெரிகிறது. இவ்வளவு தீயவனை யார்தான் உடன் வைத்து வாழ இசைவர்?

வாலி மிகவும் உத்தமனாகவே காணப்படுகிறான். அவன் துந்துபியைக்கொன்று எறிந்தபோது மதங்க முனிவனுடைய குடிலில் இரத்தம் சிந்தியமையால் அம்முனிவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறான். அம்முனிவனோ இவனை ஏறெடுத்தும் பாராமல் உள்ளே போகிறான். இம்முனிவன் எவ்வளவு கொடியவன்? இவன் கூறிய வெவ்வுரை பலித்ததென்பது உண்மையாகுமோ? இம் முனிவனைப்போலும் வீணன் உளனோ?

“இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று” இது தமிழ் மக்களுடைய சிறந்த கொள்கை. அதாவது தீயில் வைத்தாங்கு கொடிய துன்பம் செய்

தோராயிருந்தாலும் நம்மை வந்து சேர்ந்தால் வெகுளாது மன்னிப்பதே பெரியோர் கோள் என்பது. இம்முனிவன் தமிழ் மக்களைக் கெடுக்க வந்த தீயவனே யாதலின் இவன் பெரியவனாவ தெங்ஙனம்? பெரியவனாயினன்றோ அடைந்தோரை மன்னித்து வாழ்த்த வேண்டுமென்ற பெருங் குணம் பொருந்தும்? அப்படியே இருந்தாலும் கெடுதி செய்தவன் வாலி, அவனை மட்டும் சபிப்பதே முறை. அதைவிடுத்து இம்முனிவன் குரங்குகளை யெல்லாம் தன் வனத்துக்கு வந்தால் கல்லாய்ப்போக எனவும் கூறுகிறான். இவனும் ஒரு முனிவனா? உயிர்க்குறுகண் செய்யாமையன்றோ தவத்துக்கு இலக்கணம்? இவன் பெருங்கோன் போலும்!

வாலியும் சுக்கிரீவனும் ஒரு தந்தைக்குப் பிறந்த பிள்ளைகளென்றும், அவர்களுள் வாலியிடம் தந்தை அன்புடனிருந்தனென்றும், பரம்பரையாக வந்த அரசாட்சியையே மூத்தவனாகிய வாலி ஆண்டனனென்றும் சுக்ரீவனே கூறுகிறான்; ஆனால், சில இடங்களில் இவர் இந்திரனுக்கும் சூரியனுக்கும் பிறந்த பிள்ளைகளென்றும் கூறப்படுகின்றனர். இது வேண்டுமென்று ஆரியரால் கட்டப்பட்ட கதையாகவே இருக்க வேண்டும். 'இவர்களைக் குரங்குகளென்ற ஆரியர் வேறு என்னகதைதான் இவர்களைப் பற்றிக்கட்டிவிட்டிருக்க மாட்டார்கள்? குரங்குகளுக்கு அரசாட்சி ஏது? கோட்டை கொத்தளங்கள் ஏது? நாடு நகர வாழ்க்கைகள் ஏது? சுக்கிரீவன் தன்னை ஒற்றை ஆடையுடன் வாலி துரத்தி விட்டதாகக் கூறுகிறான். இதனால் இவன் ஒற்றையாடைக்கு மேலாடை வேண்டுமென்ற நாகரீக உணர்ச்சியுடையவனாகக் காணப்படுகிறான். குரங்கேல் ஆடையேது? ஆதலின் இவையெல்லாம் ஆரியர் வேண்டுமென்று கட்டிவிட்ட கதைகளேயாம்.

சுக்கிரீவன் ஓரிடத்தில் தன்னால் வாலியைக் கொல்ல முடியுமேனும் அண்ணனென்ற மரியாதையால் பேசாமலிருந்துவிட்டதாகவும், மற்றோரிடத்தில் வாலியை நினைக்க நினைக்க நெஞ்சம் நடுங்குகிறதென்றும் முன்னுக்குப் பின் மாறாகக்

கூறுகிறான். இவனுக்கு உண்மையில் வலிபிருந்திருந்தமேல் வாலியை வெல்ல வேறொருவன் உதவி இவனுக்கேன் வேண்டும்? தனது அண்ணனைக் கொல்லும்படி ஓயாமல் சுக்கிரீவன் இராமனை வேண்டுகிறான். இத்தகைய தீயோரும் சகோதரத் துரோகிகளும் உளராவரோ? நிற்க, இனி கம்பர் புரளியைக் கவனிப்போம்.

கம்பர் சுக்கிரீவனுடைய கெட்ட குணங்களையெல்லாம் மறைத்து அவனை மிகவும் நல்லவனைப்போலக் காட்டுகிறார். அதற்காக நாம் மேலே குறித்துள்ள வால்மீகி கூறும் கதையையே மறைத்தார். அவருடைய கதைப் போக்கே புதியதாக உள்ளது. இராமன் சீராடிக் கந்த மூலங்களை உண்டு சுக்கிரீவனை நோக்கி நீயும் மனைவியைப் பிரிந்தவனோ என்று வினாவியதாகவும், அதற்கு அனுமான் மறுமொழி கூறியதாகவும் கம்பர் கூறுகிறார். சுக்கிரீவன் கூறியதாக வால்மீகி கூற, அவன் செப்பியதாக உரைத்தால் மக்கள் தாம் கூறும் பொய்க்கதையை நம்பார் என அக்கதையை அனுமான் இடையிற்கூறுகிறார். அனுமான் "வாலி மிகவும் வல்லவன். எதிரிகளுடைய ஆற்றலில் பாதியை வாங்கும் தன்மையன். மாயாவி பாதாளத்தில் நுழைதலும் வாலி சுக்கிரீவனைக்காவல் வைத்து உள்ளே போனான். இரண்டேகால் ஆண்டுகள் வரை அவன் வெளிவரவில்லை. அப்போது சுக்கிரீவன் மனக்கவலை கொண்டு அழுதான். நாங்கள் அவனைத் தேற்றி வாலிக்குப் பதில் அரசுபுரிய வேண்டினோம். அப்போது அவன் அதை மறுத்துப் 'பாதாளத்தில் போய் வாலியைத் தேடப் போகிறேன், வாலி இறந்தால் அவனைக்கொன்றவனைக் கொல்வேன், இல்லையானால் நான் இறப்பேன்' என்று கூறிப் பாதாளம் போகப் புறப்பட்டான். நாங்களெல்லாம் ஒன்று கூடி மறுபடியும தடுத்து அவனை அரசனாக்கினோம்; மாயாவி வந்துவிடுவானோ என அஞ்சி அப்பாதாள வாசலைப் பாறைகளால் அடைத்து விட்டோம். வாலி பகைவனைக் கொன்று இங்கு வந்து தோன்றி தன்னைப் பணிந்த சுக்கிரீவனைத்துரத்தினான்" என்று கூறினதாகவும், இராமன் "இருவரும் எவ்வாறு போரிட்டனர்கூறுஎன, மறுபடியும்அனுமான்

"எதிரற்ற ஆற்றலினனாகிய வாலி சுக்கிரீவனைக் கொல்லத் துணிந்தனன். சுக்கிரீவன் அஞ்சி முன் ஏற்பட்ட சாபத்தால் வாலி இங்கே வர மாட்டானாகையால் இவ்விடத்தில் வந்து வாழ்கிறான். வாலி இவனுடைய மனையாளையும் கைப்பற்றிக்கொண்டான்" என்று கூறினான்.

இதனைப் படிக்கும் அறிஞர்களே! கம்பர் கதையை எவ்வளவு மாற்றி விட்டார் என்று பாருங்கள். சுக்கிரீவன் ஓராண்டு இருந்தனனாக, கம்பர் இரண்டேகால் ஆண்டுகள் காத்திருந்தனன் என்கிறார். ஒன்றை இரண்டேகாலாகவாவது பெருக்கிக் காட்டின மட்டில் நின்றாரே கம்பர்! சுக்கிரீவன் அண்ணனைவிட்டு வர மாட்டேனென்று பாதாளம் புகத் தொடங்கினனாம். அவனை அனுமன் முதலியோர் தடுத்து தாங்களாகப் பாறைகளால் வாயிலை அடைத்து அவனை அழைத்து வந்தனராம்! சுக்கிரீவன் திரும்பிவந்து சிலகாலம் வாலி இறந்ததையும் கூறாமல் இருந்ததையும், அவன் வாலிக்கு அந்தியக் கடன் கழித்ததையும் கம்பர் அவன் தீக்குணம் மறைக்கும் பொருட்டு மறைத்துளர். வாலிவந்து சபை கூட்டிச் சுக்கிரீவனை நாடு கடத்தியமையையும் அவனுடைய நற்குணத்தை மறைக்க கம்பர் மறைத்தார். சுக்கிரீவனே நேரில் இராமனிடம் தன் மனத்திலுள்ள ஐயப்பாடுகளைக்கூறி இராமனை முதலில் துந்துபி எலும்பை ஆற்றச் செய்து பின் மரங்களைத் துளைக்கச் செய்தனன் என்று வால்மீகி கூறுகிறார். கம்பர் இந்த முறையையே முற்றிலும் மாற்றினார். சுக்கிரீவன் அனுமன் முதலியோருடன் தனித்திருந்து ஆலோசித்து இராமனிடமுள்ள தன் ஐயத்தைக் கூறியதாகவும், அனுமன், "அவ்வாறு ஐயுறாதே. இராமன் திருமாலே ஆதலின், அவனால் முடியாதது ஒன்றுமில்லை. வேண்டுமானால் மரங்களையும் துளைக்கச் செய்து அவனுடைய ஆற்றலைக்காண்" என்று கூறியதாகவும், உடனே சுக்கிரீவன் இராமனை மெல்ல வழிச்செல்வோம் என அழைத்துச் சென்று மரங்களைத் துளைக்கவேண்டியதாகவும், இராமன் யாவரும் அச்சுற அம்பெய்து அம்மரங்களைத் துளைத்ததாவும், அதனால் சுக்கிரீவன் அவனைத் திருமாலே என என்

ணிப் புகழ்ந்ததாகவும், அப்போது அங்கே துந்துபியின் எலும்புக் கூடுகிடந்ததாகவும், அதன் வரலாறு இராமன் வின வினதாகவும், சுக்கிரீவன் கூறக்கேட்டு இராமன் தன தம்பியை அதனை ஆற்ற ஆணையிட்டதாகவும், உடனே இலக்குவன் அதனை ஆற்றியதாகவும் கம்பர் கூறுகிறார். நனறாக ஆலோசித்துச் சுக்கிரீவன் தகுந்த காரணத்தோடு முதலில் துந்துபி எலும்பிடையும், பின் மரங்களிடையும் இராமனுடைய ஆற்றலை சோதித்தனனென வால்மீகி எடுத்துக்கூற, அம்முறையை மாற்றியதோடு கம்பர் துந்துபி எலும்பை இராமன் ஆற்றவில் யென்றும், இலக்குவனே இராமனதாணையால் ஆற்றினனெனவும் கூறுகிறார். ஈதெல்லாம் வால்மீகி கதையால் சுக்கிரீவனுக்கு வரும் அயோக்கியப் பட்டத்தை மறைத்து இராமனைத் திருமாலே எனக்காட்டக் கம்பர் செய்த வேலைகளாம்! துந்துபி கடலரசனிடமும், பின்மலையரசனிடமும் பின் வாலியிடமும் வந்தனென வால்மீகி கூற, கம்பர் அவன் முதலில் திருமாலிடமும், பின் அவன் ஏவலால் சிவனிடமும், பின் அவன் ஏவலால் தேவர்களிடமும், பின் அவர்கள் ஏவலால் வாலியிடமும் வந்தனனெனக் கூறுகிறார். மேலும் அவர் மதங்க முனிவனிட்ட சாப வரலாற்றை "வாலிக்குச் சாபங் கிடைத்தது" என்ற அளவில் மட்டும் கூறி நிறுத்திக் கொள்கிறார்.

சீதையினுடைய அணிகலன்களை முதலிலேயே காட்டினனென வால்மீகி கூற, அதனை மாற்றிக் கடைசியாகக் காட்டினனெனக் கம்பர் கூறுகிறார். இராமன் அவ்வணிகலன்களைக் கண்டு வருந்துவதைக் கண்ட சுக்கிரீவன் தன் காரியத்தைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம், முதலில் சீதையைத் தேடிக் கொணர்வோமெனக் கூறியதாக அவனுடைய குணத்தையே முற்றிலும் மாற்றி நல்லவனாகக் கூறுகிறார் கம்பர். வால்மீகி ஒவ்வொரு சமயத்திலும் தன் காரியத்தை முதலில் முடித்துக்கொள்ளவே பலவாறு சூழ்ச்சிகள் செய்தனன் சுக்கிரீவன் என்று கூறினார் கம்பர். இத்தீயச் செயலை மாற்றிச் சுக்கிரீவனை நல்லவனாகக் காட்டுவதற்கு,

"என்னுடைச் சிறு குறை முடித்தல் ஈண்டோரீ இப்
பின்னுடைத்தாயினும் ஆக பேதுறு

மின்னிடைச் சனகியை மீட்டுடன் வருதுமால்
பொன்னுடைச்சிலையினாய்! விரைந்துபோய் என்றான்''

எனக்கூறினார். மெய்யை மறைத்துப் பொய்யை மெய்யாகக் காட்டினர் இக்கம்பர்.

அனுமான், "சீதையைத் தேடவேண்டுமானால் வாலியைக் கொன்று வானரச் சேனையைக் கைப்பற்றினால்தான் முடியும்'' என்று கூறியதாக இக்கூற்றை அனுமான் வாலிமேலேற்றி, அதற்கிசைந்து இராமன் அவர்களை அழைத்துக் கொண்டு வாலி இருக்குமிடம் சென்றனன் எனவும் கம்பர் கூறுகிறார். இதனால் இவர் எடுத்த இடங்களிலெல்லாம் வால்மீகிக்கு மாறுபடுபவரேயாவார்.

கம்பருடைய மன நிலையை முன் கட்டுரைகளில் விரித்துரைத்து வந்துள்ளோமாயினும் இங்கும் ஒன்று எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். ஏனெனில், அதனை அறிஞர் சிந்தித்தல் இன்றியமையாதது. இராமன் சீதையினுடைய நகைகளைக் கண்டபோது அவை அவைகளை, அவை அவை படிந்திருந்த உறுப்புக்களாகவே கண்டனனாம்! அவ்விடத்தில் கம்பர் கூறும் பாடல் வருமாறு:—

(கலன்காண் படலம் 5-ம் பாடல்)

"நல்குவதென் இனி நங்கை கொங்கையைப்
புல்குவ பூணும் அக்கொங்கை போன்றன;
அல்குலின் அணிகளும் அல்குலாயின;
பல்கலன் பிறவும் அப்படிவம் ஆனவே.''

கம்பர் தாம் விரும்பிப் புகழும்கொங்கையை இங்கும் மறக்காமல் கூறியதோடு அத்துடன் அல்குலையும் கூறி ஓர்படி மேலுயர்ந்தார். "சீதையுடைய கொங்கையில் அணிந்திருக்கும் நகைகள் அவளுடைய கொங்கையேபோல் காணப்பட்டன. அவளுடைய அல்குலின் அணிகள் அல்குலே போலக் காணப்பட்டன'' என்றார் கம்பர். அல்குலென்பது

பெண் குறி. அதிலும் சீதை பல நகைகள் அணிந்திருந்தாள் போலும்! கம்பர் 'அல்குலின் அணிகள்' என்றார். அவைகளைச் சீதை இராவணனுடைய மடியிலிருந்துகொண்டே எவ்வாறு கழற்றினளோ? அறிஞரே சிந்தியுங்கள் !!

---

## மூன்றாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 12-முதல் 16-முடிய)

**சுக்கிரீவன்** பேரிரைச்சலிட்டு வாலியை சண்டைக் கழைத்தான். அதைக்கேட்டு வாலி சண்டைக்கு வந்தான். இராமனுக்கு வாலியை அடையாளம் காணமுடியாமையால் அம்பை விடவில்லை. அதனால் சுக்கிரீவன் அடிபட்டு அஞ்சி இராமனைக் காணாமல் மலையை நோக்கி ஓடினான். வாலி நகருக்குத் திரும்பினான்.

இராமனாதியோர் சுக்கிரீவன் இருக்கும் இடத்தை அடைந்தனர். அவன் வெட்கத்தால் தலை குனிந்து, "இராமா! நீ இப்படிச் செய்வாயென்று தெரிந்திருந்தால் நான் சண்டைக்கே போயிருக்கமாட்டேன்." என்றான். இராமன் "உனக்கும் அவனுக்கும அடையாளம் தெரியவில்லை. உன்னை எங்கே கொன்றுவிடுவேனோ என்ற அச்சத்தால் நான் அம்பு விடவில்லை. நானும் இலக்குவனும் சீதையும் உன்னையே நம்பியிருக்கின்றோம். இக்காட்டில் உன்னைத் தவிர எங்களுக்கு வேறு யார்? நீ மறுபடியும் போர் செய்; வாலியைத் தவறாமல் கொன்றுவிடுகிறேன். தம்பீ! அடையாளமாகப் பூக்களால் நிறைந்த இந்தக்கொடியை இவன் கழுத்தில் போடு" என்றான். இலக்குவன் அவ்வாறே சுக்கிரீவன் கழுத்தில் கொடியைப் போட்டான்.

எல்லாரும் கிட்கிந்தைக்குப் போனார்கள். வழியில் ஓர் சோலையிருந்தது. இராமன் அதனைப்பற்றி வினாவ சுக்கிரீவன் "இதில் எழு முனிவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பெருந்தவம் செய்து உடலோடு விண்ணுலகடைந்தனர். நீங்கள் அவர்களை வணங்குங்கள்" என்றான்.

அவர்கள் கிட்கிந்தைக்கு வந்து இருண்ட காட்டில் மரங்களின் மறைவில் நின்றார்கள். சுக்கிரீவன், "இராம! பயங்கரமான யந்திரங்களால் காக்கப்பெற்றிருக்கும் கோட்டை மதில்களையுடைய இங்கேதான் வாலி அரசாட்சி புரிகிறான். அவனைக் கட்டாயம் கொல்லவேண்டும்" என்றனன். இராமன், "நான் வாக்கை நிறைவேற்றவில்லையாயின் என்னை நீ இகழலாம். வாலியுடன் போர் புரி" என்றான். சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்தான். வாலி உடனே புறப்பட்டான். தாரை அதுகண்டு வாலியைத்தழுவிக்கொண்டு "தாங்கள் இப்படிப்போவது எனக்குச் சம்மதமில்லை. சுக்கிரீவன் இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் போருக்கு வந்ததால் நான் ஐயுறுகின்றேன். அவன் தகுந்த துணையுடன் வந்திருக்க வேண்டும். நமது மகன் அங்கதன் காட்டில் திரியும்போது தூதர்களால் இதையறிந்தான். அயோத்தி மன்னன் மக்களான இராம இலக்குவர் அவனுக்குத் துணை சேர்ந்துளராம். அவர் தலைசிறந்த வீரராம். ஆதலின் சினந்தவிர்ந்து சுக்கிரீவனை அழைத்து இளவரசாக்குங்கள். அவன் தங்கள் தம்பியல்லவோ? இப்படிச் செய்யாமல் தாங்கள் போருக்குப் போவது எனக்கு விருப்பமில்லை" என்றனள். வாலி "பெண்ணே! பகைவன் போருக்கு அழைக்க, வீரன் பின் வாங்குவனோ? இராமன் குற்றமற்ற என்னிடம் போரிட அவ்வளவு அயோக்கியனல்லன். நீ கவலைப்படாதே! நான் சுக்கிரீவனுடைய கொழுப்பை மாத்திரம் அடக்குவேனே ஒழிய அவனைக் கொல்லமாட்டேன். எனக்கு விடை கொடு என்றான். தாரை அவனை வாழ்த்தித் திரும்பினாள்.

ஆடைகளை இறுகக் கட்டிக்கொண்டு வாலியும் சுக்கிரீவனும் போர்தொடங்கினர். நெடுநேரம் சண்டையிட வாலி

யின் வலி வளர்ந்தது. சுக்கிரீவனோ தளர்ந்தனன். ஆனால் அவன் இராமனைப் பார்த்தான். அப்போது இராமன் மறைவிடத்திலிருந்து ஓர் அம்பை விடுத்தான். அது வாலியின் மார்பில் பாய்ந்தது. அதனால் அவன் கீழே விழுந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் முதலில் வாலியை அடையாளம் காணமுடியாமல் அம்பை விடவில்லை. தன்னுடன் நெருங்கிப் பழகிய சுக்கிரீவனை விட்டுப் பிரித்து வாலிமேல் அம்பெய்யும் அறிவாற்றல் அவனுக்கில்லாது போயிற்று. மேலும், இராமன் எய்யும் அம்புகள் குறித்தவர் எங்கிருந்தாலும் போய்ப் பாயும் என்று கதைக்காரர் கூறுவனவெல்லாம் பொய்யான கட்டுக்கதைகளே என்பதும் இதனால் விளங்குகின்றது. அவ்வித ஆற்றல் இராமனுக்கிருந்தால் அவன் கட்டாயம் அம்பெய்திருப்பான்; அது வாலியைக் குறித்துப் போய்ப் பாய்ந்திருக்கும். அவ்வாறு செய்யாமல் தன்னை நம்பிச் சண்டை செய்த சுக்கிரீவனைத் திண்டாடி அடிபட்டோட விட்டுவிட்டபடியால் இராமனிடம் தெய்வத் தன்மை இல்லையென்பதும், இராமன் சாதாரண மக்களிலும் கேடுகெட்டவனென்பதும் விளங்குகின்றது.

இதுபற்றி சுக்கிரீவன் வருந்திய போது இராமன், "அப்பா! நான் எய்யும் அம்பு தவறி உன்மேல் பட்டால் எங்கள் கதி என்னாகும்? உன்னைத் தவிர எங்களுக்குப் புகலேது?" என்று தெரிவிக்கிறான். அடையாளம் தெரிவதற்காக அவன் சுக்கிரீவனுக்கு ஓர் கொடி மாலை சூட்டுகிறான். இதனால் இராமனுக்கு சாதாரண மக்களுக்கு இருக்கும் அறிவாற்றலும் இல்லை என்பது புலனாகிறது. மேலும், இராமன் சுக்கிரீவனையே நம்பியிருந்தனனென்பது அவனுக்கு தன் ஆற்றலில் நம்பிக்கை இல்லையென்பதும் தெரியவருகிறது.

ஏழு முனிவர்கள் உடலோடு விண்ணுலகடைந்தனரெனச் சுக்கிரீவன் கூறுகிறான். உடலோடு விண்ணுலகடைதலாவது என்ன? விண்ணுலகு எவண் உள்ளது? அதனை உடலோடு அடைதல் எங்ஙனம்?

கிட்கிந்தை பலமான கோட்டை மதில்களால் சூழப்பட்டிருந்ததென்பதும், அம்மதில்களில் பயங்கரமான யந்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன என்பதும் சுக்கிரீவன் பேச்சால் தெரிய வருகிறது. இவ்வளவு தூரம் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டதோடு சிறந்த பேரறிவால் மட்டும் கண்டு பிடிக்கக் கூடிய யந்திரங்களை அதில் வாலி வைத்திருந்தனன் என்பதால் எவ்வளவு நாகரீகமுடைய மக்களுக்கு வாலி அரசனாயிருந்திருக்க வேண்டும்; இவர்களை அக்கிரமமாக ஆரியர் குரங்குகளென்று எழுதி வைத்து அக்கூற்றை வாலியின் பின் தோன்றல்களாகிய தமிழ் மக்களே நம்பி மோசம் போகும்படியும் செய்து விட்டனரே!

வாலி தாரையிடம், "நான் சுக்கிரீவனுடைய கொழுப்பை அடக்குவேனே ஒழிய அவனைக் கொல்வதில்லை" என்று கூறுகிறான். இதனால் அவனுடைய பெருங்குணம் விளங்குகிறது. வாலி சுக்கிரீவனைக் கொல்ல எண்ணினால் முன்னரேயே கொன்றிருப்பான். அறிவும் அன்பும் மிக்க வாலி தன்னுடைய தம்பிக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துவதற்காகவே அவனை அடித்துத் துரத்தியவனாவான். இத்தகைய அன்புருவனாகிய வாலியைச் சுக்கிரீவன் மறைந்திருந்து கொல்லும்படி இராமனை ஏவினனே; இச்சுக்கிரீவனைப் போலும் கொடிய பாவிகளும் உளராவரோ? இத்தீயவன் அன்புருவனாகிய வாலி பின் எங்ஙனம் தோன்றினான்?

தாரை வாலியை நோக்கி, "இராமன் சுக்கிரீவனுக்கு உதவியாக வந்திருக்கிறான்" என்று சொல்ல வாலி, "இராமன் தனக்கு யாதொரு குற்றமும் செய்யாத என்னிடம் போருக்கு வர அவ்வளவு அயோக்கியனல்லன்" என்று மறுமொழி கூறுகிறான். இதை நோக்கின் வாலி பிறரை மிகவும் கௌரவமாக மதிக்கும் தன்மையன் என்பதும், பிறரையும் தன்னைப் போல நல்லவர்களாகவே இருப்பார்களென்று எண்ணும் பெருங்குணமுடையன் என்பதும் துலங்குகின்றது. இப்பெருந்தகையாளனது பெருங்குணத்தின் முன்னர் அவனை மறைந்து நின்று அம்பெய்த பேடியாகிய இராமனது அற்ப

குணம் பேசும் தன்மையதாமோ? இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

இக் கட்டுரையில் அமைந்துள்ள கதையினையும் கம்பர் பெரும்பாலும் மாற்றியுரைத்தார். சுயநலக்காரனாகிய சுக்கிரீவனைச் சுயநலம் அற்றவனைப் போலவும், இராமன் நலத்திலேயே கண்ணுங்கருத்தும் உடையவனைப்போலவும் காட்டி, சீதையைக்கண்டு பிடிக்கவேண்டுமானால் வாலியைக் கொன்று வானரப்படைகளைக் கைப்பற்றினால் மட்டுமே முடியும்.'' என்று அனுமான் கூறியதாகப் பழியை அனுமன் மேல் போட்டு அதற்கு இணங்கி இராமன் சுக்கிரீவனை அழைத்துக் கொண்டு வாலியைக் கொல்வதாகக் கம்பர் கூறுகிறார்.

வாலியைத் தாரைதடுத்தனளாக வாலி, "நான் சுக்கிரீவனைக் கொல்ல மாட்டேன். அவனுடைய செருக்கை அடக்கி மீள்வேன்?'' என்று கூறினதாக வால்மீகி கூறுகிறார். இதனால் வாலியின் பெருந்தன்மை விளங்குகின்றது என்று நாம் எடுத்தியம்பினோம். வாலியின் இப்பெருந்தன்மையை மறைத்து கம்பர் அவனைச் சாதாரண மனிதனைப் போலக் கெட்டவனெனக் காட்டத்துணிந்து வாலி வதைப்படலத்தில் பதினான்காவது பாட்டில் "சுக்கிரீவனுடைய இன்னுயிர் குடித்து ஒல்லை மீள்குவல்'' என்றும், இருபத்தேழாவது பாட்டில் "அவன் உயிர் குடித்து உடன் வந்தாரையும் கருத்தழித்து எய்துவேன்'' என்றும் வாலி கூறினதாகக் கூறுகிறார்.

இராமன் சுக்கிரீவனோடு சேர்ந்திருப்பதை ஒற்றரால் உணர்ந்த அங்கதன் கூறினதாகத் தாரை கூறினள் என வால்மீகி மொழிய, கம்பர் அதனைத்தானே ஒற்றரால் தாரை அறிந்ததாகக்கூறினாள் எனப் பாடுகிறார். சுக்கிரீவன் முதன் முறை தோற்றோடிப் பின்னரும் வந்து போருக்கழைத்தனன் என்றும், அப்போது தான் தாரை வாலியைத்தடுத்தனளென்றும் வால்மீகி கூறுகிறார். கம்பரோ முதன் முறை வாலி சண்டைக்குப் புறப்பட்டபோதே தாரை தடுத்து மொழிந்தனள் எனக் கூறுவதோடு முதன் முறை செய்த போரில் சுக்கி

ரீவன் தோற்றோடியதையும், அவன் தன்னைத் தேடிவந்த இராமனைக்கண்டவுடன் இகழ்ந்துரைத்ததையும், இராமன் அவனைச் சமாதானப்படுத்தி மறுபடியும் போருக்கழைத்து வந்ததையும், வழியில் ஏழு முனிவர்களுடைய வரலாற்றை இராமனுக்குச் சுக்கிரீவன் மொழிந்ததையும் முற்றிலும் மறைத்துவிட்டனர். அத்துடன் நில்லாமல் கம்பர் வாலியும் சுக்கிரீவனும் சண்டையிட்டபோதுசுக்கிரீவன் களைத்து வந்து இராமனை யடைந்து வணங்கினதாகவும், இராமன் அவனைத் தேற்றி கொடிப் பூ சூட்டி அனுப்பியதாகவும் கூறுகிறார். நிகழ்ச்சியை இவ்வாறுகம்பர் மாற்றியதின் நோக்கம் இராமனுடையஇழிந்த சிந்தையினையும் சிற்றறிவையும் மறைப்பதே. மேலும் இந்நிகழ்ச்சிகளையும் அவர் ஒரே பாட்டில் பாடிவிட்டார். அது வருமாறு:—

"மலைந்தபோது இளைந்து இரவிசேய்
ஐயன்மாடணுகி
உலைந்த சிந்தையோடு உணங்கினன்
வணங்கிட உள்ளம்
குலைந்திடேல் உமை வேற்றுமை
தெரிந்திலம் கொடிப் பூ
மிலைந்து செல்கென விடுத்தனன்
எதிர்த்தனன் மீட்டும்."

தீயவனாகிய சுக்கிரீவன் தன்னுடன் பிறந்தவனாகிய வாலியைக்கொல்வதற்காக இராமனையும் துணைக்கழைத்துச் சென்று மறைவிடத்திருத்தி வாலியின் முன் சென்று நின்று போர் தொடுத்தான். முன்னரும் இவன் வாலி சென்ற குகை வாயிலை அடைத்தான். இத்தீய வெறுக்கத்தகுந்த கொடுமையை நினைக்க கம்பர் மனமும் வெறுத்ததில்லை. இராமனுடையவும், அவனைச் சேர்ந்தவர்களுடையவும் ஆகிய குற்றங்களை மறைத்து அவர்களிடம் இல்லாத பெருங்குணங்களை அவர்கள் மேல் சுமத்திக் கூறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் கம்பர் இலக்குவனுடைய பேச்சாகத் தமது கருத்தைக் கூறியது வியப்பே! அப்பாடல்கள் வருமாறு:—

"வள்ள(லுக்கு) இளையான் பகர்வான்
இவன் தம் முன்வாணாள்
கொள்ளக்கொடும் கூற்றினைக்
கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற் கரும்போர திசைகளின்
என்னும் இன்னல்
உள்ளத்தில் ஊன்ற உணர்வற்றி
லன் ஒன்றும் என்றான்"

"ஆற்றாது பின்னும் பகர்வான்
அறத்தாறு அழுங்க
தேற்றாது செய்வார்களைத் தேறுதல்
செவ்விது அன்றால்.
மாற்றான் எனத் தம்முனைக் கொல்
லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம்
என்? வீர என்றான்"

இப்பாடல்களின் கருத்து வருமாறு:— "இலக்குவன் இராமனை நோக்கி தன் அண்ணனுடைய உயிரை வாங்கும் எமனைப்போல உன்னை அழைத்துவந்திருக்கிறான். இந்த சுக்கிரீவன் என்று கூறி, பின்னரும் மனம் பொறுக்காமல் அறத்தாறு தவறி இவ்வாறு தகாத காரியங்களை செய்பவர் களை நாம் நம்புவது நல்லதில்லை. இந்த சுக்கிரீவன் பகை வனைப் போல தன்முன் பிறந்தவனாகிய வாலியைக் கொல்ல வந்து நின்றனனே. தன்னுடைய அண்ணனையே இவ்வாறு கொல்லத்துணிந்த இவன் அந்நியர்களாகிய நம்மிடத்து எவ் வாறு நடந்துகொள்வானோ? எனப் புகன்றனன்."

மேலே கண்டபடி இலக்குவன் கூற்றாகக் கூறிய கம்பர் அதற்கு இராமன் கூறினதாகக் கூறும் மறுமொழி வியப்பாக வே உள்ளது! அது வருமாறு:—

"அத்தா! இதுகேள் என ஆரியன் கூறுவான் இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்

ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?''
''வில் தாங்கு வெற்பன்ன விளங்கு எழில்தோள!
[மெய்ம்மை

உற்றார் சிலரல்லவரே பலர் என்பது உண்மை
பெற்றாருழைப் பெற்றபயன் பெறும் பெற்றி அல்லால்
அற்றார் நவைஎன்றலுக்கு ஆகுநர் ஆர்கொல் என்றான்''

இப்பாடல்களின் கருத்து வருமாறு:—''இராமன் இலக்குவனிடம், 'அப்பா! அறிவற்ற இம்மிருகங்களினிடம் ஒழுக்கத்தைப் பேசலாமோ? முன் பிறந்தாரிடம் பின் பிறந்தாரெல்லாரும் ஒற்றுமையாயிருந்தால் பரதனுடைய பெருமை விளங்குவதெப்படி? எத்தகையராயினும் உதவி பெற்றவர்களிடம் நாம் பயன்பெறும் அளவில் நிற்கவேண்டுமேயொழிய வேறில்லை. குற்றம் அற்றவர்கள் என்ற பேருக்கு உரியவராபவர் யாரோ உளர்?'' என்றனன்.

மேலே கண்ட இராமனுடைய பேச்சால் அவனும் சுக்கிரீவனைக் கெட்டவனென்றே ஒப்புக்கொள்கிறானென்பதும், யார் எப்படிப்பட்ட தீயவராக இருந்தாலும் தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் குற்றமில்லை எனச் சுயநலம் மட்டுமே கருதினன் என்பதும் விளங்குகிறது.

---

## நான்காவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 17-முதல் 18-முடிய)

**வாலி** இராமன் எய்த அம்புடன் கீழே கிடந்தான். ஆனால், அவன் தேவேந்திரனால் கொடுக்கப்பட்ட மாலையை அணிந்திருந்தபடியால் அவனுடைய உயிரும், ஒளியும், வலியும் போகவில்லை. இராமன் தம்பியுடன் வாலிமுன் வந்தான். வாலி இராமனைப் பார்த்து தருமத்தை அநுசரித்திருக்கும் சொற்களைச் சொல்லத் தொடங்கினான்.

வாலி, "தசரத மன்னனின் மகனாகிய நீ நான் வேறொருவனுடன் சண்டை செய்திருக்கும்போது என்மேல் அம்பெய்தனையே. நீ, இருப்பதை நான் அறியவில்லை. தாரை எவ்வளவு சொல்லியும் நான் உன்னை யோக்கியனென நம்பி என் தம்பியுடன் போருக்கு வந்தேன். வந்து பார்க்கும்போது உன்னைக் காணவில்லை. நீ இவ்வளவு தீய சிந்தை உடையவனென்றும், நல்லவனைப் போல உருத்தரித்தவனென்றும், புல்லால் மூடப்பட்டப் பாழுங் கிணற்றைப்போன்றவனென்றும், தருமத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு பிழைப்பவனென்றும் அறியாமற் போனேனே! உன் நாட்டிலாவது நகரத்திலாவது நான் வந்து செய்த தீமையுண்டா? உனக்காவது செய்த அவமானமென்ன? குற்றமற்ற என்னை ஏன் கொன்றாய்? உன்னுடன் போர் செய்ய வந்தேனா? கொடுமையே உருவானவனே! அரசருக்குரிய அன்னம், புலால் இவைகளைத் தின்கின்ற நீ மிகவும் கட்டுப்பாடில்லாத பாவி. பிறருடைய பொருளைக் காப்பாற்றுவதில் ஆசையுள்ளவன். அரசர்களுக்குக் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது இயற்கையன்னவோ? என் மயிர், தோல், எலும்பு இவை ஒன்றுக்கும் பயன்படா. என் புலாலும் பயன்படாது. மேலும் அரசர்கள் குரங்கு வேட்டையாடுவது உண்டா? ஐந்து நகங்களையுடைய மிருகங்களில் முள்ளம் பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமையாகிய இவ்வைந்துமே பிராமணரும் உண்ணலாமென்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்றிற்கும் உதவாத ஐந்து விரலுள்ள என்னை ஏன் கொன்றாய்? சண்டாளனாகிய நீ தசரதனுக்கு எப்படி பிள்ளையாகப் பிறந்தாய்? இந்த வல்லமையை உன்னுடைய மனைவியை எடுத்துப்போனவனிடத்தில் காட்டவில்லையே! நீ என் முன் வந்திருந்தால் நொடியில் உன்னை எமனுலகுக்கனுப்பி இருப்பேன். ஒருவராலும் எதிர்க்க முடியாத என்னை மறைந்திருந்து கொன்றாயே? நீ என்னிடம் சொல்லியிருந்தால் உடனே இராவணனிடமிருந்து சீதையை மீட்டுக்கொடுத்திருப்பேனே!" என்று நியாயமாகக் கடாவினான்.

இராமன் வாலியைப் பார்த்து "அறிவில்லாமல் என்னை இகழாதே. உன் தோற்றத்திற்குத் தகுந்தபடி உனக்கு

அறிவு ஏற்படவில்லையே. உலகில் சில அரசர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்படாத மலைகளையும் காடுகளையும் கைப்பற்றி அவைகளிலுள்ள உயிர்களையும் துன்புறுத்துகிறார்கள். ஆனால் இந்த நாவலந்தீவு முழுதும் எங்கள் ஆழுகைக்கு உட்பட்டவை. இப்போது எங்களில் பரதன் நீதி தவறாது அரசாளுகிறான். அவனுடைய கட்டளைப்படி நாங்களும் மற்ற அரசர்களும் உலகில் அறத்தை நிலை நிறுத்த அலைகிறோம். நாங்கள் அவனுடைய ஆணைப்படி தீயவர்களைத் தண்டித்து வருகிறோம். நீ நியாய விரோதமாக உன்னுடைய தம்பியின் மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறபடியால் உன்னைத் தண்டிப்பது நியாயமே. சுக்கிரீவன் எனக்கு நண்பனாயினான். அதனால் அவனுக்கு அரசாட்சியும் மனைவியும் கிடைக்க வேண்டியது. அவன் என் நன்மையை நாடுபவன். நான் உன்னைக் கொல்வதாக வாக்களித்திருக்கிறேன். நான் வாக்கைத் தவறுவேனா? நான் உன்னைக் கொன்றது நியாயமே. சுக்கிரீவன் எனக்குத் தோழன். அவனுக்கு நீ பகைவன். ஆதலின் நீ எனக்குப் பகைவனே. நீ செய்த பாவத்திற்காக உன்னைத் தண்டித்தேன். இன்னும் கேள்; வேட்டைக்காரர்கள் மிருகங்களை அவைகளின் புலாலுக்காக மறைந்திருந்து வேட்டையாடுகிறார்கள். அதனால் அவர்களுக்குப் பாவம் இல்லை. பல அரசர்களும் வேட்டையாடுகிறார்கள். நீ மிருகமானதால் நான் உன்னை மறைந்திருந்து கொன்றது நியாயமே. பிறருக்குத் துன்பந்தரும் அரச நீதி பயனற்றதென்று நீ கூறலாம். அரசர்கள் குற்றவாளிகளைத் தண்டிப்பது முறையே. அரசர்கள் எட்டுத் திக்குபாலகர்களின் தோற்றமாக உலகில் வாழ்கின்றனர். ஆதலால் என்னை நீ இகழ்வது சரியல்ல'' என்றான்.

வாலி இதைக்கேட்டு இராமன் செய்தது நியாய மென்றுணர்ந்து, ''இராம! நீ செய்தது நியாயமே என்னை மன்னித்தருள வேண்டும். சுக்கிரீவனைத் போலவே என் மகன் அங்கதனையும் காக்க வேண்டும். உன்கையால் சாக வேண்டுமென்ற ஆசையால் தாரை தடுத்தும் வந்தேன்'' என்றனன். இராமன் மகிழ்ந்து ''கவலைப்படாதே, பிராரப்த கர்மத்தை

உன்னால் விலக்கமுடியுமா?" என்றான். வாலி மன்னிப்புக் கேட்டான், இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இந்திரன் கொடுத்த மாலையை அணிந்திருந்தால் வாலிக்கு உயிர் போகவில்லையாம். ஈதெல்லாம் அறிஞர் ஒப்புமாறில்லை. இராவணேச்சுரன் முதலிய பெரியாரைக் கண்டு கிடுகிடுவென்று நடுநடுங்கித் தன் உயிரையே பாதுகாக்க முடியாமல் தட்டழிந்தவனாகிய இந்திரனுக்கு மற்றொருவர் உயிரைக்காக்கும் ஆற்றல் எங்ஙனம் அமையும்? அதிலும் அவன் கொடுத்த மாலைக்கே அத்தகைய ஆற்றல் இருந்ததென்பது அறிஞர் எள்ளி நகையாடற் பாலதாயுள்ளது.

வாலி இராமனை நோக்கி பலவாறுஇகழ்ந்துரைக்கிறான். அவன் கூறுவன எல்லாம் நெறிமுறை திறம்பாமலே உள்ளன. வால்மீகி முனிவரும் வாலி கூறினவெல்லாம் தருமத்தை அனுசரித்த சொற்கள் என்றே கூறுகிறார். மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காரும் பக்கம் 55-ல், "வாலி இராமனுடைய செய்கையைக் கண்டித்த வார்த்தைகள் தருமத்திற்கு விரோதமில்லையென்று வால்மீகி மகரிஷியின் கருத்தென்பதைப் பலர் கவனிப்பதில்லை. வாலி வதத்தைப் பற்றின இருவித அபிப்பிராயங்களுள் வால்மீகி எதை ஆமோதிக்கிறாரென்று இதனால் தெரிகிறது" என்று குறித்திருக்கிறார். நடுநிலைமை அறிவில்லாதவரும் மூடப்பற்றுடையாருமே இராமன் வாலியைக்கொன்றது முறையானது என்பர்.

வாலி இராமனைப்பற்றிக் கூறுவனவெல்லாம் முற்றிலும் நாம் அவனைப்பற்றி எடுத்துக் குறித்துள்ள உண்மைகளுக்கு மிகப்பொருந்தியுள்ளன. இராமன் பிறரால் மிகவும் நல்லவனென்றெண்ணும்படி பாசாங்கு செய்து வருபவனென்றும், புல்லால் மூடப்பட்டப் பாழுங்கிணறு போன்றவனென்றும், தீய சிந்தை உடையவன் என்றும், தருமத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு பிழைப்பவனென்றும் வாலி கூறுகின்றான். மேலும் அவன் இராமனைக் கட்டுப் பாடில்லாத பாவி என்றும், பிறருடைய பொருளைக் கைப்பற்றுவதில் ஆசையுள்ளவனென்றும் எடுத்தியம்புகின்றான். இவையனைத்தும் நாம்

முன்னர் அங்கங்கே இராமனுடைய செயல்களிலிருந்து விரித்துரைத்து எடுத்துக்காட்டி நிலை நாட்டியவைகளே. முனிவனைப் போல உருவக்தரித்துப் பிறரை ஏமாற்றி தனக்கு யாதொரு தீமையும் செய்யாதவனாகிய வாலியை, தனக்கு யாதொரு தீமையும் மனத்தாலும் எண்ணாததோடு மிகவும் நல்லவனென்று நினைத்திருக்கும் வாலியை மறைந்திருந்து வஞ்சகமாகக் கொன்றான் இராமன். என வாலி எடுத்தியம்புவது கல்நெஞ்சையும் கரைக்குமன்றோ! வாலி கூறுவனவற்றைமறு முறையும் படிக்கும்படி நண்பர்களை வேண்டுகின்றோம்.

மனு நூலில் முள்ளம் பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமை இவைகளை பிராமணரும் அரசரும் உண்ணலாமென்று கூறப்பட்டிருக்கிறது எனவால்மீகி வாலி கூற்றாகக்கூறுகிறார். இதனால் ஆரியருடைய கொலைபாதகத்தன்மைஇனிதுவிளங்கும். மலைக்காடுகளிலிருக்கும் அசுத்தங்களை யுண்ணும் முள்ளம் பன்றிப் புலாலும், நாட்டிலுள்ள மனிதர்களுடைய மலம் முதலிய அசுத்தங்களைத்தின்னும் பன்றிப புலாலும் இவர்களுடைய உடலை வளர்க்க இன்றியமையாதனவே! அதிலும் பார்ப்பனர்களும் அரசரும் அவைகளை உண்ணலாமாம். இதனால் அப்பன்றிகள் பெற்ற பேறே பெரும்பேறு! பார்ப்பனரால் கொனறு உண்ணப்பெறவேண்டுமானால் அப்பன்றிகள் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கவேண்டும்!

இனி, இராமன் கூறும் மறுமொழியை ஆராய்வோம். இராமன் வாலியை நோக்கி அறிவில்லாமல் இகழ்ந்துரையாடுகின்றானே யொழிய, அறிவுடைய பேச்சு ஒன்றும் பேசவே இல்லை அவன் பேசும் அயோக்கியத்தனங்கள் எல்லாம் மிகவும் தெளிவாக சீனிவாசய்யங்கார் இடந்தோறும இடந்தோறும் தவறாமல் எடுத்துத் தமது மொழிபெயர்ப்பில் அங்கங்கே குறிப்பெழுதியிருக்கின்றார். ஆதலின் நாம் அவர் எழுதும் குறிப்புகளை யெல்லாம் நமது கட்டுரைகளை ஆர்வத்தோடு படிக்கும் அன்பர்களனைவரும் தெரிந்து கொள்ளுமாறு குறித்து அமைவோம். அவர் கூறுவனவற்றைக் கூட்

டாமலும் குறைக்காமலும் உள்ளபடியே முன்னர் நாம் குறித்து வருமாறு எழுதுவோம்.

இராமன் வாலியைப்பார்த்து, ',அறிவில்லாமல் என்னை இகழாதே. உன் தோற்றத்திற்குத் தகுந்தபடி உனக்கு அறிவு ஏற்படவில்லை'' என்று கூறுகிறான். இந்த இடத்தில் நமது சீனிவாசய்யங்கார், பக்கம் 59-ல் இது பொதுவான தூஷணையே தவிர பதிலாகாது என்று குறிக்கிறார். இது உண்மையே.

இராமன், ''உலகில் சில அரசர்கள் தங்களுக்கு உட்படாத இடங்களைக் கைப்பற்றி அங்குள்ளாரைத் துன்புறுத்துகின்றனர்'' என்று கூறுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் (பக்கம் 59) இராமனுடைய செய்கை இவ்விதமே என்று எழுதுகிறார். இது மிகவும் பொருத்தமானதன்றோ? இராமன் அயோக்கியத்தனமாகக் கிட்கிந்தை புகுந்து கள்ளத்தனமாகத்தமிழ் மன்னனாகிய வாலியைக்கொன்று அவனைச் சேர்ந்தாரையும் மனம் புண்படச் செய்தனனன்றோ?

இராமன் இந்த ''நாவலந்தீவுமுழுதும் எங்கள் ஆளுகைக் குட்பட்டவை'' என்றனன். இதேமாதிரி முன்னர் கூறிய போது கண்டித்ததைப் போலவே இங்கும் இதைக்கண்டித்துச் சீனிவாசய்யங்கார்குறிப்பெழுதுகிறார். அதுவருமாறு:-(பக்கம் 59)''இது உண்மையல்ல. முன் காலத்தில் எப்பொழுதாவது அப்படியிருந்தாலும் தசரதருக்கு இந்த அதிகாரமில்லை; இராமனுக்குக் கிடைக்காது. இப்படியிருந்தால் வாலி, உரோம பாதன், ஜனகன், கேகயராஜா முதலிய அரசர்கள் தசரதருக்குக் கப்பங்கட்டி வந்தார்களா? இதற்குப் பிரமாணமில்லை'' எக்காலத்திலும் அப்படியில்லை என்பதே ஆராய்ச்சியாளர் முடிபு என்பதே எமது முடிபும்.

எங்களில் பரதன் நீதி தவறாது ஆளுகின்றான் நாங்கள் அவனுடைய ஆணைப்படி தீயவர்களைத் தண்டித்து வருகிறோம்'' என்று இராமன் கூறுமிடத்துச் சீனிவாசய்யங்காருடைய குறிப்புகள் வருமாறு (பக்கம் 6)) ''பரதன் அரச

னல்ல; இராமனுடைய பாதுகைகளை அரசனுடைய ஸ்தா னத்தில் வைத்துதான் சேவகனாக ராஜ்ய காரியங்களை நடத் துகிறான். மேலும் இராமனையாவது மற்ற எவனையாவது மேற் சொன்னபடி ஆக்ஞை செய்ததாகத் தெரியவில்லை. பாதுகைகளைக் கொடுக்கும்போது பரதன் இப்படி யாதொன் றும் சொல்லவில்லை. தான் ஆளுவதை ஒப்புக்கொள்ளவு மில்லை. இராமனே "நீ நாட்டில் ராஜாவாக இரு. நான் காட்டில் ராஜாவாக இருக்கிறேனென்று அபிஷேகம் செய்து கொள்ளுகிறான்" இந்தக் குறிப்புக்களால் இராமன் கூறுவன வெல்லாம் பொய்யுரைகளே என்பது வெட்டவெளிச்சமாகின் றது. கட்டுப்பாடில்லாத இராமன் எதை வேண்டுமானாலும் பேசுவானல்லவா?

"நீ நியாய விரோதமாக உன்னுடைய தம்பியின் மனை வியை வைத்துக்கொண்டிருக்கிறபடியால் உன்னைத் தண்டிப் பது நியாயமே" என்று இராமன் கூறினான். இந்த இடத் தில் மொழி பெயர்ப்பாளர் ஐயங்கார் (பக்கம் 61-ல்) "இங்கே சிலர் இப்படிச் சமாதானம் சொல்லுகிறார்கள். தமையன் இறந்த பிறகு அவனுடைய பாரியைத் தம்பி கைப்பற்றலாம். சுக்கிரீவன் வாலி குகையில் இறந்தானென்று நம்பி அப்படிச் செய்தான். (அதாவது தாரையைக் கைப்பற்றி அனுபவித் தான்) உண்மையாக இறந்த பிறகும் அப்படியே செய்தான். அது தோஷமல்ல. ஆகையால் இராமன் அவனைக் (சுக்கிரீ வனை) கொல்லவில்லை. தம்பியின் பாரியைக் காப்பாற்று வது பாபம். மேலும் அவன் உயிரோடிருக்கும்போது செய் வது மகாபாபம். இத்தத்தருமம் கேவலம், மனிதர்களுக்குள் வழங்கவேண்டுமென்று நமது ஸ்மிருதி கர்த்தாக்கள் விதித் திருக்கிறார்கள். மிருகங்களுக்கு ஏற்படவில்லை. ஆகையால் இந்தக் காரணத்திற்காக வாலியைக் கொன்றது நியாயமல்ல." "அவன் மிருகமல்ல, மனுஷ்யர்களைப் போன்றவன். அதர் மாதர்மங்களுக்குக் கட்டுப்பட்டவன். அதற்காக இராமன் கொன்றான்" என்றால் "மனுஷ தர்மத்தின்படி அவனுடன் தரும யுத்தஞ் செய்திருக்கவேண்டும். கேவலம் மிருகமாகப் பாவித்து அவனை எப்படியாவது கொல்வதற்கு நியாயமில்

லை'' என்று தெளியக் குறித்திருக்கிறார். இதனால் எப் படிப் பார்த்தாலும் இராமன் செய்தது அனியாயமே என்பது விளங்குகிறது. நமது ஐயங்கார் மேலே கண்ட குறிப்பில் ''தமையன் இறந்தபின் தம்பி தமையனுடைய மனைவியைக் கைப்பற்றலாம். தம்பி மனைவியை தம்பி இறந்தபின் தமை யன் கைப்பற்றலாம். இந்தத் தருமம் மனிதர்களுக்கென்று ஸ்மிருதி கர்த்தாக்கள் விதித்திருக்கிறார்கள்'' என்று எழுதி யிருக்கிறார். இதனால் ஆரியர்கள் தமையன் மனைவியைத் தம்பியும் தம்பி மனைவியைத் தமையனும் தமையனோ தம்பி யோ இறந்தபின் கைப்பற்றும் வழக்கத்தை உடையவர் என் பது தெரிகிறது. கணவன் இறந்தபின் கண்டபேர்களுக்கெல் லாம் பெண்டாட்டியாயிருப்பதிலும் உடையவன் ஒருத்தனிடம் இருப்பது மேலன்றோ! இதனை உணர்ந்திருந்தும் தங்கள் ஸ்மிருதி கர்த்தாக்களுடைய விதிகளுக்கு மாறாகத் தற்காலத் திய பார்ப்பனர் விதவா விவாகத்திற்கு மாறுபட்டுப் பேசுவது வியப்பாகவே உள்ளது. இராமன் வாலியைச் சுக்கிரீவனு டைய மனைவியைக் கைப்பற்றியதற்குத் தண்டித்துத் தம்பி மனைவியைத் தன் மகள்போல் கருதவேண்டும் என்கிறான். ஆனால் தாய்போல் கருதவேண்டிய தமையன் மனைவியை பெண்டாண்டபோது பேசாமல் பார்த்திருக்கிறான். இதனால் தன் மகளைச் சேருவது தவறு. ஆனால் தன் தாயைப் புணர லாம் என்று இராமன் கூறுவதுபோலுள்ளது. இது தசரத மன்னவன் கண்காண கோசலை முதலியோரை யாகத் தலை வர்கள் கைப்பற்றிப் புணர்ந்து பெற்ற பிள்ளைகள்தானே இரா மன் முதலியோர். அதனால் இராமனுடைய நீதி ஒழுக்கமுறை இப்படியிருப்பது அறிஞருக்கு வியப்பைத்தருவது அன்று.

''சுக்கிரீவன் எனக்கு நண்பனாயினான். அதனால் அவ னுக்கு அரசாட்சியும் மனைவியும் கிடைக்கவேண்டியது'' என்று இராமன் கூறுகிறான். இந்த இடத்தில் அய்யங்கார் பின்வருமாறு (பக்கம் 62-ல்) குறிக்கிறார். ''நியாயா நியா யத்தை விசாரிக்காமல் எப்படிக் கிடைக்கும்? சுக்கிரீவனை விசாரித்தவர் வாலியையும் விசாரித்து இருவர்களின் நியாயா நியாயத்தைச் சீர்தூக்கிப் பிறகல்லவோ தீர்ப்புச் செய்யவேண்

டும்? தண்டித்த பிறகு காரணம் சொல்லு வதில் பிரயோஜன மென்ன? ஒரு வேளை வாலி தன் குற்ற த்தை ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் செய்யச் சம்மதித் தால் அப்பொழுது இராமன் என்ன செய்வான்? இராவண னிடத்தில் நடந்து கொண்ட நியாயத்தைக்கூட வாலியிடத் தில் காட்டவில்லை. அங்கதனைத் தூதனுப்பினார். சுகசார ணர்களிடத்தில் இராவணனுக்குச் சொல்லியனுப்பினார். முதல் நாள் யுத்தத்தின் முடிவில் உன் சம்மதமென்ன என்று கேட்டார். தன்பாரியை எடுத்துப்போன இராவணனிடத்தில் இப்படித் தருமயுத்தத்தை அனுஷ்டித்த ரகுவீரன், தன்பாரி யை எடுத்துப்போகாமலும் தனக்கு யாதொரு அபசாரமும் செய்யாமலுமிருக்கும் வாலியிடத்தில் அதருமயுத்தம் செய்து அவனைக் கொன்றான். சுக்கிரீவனுக்காகக் கொன்றேனென் றால் இப்படியே விபீஷணனுக்காக இராவணனையும் மறைந்து கொல்வது தருமமாகும். இந்திரன் கொடுத்த தங்க மாலையால் வாலியின் பகைவர்களுடைய பலம் வர வரக் குறைந்து வாலியிடத்தில் சேருகிற தென்ற காரணத்தால் அவனை மறைந்து கொன்றாரென்று சிலர் சொல்லும் சமா தானம் தகாது. இந்திரனைப் பற்றியாவது மாலையைப் பற் றியாவது இராமனுக்கு மாருதியும் சொல்லவில்லை. சுக்கிரீ வனும் சொல்லவில்லை''. இக்குறிப்பில் இராமன் வாலியை மறைந்து கொன்றது எவ்வாற்றானும் தகாத பாவச் செயலே என்பது விளங்குகிறது. தனக்கு வேண்டியவனாகச் சுக்கிரீவ னிருந்தால் அவன் பொருட்டு எத்தகைய தீயசெயலையும் செய்யலாமென்பதே இராமனுடைய தீய சிந்தையின் முடிவு போலும். இராமன் வாலியை மறைந்து நின்று கொன்ற தற்கு அவனுடைய பயங்கொள்ளித்தனமும் பேடித்தனமுமே காரணமல்லாது வேறுகாரணம் இன்மையும் இதனால் தெளி வாகிறது.

இராமன் ''சுக்கிரீவன் என் நன்மையை நாடுபவன். அத னால் நான் உன்னைக் கொன்றேன்'' என்றான். இவ்விடத் தில் நமது ஐயங்கார் பக்கம் 62ல் ''வாலி அப்படிப்பட்டவ னில்லை யென்று இராமனுக்கு எப்படித்தெரியும்? அப்படிப்

பட்டவனை அலட்சியம் செய்யத் தகுமா?'' என்று எழுதுகிறார். இவ்விராமன் கூற்று அறிவிலாதார் கூற்றாகவே உள்ளது.

இராமன், "நான் உன்னைக் கொல்வதாக வாக்களித்திருக்கிறேன். நான் வாக்கைத் தவறுவேனா? எனக் கூறுகிறான். இவ்விடத்தில் நமது ஐயங்கார் பக்கம் 62ல் இருகிறத்தையும் விசாரிக்காமல் பிரதிக்ஞை செய்தது தவறு. இப்படி முன்யோசனை யில்லாமல் தசரதர் கைகேசியிடத்திலும் விசுவாமித்திரரிடத்திலும் செய்தார். இராமனும் மானைப்பிடித்துத் தருவதாகச் சீதையிடத்தில் பிரதிக்ஞை செய்தார். ஆகையால் இது குலதருமமென்றே தெரிகிறது'' என்றெழுதுகிறார். இதனால் தசரதன் இராமன் முதலியோர் சுயநலம் கருதி "எண்ணித்துணிக கருமம்'' என்ற வேத வாக்கை மறந்து மனம்போன போக்கெல்லாம் போகும் அறிவற்றவர்களாக இருக்கவேண்டும். இல்லை யென்றால் சுயநலங்கருதித் தாயையும் பெண்டாளக்கூடிய இழிந்த வெறுக்கத்தகுந்த ஒழுக்கத்தினராதல் வேண்டும்.

இராமன், "நான் உன்னைக்கொன்றது நியாயமே. நீ செய்த பாவத்திற்கு உன்னைத் தண்டித்தேன்'' என்கிறான். இந்த இடத்தில் (பக்கம் 63) சீனிவாசய்யங்கார், "இது இராமனுக்கு நியாயமென்று தெளிவாக விளங்கினாலும் பலமான ஆட்சேபணைக்கு இடங் கொடுக்கிறது'' என்றும், வாலி செய்தது பாபமே என்று விவாதமில்லாமல் முடிவு செய்யப்படவில்லையே என்றும் எழுதியிருக்கிறார்.

"அரசர்கள் புலாலுக்காக வேட்டையாடுகிறார்கள்'' என இராமன் கூறுகிறான். பக்கம் 64ல் சீனிவாசய்யங்கார், "தன் தோலும், பல்லும், எலும்பும், மாமிசமும் உபயோகப்படக் கூடாதவை என்று வாலி நிரூபித்து விட்டான். அரசர்கள் சிங்கம், புலி, யானை, கரடி முதலியவைகளுடன் குரங்குகளையும் சேர்த்து வேட்டையாடினதாகக் கேள்விப்படவில்லை'' என்று குறித்துள்ளார், இராமன் வாயில் வந்ததைக் கூறினால் அதை அறிஞர் ஒப்பவேண்டாமா? தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்பவனே உண்மையில் பெரியவன்.

இராமன், "நீமிருகமானதால் நான் உன்னை மறைந்து நின்று கொன்றது நியாயமே எனப்புகன்றனன். இதைப் பற்றி நமது ஐயங்கார் பக்கம் 64-ல் தான் மறைந்திருந்து அடித்ததைச் சாதிப்பதற்கு வாலியை மிருகமாக இராமன் ஏற்படுத்துகிறான். சுக்கிரீவனுடைய பாரியைக் கைப்பற்றி னானென்ற பாவத்தை அவன் மேல் சுமத்தும் பொழுது இதை மறந்து அவனைத் தன்னைப்போன்ற மனிதனாக எண்ணிப் பேசுகிறான் எனக்குறித்தனர். இதனை ஆராயும் போது முன்னே வந்தால் கடிப்பதும் பின்னே போனால் எறி வதுமாக இராமன் பேசினன் என்பது புலப்படுகிறது.

"பிறருக்குத் துன்பந்தரும் அரச நீதி பயனற்ற தென்று நீ கூறலாம்" என இராமன் இட்டுக்கட்டிப் பேசுகிறான். இவ் விடத்தில் நமது ஐயங்கார் (பக்கம் 64) "அவ்வித சந்தேகம் இருக்கிறதாக வாலி தெரிவிக்கவில்லை" என்று குறித்தனர். இதனால் இராமன் இல்லாததும் பொல்லாததும் பேசும் தன்மையன் என்பது வெளிப்படையாகிறது.

"அரசர்கள் எட்டுத் திக்குப்பாலகர்களின் தோற்றமாக உலகில் வாழ்கின்றனர். ஆதலால் என்னை நீ இகழ்வது சரி யல்ல" என இராமன் கூறினன். இங்கே நமது ஐயங்கார் "இது இராமனுக்கு ஒத்திருக்கும் பட்சத்தில் அவனைப் போன்ற அரசரான வாலிக்கும் இராவணனுக்கும் இது ஒத்தி ருக்கும்" எனப்பக்கம் 64-ல் குறிக்கிறார். தான் அரசனா னதால் தன்னை வாலி இகழ்தல் கூடாதாம்! என்னே இராம னுடைய நியாயத்தின் அழகு! நமது ஐயங்கார் கூறுமாறு இவ்விராமன் வாலியும் தன்னைப்போல அரசனென்பதை உணராமல் பேசுகிறான். இவ்வளவுக்கு அறிவில்லையோ.

இராமன் பேசி முடிந்தவுடன் வாலி தான் செய்தது பிழை யென உணர்ந்து இராமனிடம் மன்னிப்புக் கேட்கின்றனனாம்! இதைப் போலும் கட்டுக்கதை உலகில் உளதாமோ? தன் னைக்கொன்ற பாதகனாகிய இராமனிடம் மன்னிப்புக் கேட்

டல்லவது? ஈதெல்லாம் ஆரியர் புனைச்சுருட்டுக்களே! இதனை நமது மொழிபெயர்ப்பாளர் சீனிவாச அய்யங்கார் வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டுகிறார். அவர் பக்கங் கள் 65, 66-ல் பின் வருமாறு எழுதுகிறார்.

"இதை விசாரித்தால் ஒரு ஆட்சேபம் ஏற்படுகிறது. வாலி சொன்ன விஷயங்களுக்கு இராமன் ஒரு விதத்திலும் திருப்தி யான சமாதானம் சொன்னதாகத் தோன்றவில்லை. அப்படி யிருக்க திடீரென்று வாலி இராமனிடத்தில் தோஷமில்லை யென்றும், தான் செய்தது பிசகென்றும் ஒப்புக்கொண்டா னென்று சொல்லப்படுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கவேண்டும். வாலியின் காரணங்களுக்கு ஏதோ தகுந்த பதில் சொல்லி அதை வாலி ஒப்புக்கொண்டிருக்கவேண்டும். அப்படியிருந்தால் அந்தப்பாகங்கள் நமக்குக் கிடைத்திருக் கும். இராமாயணத்தில் காணப்படவில்லை நஷ்டமாயின; அல் லது, இராமன் ஈசுவரன் அவர் செய்தது பிசகாயிருக்காது; ஆனால் காரணங்கள் மாத்திரம் நமக்குத்தெரியவில்லை என்ற மூடபக்தியாலும் மதாபிமானத்தாலும் பிற்காலத்தில் இந்த சுலோகங்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் இவ் வளவிற்கும் வேரைக்களைந்து பார்த்தால் ஒன்று புலப்படுகி றது. வாலி தான் வரும் வரையில் சுக்ரீவனைக்குகைத் துவா ரத்தில் இருக்கச்சொல்லி ஆணைவைத்துப்போனான். அதை மீறித்தானாகவே ஏதோ ஊகித்து அவன் கிஷ்கிந்தைக்குத் திரும்பி வந்தது தவறு. பட்டத்தை ஒப்புக்கொண்டதும் தவறு. தாரையைக் கைப்பற்றினதும் தவறு. ஆகையால் வாலி அவனைக் கோபித்துத் தண்டித்தது ஞாயமாகும். அப் பொழுது வாலி செய்த பாபம் என்ன? மேலும் வானரர்களுக் குள் சகோதரர்களின் பாரியை கைப்பற்றுவதால் யாதொரு தோஷமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு யாதொரு பிராயச் சித்தமும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், இராவணன் வீட்டிலிருந்த சீதையின்மேல் சந்தே கித்து இராமன் அவளுடைய வார்த்தையை நம்பாமல் அக்கி னிப்பிரவேசம் செய்யச் சொன்னார். அதுவும் போதாமல் அயோத்திக்கு வந்த பிறகு யாரோ ஊரும்பேருமில்லாத ஒரு

வன் எதையோ சொன்னான் என்று பட்டமகிஷியும் பூரண கர்ப்பிணியுமான ஜானகியைக் காட்டிற்குத் துரத்தினார். ஆகையால் மிருகங்களுக்குள் அது ஒரு தோஷமாக ஏற்படாது. விராதன் தொட்டெடுத்துத் தூக்கிக்கொண்டு போன பிறகு இராமன் என்ன பிராயச் சித்தஞ் செய்தாரோ தெரியவில்லை.''

மேலே கண்டது முழுதும் நமது ஐயங்காருடைய கூற்றே. அதை மறுபடியும் நண்பர்கள் படிப்பார்களாக. இம்மொழி பெயர்ப்பாளர் ஐயங்காராக இருந்தும் நடுநிலைமை தவறாது எழுதுகின்றார். இதனால் சுக்ரீவன் செய்ததெல்லாம் முற்றிலும் பிழையென்பதும், வாலி செய்ததெல்லாம் நியாயமானவை யென்பதும், இராமன் தீயவனாகிய சுக்ரீவனுடன் சேர்ந்து வாலியைக் கொன்றது பெரும்பாதகம் என்பதும், இராமன் வாலியைக்கொல்லக் காரணமாகச் சுக்கிரீவன் மனைவியை வாலி கைப்பற்றியதைக் கூறியது பொருந்தாதென்பதும், ஏனெனில் முதலில் வாலியின் மனைவியைச் சுக்ரீவன் கைப்பற்றியதற்கு யாதொரு பிராயச் சித்தமும் இராமனால் சொல்லப்படவில்லை யென்பதும், இராமன் சீதையைப் பலவாறு துன்புறுத்திக் காட்டுக்கனுப்பியது மிருகச்செயல் என்பதும், விராதனால் பரிசுத்தமிழந்த சீதைக்கு இராமன் பரிகாரமொன்றும் செய்யாததால் இராமன் உணர்ச்சியற்றவனே என்பதும் நமது ஐயங்காருடைய முடிபுகளாகத் தெரிய வருகிறது. இவ்வளவும் மிகவும் உண்மையான முடிவுகளே.

வாலி இராமனை நோக்கி, "நான் உன் கையினால் செத்து நல்லகதியடைய வேண்டுமென்றே தாரை தடுத்தும் மறுத்துவிட்டு வந்தேன்'' என்று கூறினானாம். இதைப்போலும் முழுப் பொய்யை வேறெங்கு காண்பது? இதனை நமது ஐயங்காரும் முழுப்பொய் என்றே கூறுகிறார். அவர் பக்கம்67ல் "ஆனால் தான் சுக்கிரீவனுடன் யுத்தஞ் செய்யும் பொழுது இராமன் மறைந்து நின்றுகொல்வானென்று எப்படித்தெரியும்? நேரில் வந்து யுத்தஞ் செய்தால் இராமனை எமலோகத்திற்கு அனுப்புவேனென்று வாலி சொன்னதால் அப்பொழுது மர

ணம் நேராது. மேலும் அவன் இராமனைக் குற்றஞ்சாட்டி நிந்தித்ததற்குக் காரணம் என்ன? ஆகையால் இந்த வாக்கியங்கள் பொருந்தவில்லை'' என விளங்க உரைத்தார். இப்பொருந்தா உரைகளெல்லாம் பிற்காலத்தாருடைய இடைச் செருகல்களே.

இராமன் கடைசியாக வாலியை நோக்கி, ''கவலைப் படாதே. பிராரப்த கர்மத்தை உன்னால் விலக்க முடியுமா'' என்று கூறுகிறான். இவ்வாறு கூறும் அறிஞனாகிய இராமன் தன்னுடைய மனைவியை இழந்தது பிராரப்த கருமமென்று அவளைத்தேடாது வாளா இருந்திலனே! ஒருவனைக் கொன்றுவிட்டுப்பிராரப்த கருமம் என்று கூறுவதா? என்னே இவன் தீயமதி! நமது மொழி பெயர்ப்பாளரும் பக்கம் 67-ல் "சீதையை எடுத்துப்போனதும் பிராரப்த கருமமென்று இராமன் ஏன் சும்மா இருக்கக்கூடாது?'' எனக் குறிப்பெழுதியிருக்கிறார். இனி கம்பர் புரளியை ஆராய்வோம்.

கம்பர் எதனை எப்படி மாற்றி எழுதினாலும் சுக்கிரீவன் வாலியோடு சண்டை செய்ததையும் அவனைக்கொல்ல இராமனை அழைத்து வந்ததையும், இராமன் கள்ளப்போர் செய்ததையும் உள்ளபடியே கூறி, அச்செயல்களில் தமக்குள்ளதாகிய வெறுப்பையும் இலக்குவன் வினாவால் வெளிப்படுத்துகிறார். இதனை விளக்கும் பாடல்களை நாம் போன கட்டுரை 3-ல் குறித்தோமெனினும், அன்பர்கள் அவைகளின் பொருள் வேறுபாடுகளைத் தெளியும் பொருட்டு ஈண்டும் குறிக்கின்றோம்.

''வள்ளற்கு இளையான் பகர்வான் இவன்தம்முன் வாணாள்
கொள்ளக்கொடும் கூற்றுவனைக் கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற்கரும் பேரறிந்து இசைகலன் என்னும் இன்னல்
உள்ளத்தின் ஊன்ற உணர்வுற்றிலன் ஒன்றும் என்றான்.''

இதன் பொருள்:—இலக்குவன் இராமனுக்குக் கூறுவான், ''இந்தச் சுக்கிரீவன் தன் அண்ணனுடைய உயிரை வாங்க எமனாகிய உன்னைக் கொண்டு வந்தான். குரங்குகள்

செய்யும் நல்ல சண்டையையும் ஒழுங்காகச்செய்ய இசையமாட்டேன் என்கிறான். இது என் மனதை வருத்துகிறது'' என்றான். இப்பாடலில் சரியாக விளங்காத பகுதி "குரங்கின் எள்ளற் கரும்போர் இசைகலன்'' என்பது. இப்பாடலுக்குப் பல பாடபேதங்கள் உள. அவைகளை கம்ப ராமாயண உரையாசிரியர் கே. கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் தெளிவாக எழுதியிருக்கிறார். அவை அவருடைய கிட்கிந்தா காண்ட உரையில் பக்கம் 215-ல் உள்ளன. அவை வருமாறு (1) குரங்கின் எள்ளற்கரும் போர்செய எண்ணினன்:—இதற்கு கிருஷ்ணமாச்சாரியார் கூறும் பொருள் யாதெனில், உள்ளே தமையனைக்கொல்வதற்குக் கூற்றுவனை உடனழைத்து வைத்துக்கொண்டு வெளியே குரங்குகள் சாமானியமாகச் செய்யும் இகழ்ச்சிக்கிடமில்லாத போரைச் செய்யக்கருதினனே என்பது. இப்பாட பேதம் ஒருவாறு இருக்கிறது. இதனினும் சிறந்த பாடபேதம் ஒன்று அதன் கீழ் அவராலேயே குறிக்கப்படுகிறது. இராமனுடைய புகழைக் கெடுக்கும் முறையில் அமைந்துள்ளதால் அதனை அவர்கடைசியாகக் குறித்தார். அது கம்பராலேயே பாடப்பெற்றதாயிருந்தாலும், அன்றிப் பிறரால் இடைச் செருகலாயிருந்தாலும் இயற்கைக்கு மாறுபடாத பொருளை அது தருமாறே அமைந்துள்ளது. அதன் பொருள் யாதெனில், இவன் தன் அண்ணனைக்கொல்ல யமனாகிய உன்னைக்கொணர்ந்தான். நாமும் இவனைக் குரங்கென்று நினைத்து அறிவுடைய மேலோரால் இகழத்தக்க கள்ளச்சண்டையைச் செய்வதற்காக இங்கு வந்திருக்கிறோம். இதுவே என் மனதைப் புண்ணாக்குவது'' என்பது. அப்பாடபேதம் வருமாறு:—"குரங்கென்று, எள்ளற்குறும்போர் செய்ய எய்தினம்'' இப்பாட பேதத்தை கிருஷ்ணமாச்சாரியர் அதே 215ம் பக்கத்தில் குறித்திருக்கின்றார்.

அதற்கு அடுத்ததாக சுக்கிரீவனே தன் அண்ணனையே கொல்லவந்து நின்றான். இப்பாதகச் செயலைச் செய்பவனை நாம் நம்புவது தகாது. அண்ணனையே கொல்லவந்தவன் அந்நியராகிய நம்மிடம் எவ்வாறு உண்மையுடையவனாக இருப்பான்? எனப் புகல்வதாக்க் கம்பர் எழுதுகிறார். இப்பாடலை முன் கட்டுரையில் குறித்தாம்.

இதற்கு இராமன் கூறுவதாகக் கம்பர், "குரங்குகளிடத்தில் நாப ஒழுக்கத்தை எவ்வாறு எதிர்பார்ப்பது? உலகில் நல்லவர்கள் சிலரே, தீயவர்கள் பலரே. குற்றமில்லாதவர் யாவரே உளர்? ஆதலின் சுக்கிரீவன் எத்தகையவனானாலும் அவனிடம் நாம் பயனையே கொள்வோம்" எனப்பாடுகிறார். அவைகளையும் முன் கட்டுரையிற் குறித்தாம். இதனால் இலக்குவன் கூறியதை இராமன் ஒப்புக்கொண்டு தம்முடைய நன்மை கருதியே சுக்கிரீவனுக்கு உதவி செய்யவேண்டியதிருக்கிறது என்று கூறுகிறான். கம்பர் தம்முடைய கருத்தை இங்கே விளங்க வைத்தார்.

ஆனால் கம்பர் வாலி மேல் இராமன் அம்பெய்தலும் வாலி அதனை இழுத்து நோக்கி அதில் இராமன் பெயரைக் கண்டு அவனை இகழ்ந்தானெனப் புதுக்கதை புனைகிறார். அத்துடன் இராமனுடைய பெயரை மந்திரங்களுக்கெல்லாம் மூல மந்திரமெனவும் கூறி உலகினரை மயக்கத்தில் ஆழ்த்துகிறார்.

தன் முன் வந்து தோன்றிய இராமனை நோக்கி வாலி கூறுவதாகக் கம்பர் பாடுவனவெல்லாம் புதுமாதிரியாக இருந்தாலும் வால்மீகி கூறுவதைவிடக் கடுமையாக இருக்கின்றன. வாலி, "மனைவியைப் பிரிந்ததால் நீ அறிவிழந்தனையா? உன் பெண்டாட்டியை ஒருவன் தூக்கிப்போக அதற்காக என்னை வந்து கொல்ல உங்கள் மநு நீதி கூறுகிறதோ? நீ வாலியைக்கொல்லவில்லை, அரச நீதி முறைமையையே கொன்றாய். நீ என்னை மறைந்து நின்று கொன்றதோடு நிராயுதனாக நின்ற என்னைக் கொன்றாய். இது தான் உன்போர் முறையோ?" என்று இராமனை வினாவியதாகக் கம்பர் எழுதுகிறார். இவ்வளவும் அறிவுக்குப் பொருத்தமான வினாக்களே.

இராமன் அவ்வினாக்களுக்கு மறுமொழியாக "யாதொரு குற்றமற்ற உன் தம்பியைக் கொல்லத் துணிந்ததோடு அவன் உனக்கடைக்கலம் என்றபின்னரும் அவனைத் துன்புறுத்தி

அவன் மனைவியையும் கைப்பற்றினாய். அதனாலும் சுக்கிரீவன் என் நண்பனாதலாலும் உன்னைக்கொன்றேன்'' என்று கூறியதாகக் கம்பர் எழுதுகிறார். சுக்கிரீவன் வாலியின் மனைவியைக் கைப்பற்றியதையும், அதற்காகவே வாலி அவனை ஒறுத்தான் என்பதையும் உணர்ந்தும் இராமன் இவ்வாறு வாலிமேல் பழி சுமத்துவது தகாது என்பதை முன்னரே சீனிவாசய்யங்கார் குறிப்புகளால் விளக்கினோம்.

வாலி அதற்கு மறுமொழியாக ''நாங்கள் மிருகங்கள்; எங்களுக்குக் கட்டுப்பாடில்லை'' என்று புகன்றதாகவும், இராமன், ''பகுத்தறிவில்லாது வாழ்வதே விலங்கின் இயல்பு; நீ பகுத்தறிவு மிக்குடைமை யாதலின் உன்னை விலங்கெனபதெப்படி? ஆதலின் நெறிமுறை அறிந்தும் தவறினை; ஆதலின் உன்னைக் கொன்றேன்'' எனப்புகன்றதாகவும், வாலி உடனே, ''மறைந்து நின்று கொல்லல் முறையோ?'' என, இலக்குவன், ''முன்னரே உன்னைக்கொல்ல வாக்களித்தமையாலும், நேரில் வந்து போரிட்டால் நீ அடைக்கலம் புகுந்தால் உன்னைக் காக்கவேண்டி வரும்; அதனால் கூறிய வாக்குப்பொய்க்கும்; அதனால் மறைந்து நின்று கொன்றோம்'! என மொழிந்ததாகவும் கம்பர் கூறுகிறார். வாலி கண்டித்தலும் இராமன் மறுமொழி கூறலும் ஒரே தொடர்பாக வால்மீகி கூற கம்பர் இவ்வாறு தடை விடைகளாகக்கூறினதோடு இலக்குவன் மறுமொழி கூறியதாகவும் புதுவது புனைகிறார். இலக்குவன் கூறியதாகவுள்ள ''நீ எதிர் வந்தடைந்தால் உன்னை மன்னிக்கவேண்டியிருக்கும்'' என்ற செய்தி சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது. வால்மீகி கூறாத இது அறிஞரால் இகழுந்தன்மைத்து. இதன்மேல் வாலி ஞானம் பெற்று மன்னிப்புக் கேட்டதாக வல்மீகி கூறுமாறே கம்பரும் கூறினார். இது பொருந்தா இடைச்செருகல் என்பதை முன்னரே எடுத்தியம்பினோம்.

# ஐந்தாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 19 முதல் 26 முடிய)

**வா**லி இறந்ததைக் கேட்டு தாரை அங்கதனுடன் ஓடிவந்தாள். சிலர் அவளை அங்கதனுடன் கிட்கிந்தைக்கு அழைத்தார்கள். அவர்கள், சுக்கிரீவனைச் சேர்ந்தார். அதில் புகுமுன் தாம் புகுந்து அங்கதனுக்கு முடி சூட்டவேண்டு மென்றனர். ஆனால், அவள் மறுத்துரைத்து ஒரு புலி புலா லுக்காக ஆசைப்பட்டுச் சிங்கத்தைக் கொன்றதுபோல இராம னால் கொல்லப்பட்டுக் கிடந்த வாலியிடம் வந்தாள். இராம னும், தம்பியும், சுக்கிரீவனும், ஒய்யாரமாக நிற்பதைக் கண்டு இவனும் இராமனுக்கு அனுகூலமாக நடந்திருந்தால் இரா மன் கொல்வானா? முதல் முறை வாலியைக் கொல்லவில்லை யே? என்று எண்ணிக்கொண்டு வாலிமேல் விழுந்து தாரை அழலானாள். அவன், என் சொல்லைக் கேளாமல் வந்து மடிந்தீரே, தேவ மாதரும் உம்மை விரும்புவார். நீர் எங்க ளைத் தனியே விட்டுப் போனீரே, சுக்கிரீவனுடைய மனைவி யைப் பற்றிய பாவம் பலன் தந்தது. சுக்கிரீவன் அங்கதனை என்ன செய்வானோ? சுக்கிரீவன் நினைத்ததை முடித்தான்'' என்று அலறினாள். வாலியினுடைய ஏனைய மனைவியரும் அழுதனர்.

அனுமான், ''அவரவர்கள் கருமத்தை அவரவர்களே அனுபவிக்கவேண்டும். உயிர்களில் ஒருவர் மற்றொருவரை குறை கூறவோ வருந்தவோ காரணமில்லை. வாலி தான் தேடின புண்ணியபலனை சுவர்க்கத்தில் அடையப்போகிறார்.

அம்மா! அவருக்காகக் கவலைப்படாதே. அங்கதனுக்கு முடி சூட்டி அவனுக்குத் துணையாயிருந்து அரசாள்க. உன் மகன் அரசாள்வதைக் கண்டால் இத்துக்கத்தை மறப்பாய்'' என்று தாரையைத் தேற்றினான். தாரை, ''என் மகனைப் பற்றிய கவலை சுக்கிரீவனுக்கே. நான் இனி இவரடியினிலே

யே இறப்பேன்'' என்றனள். அநுமான் வாலிக்கு உத்திர கிரியைகளை விரைவில் நடத்த அவசரப்படுத்தினான்.

வாலி தெய்வ பக்தியால் மூர்சைத் தெளிந்து சுக்கிரீவனை அழைத்து, நீ அரசனாகி அங்கதனைப் பேணுவாயாக. அவன் போரில் உனக்கு முன்னணியாக நிற்பான். தாரை அறிவாளியானதால் அவளுடைய பேச்சைக் கேட்டு நட. தேவேந்திரனால் கொடுக்கப்பட்டு எனக்கு மிகுந்த வல்லமையைத் தந்த மாலையைப் பெற்றுக்கொள்'' என்று கூறித் தன் மாலையைக் கழற்றிக் கொடுத்தான். சுக்கிரீவன் அதைப் பெற்றுக்கொண்டான். வாலி மகிழ்ந்து அங்கதனை நோக்கி, சுக்கிரீவன் சொற்படி நட; அவன் பகைவரோடு சேராதே'' என்று சொல்லிவிட்டு உயிரை விட்டான்.

தாரை, பலவாறு புலம்பி, ''ஐயோ இரத்தத்தில் கிடந்து புரள்கிறீரே. உமது நெஞ்சிலுள்ள அம்பு உம்மைத் தழுவ விடாமல் தடுக்கிறதே'' எனக் கூவினாள். நீலன் அவ்வம்பைப் பிடுங்க, தாரை தழுவியழுது அங்கதனை வணங்கச் சொன்னாள். அங்கதன் வாலியை வணங்கினான். தாரை பின்னரும் புலம்பினாள்.

சுக்கிரீவன் இராமனிடம் வந்து ''வாலியைக் கொன்று எனக்கு அரசாட்சியைத் தந்தாய். எல்லோரும் இவ்வாறு வருந்த எனக்கு அரசாட்சி வேண்டாம். வாலி என்னிடம் உன்னைக் கொல்லமாட்டேன், உன் கொழுப்பை அடக்கிவேன் ஓடிப்போ என்று கூறினன். அத்தகைய அருளுடையோனை நான் கொன்றேனே! நான் அடிபட்டு வருந்தும்போது என்னைச் சமாதானஞ் செய்து இனி என்னை எதிர்க்காதே என்றுசொல்லிப்போகச்சொல்வானே! நான் இவனைக்கொன்று பாவியானேனே! நான் நெருப்பில் விழுந்து இறக்கிறேன்'' என்றனன். அது கண்ட இராமன் தாரையைத் தேற்ற அணுகினான். தாரை, ''உன் பெருமை எனக்குத் தெரியும். நீ காட்டிற்கு வந்து விராதன், கவந்தன், வாலி இவர்களைக் கொன்றாய். நீ தன்னலங் கருதாமல் சுக்கிரீவனுக்காக வாலியைக் கொன்றாய். உனக்கு யாதொரு கேடும் செய்யாத வாலியைக்

உன் கணவனுக்காகத்தான் கொன்றாய். வாலி வானுலக மாதர்மேல் கொஞ்சமும் ஆசை வையாமல் என்னையே எண்ணுவார். ஆதலின் இராம! என்னைக் கொன்றுவிடு! இது நீ வாலியைக்கொன்ற அதர்மத்திற்குப் பிராயச்சித்தமாகும். திருமாலே நீயல்லவா!'' என்று புலம்பினாள். இராமன் "தாரை! வாலியால் உனக்குக் கிடைத்த சுகத்திற்கு இனியும் குறைவு நேராது. தெய்வச் செயலால் நடந்ததற்கு வருந்தாதே'' என்றான் அதனால் தாரை கவலையொழிந்தாள்.

இராமன் வாலியை அடக்கம் செய்யக்கட்டளையிட, இலக்குவன், சுக்கிரீவனைப் பல்லக்கில் வாலியை ஏற்றிக்கொண்டு போய் எரிக்கச்சொன்னான். சுக்கிரீவன் வாலியைப் பல்லக்கில் ஏற்றி "என் அண்ணனுடைய கிரியைகள் குறைவில்லாமல் நடக்கட்டும். நவமணிகளையும், பொன்னையும் வாரியிறையுங்கள்'' என்றான். தாரை "யமன் இராமனுடைய ரூபங்கொண்டு தங்களை இழுத்துப் போகிறானோ? எங்கிருந்தோ இந்தப் பாழும் காட்டைத்தேடி வந்து எங்களெல்லோரையும் விதவைகளாக்கினானே!'' என அழுது புலம்பினாள்.

சவக்கிரியைகளின் பின்னீரிறைத்தார்கள். பின் அனுமான் கூறஇராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்ட ஆணைதந்து, மழைக்காலம் கழிந்தவுடன் சீதையைத் தேடவேண்டுமென்றுபுகன்று காட்டிலேயே தங்கினன், சுக்கிரீவன் வாலியின் அந்தப்புரம் போய் தாரை முதலிய பெண்களைத் தன் வசப்படுத்தி முடிசூட்டிக் கொண்டு அங்கதனை இளவரசனாக்கினான்; பிராமணர் மகிழப் பொருள்களைத் தந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

தாரை "ஒரு புலி புலாலுக்காக ஆசைப்பட்டுச் சிங்கத்தைக் கொன்றதுபோல இராமனால் கொல்லப்பட்டுக்கிடந்த வாலியிடம்'' வந்தாள் என்று வால்மீகி கூறுகிறார். இதனால் வால்மீகிக்கு வாலி சிங்கம்போன்றவனென்பதும், இராமனோ ஒருபுலிபோன்றவன் என்பதும், சுயநலத்தால் புலாலை விரும்பிப் புலி அரியேற்றைக் கொன்றது போல, இராமன் வாலியைக் கொன்றானென்பதும் கொள்கையாதல் தெளிவாகிறது. இது

மிகவும் உண்மையே. எச்சிற் குணத்தாலல்லவா தனக்கு யாதொரு தீமையும் செய்யாத வாலியை இராமன் கொன்றான்.

இராமன் ஒய்யாரமாக நின்றனனாம். இத் தீயவனுக்கு ஒரு ஒய்யாரமும் வேண்டுமா? தாரை வாலியைப்பார்த்து, "இவனும் இராமனுக்கு அனுகூலமாக நடந்திருந்தால் இராமன் கொல்வானா? இராமன் முதன் முறை வாலியைக்கொல்லவில்லையே" என எண்ணினளாம்? இது ஆரியாாகிய வால்மீகியது புனைந்துரையாயிருக்கலாம். மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 70ல், "இராமன் இப்படி அனுகூலமாக இருக்க வாலியைக் கேட்டு அவன் மாட்டேனென்றானா?" என்றும், "இது வாலியை அன்புகருதி முதன் முறை கொல்லாமல் விடுத்தது உண்மையல்ல, இராமன் நேரில் பார்த்தார் இருவருக்கும் பேதம் கண்டுபிடிக்க முடியாததாலல்லவா விட்டார்? என்றும் எழுதுகிறார். இதனால் தாரை நினைத்ததாகத் கூறுவனவெல்லாம் இடைச் செருகாகவே இருக்க வேண்டும்.

அனுமான் மிகவும் தீயவன். அவன் தாரையைத் தேற்றுகிறான். அவரவருடைய கர்மத்தை அவரவரே அடைய வேண்டுமாம். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 74ல்பின்வருமாறு எழுதுகிறார்:—"இந்த நியாயத்தையும் உபதேசத்தையும் மாருதி சுக்கிரீவனுக்குச் சொல்லக்கூடாதா? அவன் செய்த முன் வினையால் அவனுக்கு ராஜ்யமும் பாரியை யும் போயிற்றென்றும், அதைப்பொறுமையாக அனுபவிக்க வேண்டுமென்றும் சொல்லக்கூடாதா? ராமனைச் சரணமடைந்து அவைகளை மறுபடியும் கைப்பற்ற எண்ணுவது என்ன நியாயம்?" என்றும், "ராமன் தன் பாரியை ராவணனால் அபகரிக்கப் பட்டாளென்று வருந்துவதைக்கேட்ட இதே மாருதி இதே நியாயங்களை அவருக்கு எடுத்துரைத்துக் கர்ம பலனைப் பொறுமையுடன் அனுபவிக்கும்படி உபதேசிக்க வில்லையே" என்றும் அவர் எழுதுகின்றார். இதனால் அனுமான் அயோக்கியர்களில் முதன்மையானவன் என்பதில் என்ன தடையுளது?

அனுமான் தாரையிடம் உன் மகன் அங்கதனுக்கு முடி சூட்டி மகிழ்வாய் என்று கூறுகிறான். வாலியைக்கொன்று சுக்கிரீவன் முடிசூட்டிக்கொள்ளும் நிலைமையில் அனுமான் இவ்வாறு பேசியது நயவஞ்சகமல்லவா? இவனைப்போலத் தீயோர் உளரோ? சீனிவாசய்யங்காரும் "சுக்கிரீவனுடைய கதி என்ன? ராமனுடைய பிரதிக்ஞைக்கு வழியென்ன என்பதை மாருதி யோசிக்கவில்லையோ" எனப்பக்கம் 74-ல் எழுதுகிறார். மூர்ச்சையாகக் கிடக்கும் வாலியைச் செத்தானெனக்கூறி, அவனை எரிக்க அவசரப்பட்ட இவ்வனுமான் எதைத்தான் சொல்லவும் செய்யவும் துணியான்? வாலி அப்போது தெய்வகதியால் மூர்ச்சை தெளிந்தனன் என வால்மீகி கூறுகிறார். இல்லையானால் அவனுடல் அப்போதே அனுமான் முயற்சியால் எரியுண்டிருக்கும்.

வாலி பேசிய பேச்சுக்களையும் செய்த செயல்களையும் நோக்க அவனைப்போலும் உத்தமர் இலர் என்பது தெளிவு. இராமனும் அவன் தூசி விலைபெறான்! சுக்கிரீவனே பின்னால் வாலியினுடைய அருள்நிலையை விளக்கிக் கூறுகிறான். அவனை வாலி ஒருபோதும் கொல்ல முயன்றதே கிடையதாம்! சுக்கிரீவன் வருந்தினால் அவனைத் தேற்றியனுப்புவானாம் வாலி! என்னே அவனது அருங்குணம்! இவ்வருளுருவனை மருளுருவனாகிய இராமன் மறைந்துநின்று சகோதரத்துரோகியாகிய சுக்கிரீவனுக்காகக் கொன்றானே! வாலியினுடைய பெருமைகளை சீனிவாசய்யங்கார் வாக்கால் கூறுவோம். அவர் பக்கம் 77-ல் விரிவாக எழுதுகிறார். 'சீனிவாசய்யங்கார், "தனக்கு எவ்விதத்திலும் நேரில் கெடுதி செய்யாத வாலியை இராமன் சுக்கிரீவனுடைய கட்சியை மாத்திரம் கேட்டு அதர்மமாகக் கொன்றான். தன் ராஜ்யத்தையும் பாரியையும் தானிருக்கும்பொழுதே ஆழ்ந்து யோசிக்காமல் அபகரித்து தன்னைக் கொல்வதற்காக இராமனைச் சரணமடைந்து தூண்டிவிட்டுக் கொல்லுவித்த சுக்கிரீவனுடைய குற்றங்களையும் துரோகத்தையும் வாலி மன்னித்தான். விரோதத்தை மறந்தான். தானிருக்கும்போதே அரசனாக நியமித்தான். தன் சக்திக்கு ஆதாரமான மாலையைக் கொடுத்தான். அவனை

கம்பித்தன் பாரியையும் புத்திரனையும் அவன் கையில் ஒப்பு வித்தான். தன்னைக்கொன்ற இராமனுடைய காரியத்தை முடித்துக்கொடுக்கும்படி எச்சரித்தான். இதை யோசித்தால் மற்றவர்களைக் காட்டிலும் வாலியே உத்தமபுருஷனென்றும் பட்சபாதமில்லாதவர்கள் ஒப்புக்கொள்வார்கள்'' என விவரமாகத் தமது முடிவை எழுதுகிறார். இதை அறிஞர் மறுபடியும் படித்துச் சிந்தித்து உண்மையுணர வேண்டுகின்றோம். அறிவில்லாதவர்களே அபிமானம்பற்றித் தகாதது பேசுவர்.

சுக்கிரீவன், வாலி தந்த மாலையைக் கூசாமல் வாங்கியணிகிறான், பின் புலம்புகிறான். இவன் புலம்பலெல்லாம் கள்ளத்தனமேயன்றி உண்மையல்ல. இதையே சீனிவாசய்யங்கார் பக்கம் 84-ல் "அர்ச்சுனன் கௌரவர்களைக் கொல்வதற்கு முன்னமேயே இப்படி வருந்துகிறான். சுக்கிரீவனோ வாலியைக்கொன்ற பிறகு வருந்துகிறான். இதுநிஜமான வருத்தமென்றுதோன்றவில்லை'' என்று எழுதுகிறார். இப்பாவி சுக்கிரீவன்வாலியை எரித்துவிட்டு ஊருக்குப்போய் தாரையையும்வாலியின் பிறமனைவியரையும் கைப்பற்றிக்கொண்டனனாம்! சுக்கிரீவன் கவலைப்பட்டதைப்பற்றி மறுபடியும் சீனிவாசய்யங்கார் பக்கம் 84-ல் "இப்படியே விபீஷணனும் இராவணன் இறந்தவுடன் துக்கித்தான். பிறகு அவன் துஷ்டனென்றும், அயோக்கியனென்றும் நிந்தித்து அவனுக்கு உத்தரக்கிரியைகளைச் செய்ய மாட்டேனென்றான். காரணமென்ன?'' என எழுதுகிறார். காரணம் அவர்களுடைய அயோக்கியத்தனமேயன்றி வேறன்று. இதனைப்பின்னர் ஆராய்வோம்.

வாலி பிற மாதர்மேல் எண்ணம் செலுத்தாத உத்தமன் என்பது தாரையினுடைய புலம்பலால் தெரிய வருகிறது. இத்தகைய உத்தமன் பல மனைவியரை வைத்திருந்தானென்று வால்மீகி கூறுவது ஐயமுடைத்து. இது வேண்டுமென்றே அவரால் ஆரிய நாகரீகத்திற்கேற்ப எழுதி வைத்ததாகவே இருக்க வேண்டும்.

தாரை இராமனைப் பலவாறு புகழ்ந்தனளாம்! உத்தமியாகிய தாரை சுயநலங்கருதிச் சுக்கிரீவனுடன் வந்து குற்ற

மற்றவாலியைக்கொன்ற இராமனைப் புகழ்வாளா? இதனைச் சீனிவாசய்யங்கார் பக்கங்கள் 89, 90ல் "வாலியைக்காட்டிலும் மகா புத்திசாலியென்று அவனே ஒப்புக்கொண்ட தாரை வாலியின் காரணங்களுக்குத் தகுந்த பதில் சொல்லாத இராமனுடைய நடத்தையை ஒப்புக்கொண்டாளென்றும், வாலியைக் குற்றஞ்சாட்டி இராமனை விஷ்ணுவாக அறிந்து துதித்தாளென்றும் காணப்படும் பாகங்கள் நியாயத்திற்கு ஒத்ததில்லையென்று சிலருடைய ஆட்சேபம், இராமனைக் கேவலம் ஈசுவரனென்றும், அவர் எதைச்செய்தாலும் தர்மமென்றும் எண்ணும் மதாபிமானிகள், அவருடைய மனுஷிய பாவனையை மறந்து தாரை இப்படிச்சொல்லும்படி வாக்கியங்களைப் பிறகு சேர்த்தார்களென்று மேனாட்டுப் பண்டிதர்களின் கொள்கை" என்று எழுதுகிறார்.

ஆனால், தாரை மிகவும் இழிந்த ஒழுக்கமுடையவளாகவே காட்டப்படுகிறாள். இராமன் விதிவைப்பற்றித் தாரையிடம் பேசுகிறான். "இவன் இதைத் தன் விஷயத்தில் ஏன் கவனிக்கவில்லை யென்று மொழி பெயர்ப்பாளர் 90-ம் பக்கத்தில் வினாவுகிறார். இராமன் "தாரை! நீ வாலியிடம் அடைந்த இன்பத்தை இனியும் அடைவாய்" என்றனனாம். அதாவது சுக்கிரீவன் இருக்கிறான் உன்னை மனைவியாகக் கொள்ள என்று கூறுகின்றனனாம். இதைக் கேட்டுத்தாரை மனக்கவலை தீர்ந்தனளாம்! இதைப்பற்றி சீனிவாசய்யங்கார் பக்கம் 90ல் "இவ்வளவு பேசின தாரையே வாலி இறந்தானென்று நம்பின பொழுதும், உண்மையாக இறந்த பிறகும் சுக்கிரீவனிடத்தில் பெரிய பாரியாக இருந்தாள். இது ஸ்திரீகளில் ஸ்வபாவ மென்பதை வால்மீகி இச்சு விஷயத்தில் காட்டினாரென்று எண்ணவேண்டும். ஆனால் மண்டோதரி இப்படிச் செய்யவில்லை. மண்டோதரி விபீஷணனுடன் இணங்கியிருக்க வில்லை. தாரையோ சாதாரண ஸ்திரீ; மண்டோதரியோ விஷ்ணுவால் நிருபிக்கப் பட்டு அவருடைய அம்சத்தால் விளங்கின ஆத்மஞான முடையவள். ஆகையால் பதிவிரதா தர்மத்தைத் தவறவில்லை யென்று சிலருடைய கொள்கை" என்று எழுதுகிறார். இதனை ஆராய்வோம்.

மண்டோதரி இராவணனிடத்தில் அளவில்லாத மெய்யன்பு கொண்டிருந்தமையால் அவன் இறந்தவுடன் இறந்தனள். ஆதலின் அவள் மிகவும் சிறந்தவளே. கணவர் இறந்தவுடன் பிள்ளைகளையுடைய பெண்கள் கைம்மை நோற்று நாட்டுக்கு வேண்டிய நலந்தரும் பணிகளைத்தலைமேற்கொண்டொழுகுதல் சிறந்ததொரு கடமைதான். ஆண் மக்களிலும் மனைவியார் இறந்தவுடன் கைம்மை நோற்று நாட்டுக்குப்பாடு படுவோர் பலர் உளர். ஆனால், கணவனை யிழந்த பெண்டிர் கைம்மை நோற்க விரும்பாது வேறு கணவரை மணக்க விரும்புவரேல் அதில் யாதொரு தடையும் இருத்தல் கூடாது. ஆண் மக்கள் மறுமுறை மணக்க அதிலும சில சண்டாளர்கள் தமது முதல் மனைவி உயிருடனிருக்கும்போதே, அதிலும் முழு உடல் நலத்துடனிருக்கும் போதே வேறு பெண்டிரை மணக்க உரிமையிருக்க, பெண் பாலருக்குக்கணவன் இறந்த பின்னரும் வேறொருவரை மணந்து கொள்ள உரிமையில்லை யென்பது முறையாகுமா? முறையில்லை யென்பது அறிவுடையோர் கூற்றே. இம்முறைப்படி தாரை சுக்கிரீவனை மணந்திருக்கலாம். கணவன் இறந்தபின்னர் கள்ளத்தனமாகப் பிள்ளையுண்டாகி அக்கருவை அழிப்பதிலும், உலகமறிய மணந்து இல்லறம் நடத்துவதே அறிவுக்குப் பொருத்தமாக உள்ளது. இதனால் தாரை நடைகெட்டவளாவதெங்ஙனம்?

தாரை "இராம! நீ என்னைக்கொல்வது, நீ வாலியைக் கொன்ற அதருமத்திற்குப் பிராயச்சித்தமாகும்" என்றனள். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 89ல் "என்னை நீ வாலியை விட்டுப் பிரித்த பாபம் தீர மறுபடியும் அவருடன் சேர்த்து வைக்கா விட்டால் உன் மனைவியை நீ மறுபடியும் அடைந்தாலும் வெகுகாலம் அவள் உன்னுடன் இருக்கக் கூடாதென்று சபிப்பேன்" (எனத் தாரை கூறினாள்) இந்த வாக்கியம் சில மூலங்களில் காணப்படுகிறது. ஆனால், முன் ஜென்மத்தில் யார் யார் பர்த்தாக்களை அநியாயமாப் பிரித்த பாவத்திற்காக இப்படிச் சீதையைப் பறி கொடுத்துத் தவிக்கிறாய். (இதை பாலகாண்ட ஆரம்பத்தில் கூறியுள்ளோம்)

இப்பொழுதும் அந்தப் பாவத்தைச் செய்தாய். அதற்குப்பய னாக இனியும் அப்படித்தவிப்பாயென்பது கருத்தாகும். இப் படியே இராவணனையும் மாண்டோதரியையும் பிரித்ததைக் கவனிக்கலாம். ஆனால் அது சீதையை எடுத்துப் போனதற் குத் தண்டனையென்றால் அதில் மண்டோதரி செய்த குற்ற மென்ன? வாலி இராமனுடைய மனைவியை இராவணனைப் போல் எடுத்துப்போகவில்லையோ?" என்று எழுதுகிறார். இவ்வளவு தூரம் கொடுமையாகப் பேசுகின்ற தாரை இராம னை எவ்வாறு புகழ்ந்திருப்பாள்? இது சிந்திக்கத்தகுந்தது. மேலும் சவத்தின் பின் சென்ற தாரை இராமனை எமனாகக் கூறி இகழ்ந்து புலம்புகிறாள்.

சுக்கிரீவன் வாலியின் சவக்கிரியைகளைச் சிறக்கச் செய்த னனாம்! நவமணிகளை வாரி யிறைத்தனனாம்! இதனைச் சிந்தித்தால் தற்காலத்திலும் பலர் தங்கள் தாயார் தந்தையா ரை அவர்கள் உயிரோடிருக்கும் போதெல்லாம் படாத பாடு படுத்தி துன்புறுத்தி அவர்கள் இறந்த பின்னர் நூறுபேர் ஆயிரம் பேர்களுக்கு உணவருத்துகிற செயலைச் செய்வது நினைவுக்கு வருகிறது. தாயார் தந்தையாரைப் பட்டினி போட்டுக் கொன்ற பின்னர் அவர்கள் நினைவுக்காகப்பலருக்கு உணவூட்டுதல் எவ்வாறு இகழ்ச்சிக் குரித்தான செயலோ, அதைப்போலவே சுக்கிரீவன் தனது மூத்தோனைக் கொன்று விட்டு சவக்கிரியைகளைச் சிறக்கச் செய்தானென்பது இகழ் ந்து நகையாடற் குரியதே.

சுக்கிரீவன் முடி சூட்டன்று பார்ப்பனர்களுக்கு உணவும் உடையும் பொருளும் கொடுக்கப் பட்டதென வால்மீகி குரங்கு களின் நகரமென வால்மீகி கூறும் கிட்கிந்தையில் பார்ப்பனர் ஏது? அங்குமா தானம் வாங்கப் பார்ப்பனர் புகுந்தனர்? இது பொய்மையாவதோடு பார்ப்பனர் தம் நலம் கருதி இடை யில் செருகி வைத்ததாக இருக்கவேண்டும். அன்றியும் ஆரிய ராகிய வால்மீகியே தம்மவர் நலங்கருதி இதனை எழுதிவைத் தவராகவும் வேண்டும். என்னே இவர் தம் சூட்சியின் வன் மை! இனிக் கம்பர் போக்கைக் காண்பாம்.

கம்பர் வால்மீகி கூறிய வரலாற்றை மாற்றித் தமது மனம்போல எழுதுகிறார். வாலி மாண்ட இடத்திற்குத் தாரை வந்து புலம்பி இராமனோடு வாதிட்டதையும், இராமனும் அநுமானும் கூறிய தந்திரப் பேச்சுக்களையும் மறைத்து, வாலி சாகவிட்டுத்தான் அவண் வந்து அழுததாகக்கம்பர் கூறுகிறார். வாலி இராமனை நோக்கி "என் தம்பிமேல் கோபித்து ஒரு காலத்திலும் அம்புவிடாதே. அண்ணனைக் கொல்வித்த பாவி என்று உன் தம்பிமார்கள் சுக்கிரீவனை இகழாதிருப்பார்களாக" எனக்கூறி, சுக்கிரீவனுக்கு நல்ல அறிவுரை கூறுகின்றனனென்றும், பின் அவன் அங்கதனை வரவழைத்து அழுது புலம்பிய அவனை நோக்கி என்னைக் கொன்றவன் சுக்கிரீவனெனப் பகைமை பாராட்டாதே என நல்லறிவுறுத்தி மடிந்தான் என்றும், பின்னரே தாரை வந்து புலம்ப அவளை அநுமான் வீட்டுக்கனுப்பினனென்றும் அவர் எழுதுகிறார். சுக்கிரீவனுக்கு வாலி மாலை தந்ததையும் சுக்கிரீவன் புலம்பியதையும் கம்பர் கூறவில்லை. மேலும் இராமன் ஏவலால் சுக்கிரீவன் ஊருக்குப் போய் முடி சூட்டிக்கொண்டனன் என வால்மீகி கூற, கம்பர் இராமன் இலக்குவன் சுக்கிரீவனுக்குக் காட்டில் வைத்தே முடி சூட்டி அரசற்குறு நீதியுரைத்தனுப்பினன் எனக் கூறுகின்றனர். மேலும் சுக்கிரீவனும் அங்கதனும் அநுமனும் தனித்தனி விடைபெற்றுச் சென்றதாகவும், அநுமன் இராமனுடனேயே இருப்பேனென்று கூற, இராமன் அநுமனை நோக்கி "ஒழுங்காக அரசாண்ட ஒருவனுடைய அரசை மற்றொருவன் கைப்பற்றினால் தீமை விளைதலும் கூடும். ஆதலின் நீ சென்று முறைமை நிறுவி என்னிடம் வர" என்று கூறியதாகவும் அவர் கூறுகிறார். இது கம்பருடைய புதுக்கதையே. வால்மீகி தாரையைச் சுக்கிரீவன் வசப்படுத்தினன் என்று கூற, கம்பர் அவன் தாரையைத் தாய் போல் வணங்கி அரசாண்டனன் என்கிறார். இது சுக்கிரீவனிடத்து ஒழுக்கங் காட்டப் போலும்!

பார்ப்பனருக்குத்தானம் வழங்கியதைக் கம்பர் கூறாது விடுப்பரோ என எண்ணினோம். எண்ணின எம்மை அவர்

ஏமாற்றி, "மறையோர் ஆசி வழங்க முடி சூட்டினான்" எனக்கூறி, அவர்கள் தானம் பெற வந்தமை குறித்தார்!

தாரை வாலிமேல் விழுந்தழுதாள் என்று கூறவந்த கம்பர் தம் இயற்கை தோன்றத் தகாத வகையான் விவரித்துக் கூறினார். அது வருமாறு:—

"குங்குமம் கொட்டியன்ன குவி முலைக்கு
வட்டுக்கொக்கப்
பொங்கு வெங்குருதி போர்ப்பப் புரிகுழல்
சிவப்பப் பொற்றோள்
அங்கவன் அலங்கல் மார்பிற் புரண்டனள்"

செத்துக்கிடந்த கணவன்மேல் வீழ்ந்தழும் ஒரு பெண்மணியை இந்நிலையிற்றான் புனைந்துரைப்பது புலவர் புலனோ?

வாலிமேல் தைத்த அம்பை தாரை மேல் விழுந்தழ இடர்ப்படுவதாகக் கூற, நீலன் பிடுங்கி எறிகிறான் என வால்மீகி கூறுகிறார். கம்பரோ வாலி பற்றிய பிடியை விட்டு மடிதலும் அவ்வம்பு மறுபுறங்கண்டு ஓடி கடலுட் குளித்து அமரர் மலர் சூடி இராமனது அம்பறாத் தூணி புக்கது என்று கூறுகின்றார். இராமனுக்குத்தான் கம்பர் தெய்வத்தன்மை ஏற்றினார்; அம்புக்குமா இவ்வாறு தெய்வத்தன்மையேற்றி தமிழ் மக்களை மயக்கி மாறான கொள்கைகளை அவர் மனத்திடைப் புகுத்த அவர் முயலவேண்டும்?

---

# ஆறாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 27 முதல் 38 முடிய)

இராமன் தம்பியுடன் பிரசிரவண மலையின் குகையில் தங்கியிருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் சீதையை நினைத்து கண்ணும் கண்ணீருமாக மனம் குன்றி, அறிவிழந்து எப்போதும் பரதவிப்பதை இலக்குவன் கண்டு அவ்வாறு சோர்வைப்பெருக்கினால் வல்லவனாகிய இராவணனை

வெல்ல முடியாதெனக் கூறித் தேற்றினான். இராமன் அதனால் தெளிந்தான். தம்பி கவலையற்று மழைக்காலத்தைக் கழிக்க வேண்டினான். ஒரு நாள் இராமன் மழைக்காலத்தை விவரித்தான். அவன், "தம்பி! எனக்கு விரகதாபம் அதிகரிக்கிறது. இக்காடு சிவந்த நீருடையதாகி மயில்கள் ஆடுவது, மதுப்பாண்டங்களாலும் குடித்துக் கூத்தாடுபவர்களாலும் விளங்கும் சாராயக் கடையைப்போலிருக்கிறது. மேகத்தின் மின்னல் இராவணன் மடியிலிருக்கும் சீதையைப் போல இருக்கிறது. திருமால் ஆடிமாதத்தில் தூங்க ஆரம்பித்து ஆவணிமாதத்தால் ஆழ்ந்து தூங்குகிறார். சுக்கிரீவன் நாட்டையும் மனைவியையும் அடைந்து சுகமாக வாழ்கிறான். நானோ அரசையிழந்து மனைவியையும் பறிகொடுத்து பகைவனையும் வெல்லாமல் ஆற்றின் கரையைப்போல் கரைந்து கரைந்து வருந்துகிறேன். இராவணனோ சாமானியனல்லன். என் துக்கத்திற்கோ எல்லையில்லை. சுக்கிரீவன் வாக்கை நிறைவேற்றுவானென நினைக்கிறேன்" என்றான். இலக்குவன் "அது சரி"யென்றான். சுக்கிரீவனோ, மழைக்காலம் கழிந்தும், ருமை, தாரை முதலிய பெண்களுடன் குடித்துக் குலாவியிருந்தான். அனுமான் வந்து நினைவுறுத்த சுக்கிரீவன் நீலனை அழைத்து பதினைந்து நாட்களுக்குள் சேனைகளை வரவழைக்கக் கண்டிப்பாகக் கட்டளையிட்டான்.

சுக்கிரீவன் வாராமை கண்டு இராமன் மூர்ச்சையடைந்தான். பின் தெளிந்து விரகதாபம் மேலிட்டுப் புலம்பி அறிவிழந்திருந்தான். இலக்குவன் தேற்றினான். தெளிந்து மறுபடியும் காமமீதூர்ந்து புலம்பி, "சுக்கிரீன் நான் என் ஊரையும் உறவினரையும் பிரிந்து அநாதையாயிருக்கிறேனென என்னை அவமானம் செய்கிறான். நான் அவனுடன் சேர்ந்ததும் வாலியைக் கொன்றதும் சீதையைத் தேடுவதில் அவனுடைய உதவியை நாடியே என்பதை மறந்து விட்டான். தம்பி! நீ உடனே சுக்கிரீவனைக் கண்டு என் இயல்பு கூறி அவன் வாக்கைத் தவறினால் கொல்வேன் எனச்சொல்!" என்றான். இலக்குவன், "அண்ணா! சுக்கிரீவன் தீயவன் அவனைக் கொன்று விடுவோம். தாரையும் அங்கதனும் சீதையைத்

தேடட்டும்'' என்று கூறிப்புறப்பட்டான். ஆனால் அவனைப் பொறுமையாக நடக்கும்படி இராமன் எச்சரித்தான்.

இலக்குவன் கடுங்கோபத்தோடு வருவதைக் கண்ட வீரர்கள் போர்க் கருவிகளோடு கோட்டையைக் காத்து நின்றனர். சிலர் சுக்கிரீவனிடம் இச்செய்தி கூறியும் அவன் மயங்கியிருந்தான். இலக்குவன் நகரினுட் புகாமல் வீரர் தடை புரிந்திருந்தனர். அவன் அங்கதனைக்கண்டு தன் வருகையைச் சுக்கிரீவனுக்குரைத்து வரச் சொன்னான். அங்கதன் தெரிவித்தும் சுக்கிரீவன் குடி வெறியாலும் தூக்கத்தாலும் உணர்வற்றிருந்தான். அங்கதன் வாராமையைக்கண்டு இலக்குவன் உள்ளே நுழைய முயன்றான்; அங்கதன் அந்தரங்க அமைச்சரிருவருடன் சுக்கிரீவனை அடைந்து செய்திகூற சுக்கிரீவன் அச்சமடைந்து இலக்குவனை எவ்வாறு சமாதானம் செய்வதெனக் கவலைப்பட்டான். அனுமான் இலக்குவனைப் பணிவதே அதற்கு வழி என்றான். சுக்கிரீவன் இலக்குவனை அழைத்து வர அனுமதி தந்தான். இலக்குவன் உள்ளே நுழைந்து மாடமாளிகைகளைக் கடந்து அரண்மனையினுள் புகுந்து வீணை முதலிய இன்னிசை கேட்டு பெண்கள் சிறந்த அணி பல அணிந்து மாலை தொடுத்திருந்ததைக் கண்டு வில்லொலிகாட்டித் தன் வரவை அறிவித்து ஒருபுறம் கவலையுடன் உட்கார்ந்திருந்தான். சுக்கிரீவன் அஞ்சி தாரையை அனுப்பினான்.

தாரை சம்போக சுகத்தை வளர்க்கக் குடித்த மதுவின் மயக்கத்தால் கண்கள் சுழல சிரமத்தால் தள்ளாடி அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டு உடைகள் தளர்ந்து அவிழ்ந்து தொங்க படுக்கையிலிருந்த கோலத்துடன் சம்போகக் குறிகள் தெளிவாக விளங்கத் தன்பாரத்தால் சற்று வளைந்த உடலுடன் இலக்குவனிருக்கும் இடத்திற்கு வந்தாள். அவள் வெட்கமற்றுத் தன்னைக் கண்டு தலை குனிந்த இலக்குவனைச் சமாதானப்படுத்தினாள். இலக்குவன் தான் சினந்து வந்தமை கூறி சுக்கிரீவன் குடிவெறியிலிருப்பதைக் கண்டித்தான். தாரை சேனைகளைச் சுக்கிரீவன் சேர்ப்பது

கூறி அவனை மன்னிக்குமாறு வேண்டி உள்ளே அழைத்துச் சென்றாள். சுக்கிரீவன் பலவித அணிகலன்களோடும் சிறந்து ருமையை மார்போடு இறுகத் தழுவிக்கொண்டு இலக்குவன் வருவதைக்கண்டு எழுந்தான். இலக்குவன் அவனுடைய நன்றிகெட்ட செயலைக் கூறிக் கண்டித்தான். அப்போது தாரை, "இவன் காமத்தில் ஆழ்ந்திருக்கிறான். நன்றி மறந் தவனல்லன். இராவணனோ வெல்ல முடியாதவன். அத னால் சுக்கிரீவன் தனது சேனைகளைச் சேர்க்கிற முயற்சியிலி ருக்கிறான். நீர் சினம் தணியும். இப்பெண்கள் சுக்கிரீவ னுக்கு அபாயம் நேருமோ என அஞ்சுகிறார்கள்" என்றாள். அதனால் இலக்குவன் சீற்றம் தணிந்தான். சுக்கிரீவன், "உங் களால் நான் இழந்த அரசைப்பெற்றேன். உங்களுக்கு வேண் டும் உதவிகளைச் செய்வதே என் கடமை என்பதை உணர் வேன் என்றான். இலக்குவன் மகிழ்ந்து தன்னை மன்னிக்கு மாறு வேண்டி இராமனை வந்து பார்க்குமாறு சுக்கிரீவனை அழைத்தான்.

சுக்கிரீவன் பத்து நாட்களுள் வானரச்சேனை முழுமை யும் திரட்ட அனுமானுக்குக் கட்டளையிட, அனுமான் அவ் வாறே வீரரை ஏவினன். சேனைகள் வந்து சேர்ந்து அரச னைப் பணிந்தன. இலக்குவன் சுக்கிரீவனை நோக்கி வணக்க மாக, "திருவுடையாய்! இனி உனக்குப் பிரியமானால் இவ்வூரை விட்டுப் புறப்படுவோம்" என்றான். சுக்கிரீவன் இலக்குவனு டன் ஓர் பல்லக்கில் ஏறிச்சென்று இராமனைப் பணிந்தான். இராமன், "படையெடுத்துச் செல்லவேண்டும்; ஏற்பாடுகளைச் செய்" எனக்கூறினான். சுக்கிரீவன் இராவணனை விரைவில் வெல்ல ஏற்பாடு செய்வதாகக் கூறினான். இராமன் மகிழ்ந் தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்,

நம் நாட்டில் சிலர் தெய்வமாகக்கருதி வழிபடும் இராமன் ஒவ்வொரு நாளும் சீதையை நினைத்துக் கண்ணும் கண்ணீரு மாக அறிவிழந்து, மனம் குன்றி எப்போதும் பரிதபித்தன னாம். ஒரு நாள் அவன், "தம்பி! எனக்கு விரகதாபம் அதி கரிக்கிறது" என்று கூறினனாம், தனது தாபத்தைத் தம்பியி

டம் வெட்கமில்லாமல் சொல்லி அழுவதுதெய்வத்தின் தன்மை போலும்! இராவணன் மடியிலிருக்கும் சீதையைப்போல மேகத்தில் மின்னலிருந்ததாம்! இதை இராமன் வாயிலேற்றிவால்மீகி கூறுகிறார். அக்காட்டில் நீர் நிலைகளின் அருகே மயில்கள் ஆடுவது கள்ளுக்கடைகளினருகே கள்ளுண்டவர் குடிவெறியில் ஆடுவதுபோல இருந்ததென வால்மீகி கூறுகிறார். இப்புலவர் பெருமானுக்கு இதனினும் சிறந்த உவமானம் தோன்றவில்லை போலும்!

"திருமால் ஆடியில் தூங்கத்தொடங்கி ஆவணியில் ஆழ்ந்து தூங்குவார்" என இராமன் கூறுகிறான் என்றால் இவனைத் திருமாலின் தோற்றமெனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? திருமாலின் பெருமைதானென்னே? தூங்குமூஞ்சியர் எங்கும் நிறைந்த கடவுளாவாரா? என்னே இவர்தெய்வ இயல்புகள்!

இராமன் பொறாமையில் ஒப்புயர்வற்றவன். அவன் சுக்கிரீவன் நாட்டையும் மனைவியையும் அடைந்து சுகமாக வாழ்கிறான். நானோ அரசையிழந்து மனைவியையும் பறிகொடுத்து பகைவனையும் வெல்லாமல் ஆற்றின் கரையைப்போல் கரைந்து கரைந்து வருந்துகிறேன்" என ஏங்குகிறான். இராமனைத் தெய்வமென நம்பி அவன் போக்கில் நாமும் நடந்தால் நமது சிந்தை எவ்வளவு தீயதாக மாறிவிடும்.

இராமன் இராவணனுடைய அளவில்லா ஆற்றலை நினைத்து நினைத்து மனம் கலங்குகிறான். மழைக்காலம் கழிந்ததும் சுக்கிரீவன் வாராமையால் ஏங்கி மூர்ச்சையடைகிறான். பின் காமத்தால் புலம்பி "நான அவனுடன் சேர்ந்ததும் வாலியைக்கொன்றதும் சீதையைத் தேடுவதில் அவனுடைய உதவியை நாடியே" என்று கதறுகிறான். இத்தகைய சுயநலக்காரரும் உண்டோ? இலக்குவன் சுக்கிரீவனைக்கொன்று அங்கதனுக்கு முடிசூட்டி அவனால் உதவிபெற நினைக்கிறான்! என்னே இவர் தம் சுயநலம்!

சுக்கிரீவனோ மிகவும் தீயவனாகக் காணப்படுகிறான். இராமன் செய்த நன்றியை மறந்து அளவிறந்து குடித்து

விட்டுத் தனது அண்ணனாகிய வாலியின் மனைவியைக் கூடிக் காம இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு மதியிழந்தான். அண்ணனின் மனைவியைத் தாயெனக் கருதவேண்டுமென்ற உத்தம ஒழுக்கத்தையும் மறந்தான். இத்தகைய பாதகனை நம்பி இராமன் கவலையுற்றனன். தீய ஒழுக்கங்களெல்லாம் திரண்டு ஒருருவானவனோ இச்சுக்கிரீவன்!

இலக்குவன் கிட்கிந்தையுட் புகுந்து போகும்போது வால்மீகி அந்நகரவளப்பத்தை மிக விவரிக்கிறார். அத்துடன் அந்நகர மாந்தர் நிலைமைகளையும் விரித்துக் கூறுகிறார். அவைகளை ஆராயும்போது அறிவற்ற மிருகமும் கூட அவ்வளவு சிறந்த நாகரீகத்தினராக் குரங்குகளென்று கூறாது. ஆனால் ஆரிய முனியாகிய வால்மீகி அவ்வளவு பெருமைகளையும் கூறிவிட்டு அந்நகர மாந்தர் குரங்குகள் என்கின்றனர். இவர்களுடைய பித்தலாட்டங்களுக்கு அளவும் உண்டோ? குரங்குகளுக்கு மூளை சிறியதாயிருத்தலினாலேயே அவைகளுக்குக் கையினால் செய்யும் நுட்பமான தொழில் முறைகள் வீணை முதலிய இசைக்கருவிகளை மீட்டுதல் முதலிய அருஞ்செயல்கள் இயலவில்லை, இவ்வருஞ்செயல்களைச் செய்வதற்கு ஏற்ற திறம் மக்களுக்கு மட்டுமே உண்டு என உடல் நூல் ஆராய்ச்சியாளர் நிலை நாட்டுகின்றனர். அவ்வாறாயின் சினமிக்க இலக்குவனுடைய மனமும் ஈடுபடும்படி அந்நகரப் பணிப்பெண்களே வீணை வாசித்தனரெனின் ஏனைய உயர் நிலைப் பெண்கள் பெருமைக்கு அளவுண்டாமோ? அவர்களைக் குரங்குகளென எழுதிவைத்தது ஆரியர் தம் குரங்குச் சேட்டையேயன்றி வேறு யாது? உண்மையில் நாகரீகமற்றவர்களாகிய ஆரியரையே மிருகங்களென்றும், குரங்குகளென்றும் கூறுதல் அமையும்!

"தாரை சம்போக சுகத்தை வளர்க்கக் குடித்த மதுவின் மயக்கத்தால் கண்கள் சுழல சிரமத்தால் தள்ளாடி அடிமேல் அடி வைத்து நடந்துகொண்டு, உடைகள் அவிழ்ந்து தொங்க படுக்கையிலிருந்த கோலத்துடன் சம்போகக் குறிகள் தெளிவாக விளங்க இலக்குவன் முன் வந்து தோன்றினாள்" என

வால்மீகி கூறுகிறார். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 124-ல் "எந்தப்பாணத்தால் என் பிரிய நாயகனான வாலியை அடித்துக் கொன்றாயோ அதே பாணத்தால் என்னையும் கொன்று வாலியுடன் சேர்த்துவை. நானில்லாவிட்டால் வாலி துக்கமடைவாரென்று சொன்ன பதிவிரதை இவளே. வால்மீகியின் கருத்து இப்படித் தெளிவாய் இருந்தாலும் இது கம்பருக்கு இது இஷ்டமில்லை. சகல உத்தம குணங்கள் வாய்ந்த தாரையைக் குறைவாகச் சொல்ல மனமில்லை. மகா பதிவிரதையென்னும் கைம்பெண்களுக்குரிய வேஷத்துடனும், நியமத்துடனும் காலங் கழித்தாளென்றும் அழுத்தமாகச் சொல்லுகிறார்" என ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். இது ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய குறிப்பே. இது கம்பருடைய மனப்பான்மைக்கு மிக ஏற்ற இடமாயிற்றே. இதனை மாற்றித் தாரையை மிகவும் நல்லவளாகக் கூறுவதில் இவருக்கென்ன நோக்கம் என்றால், சுக்கிரீவனை மிகவும் நல்லவனாகக் காட்ட விரும்பியே இவர் இவ்வாறு செய்தார். இதைத் தவிர வேறு நல்ல நோக்கம் இவருக்கு இருந்திருக்க முடியாது. இதைப் பற்றி நாம் பின்னர் விவரிக்க எண்ணியிருந்தேமெனினும் இவ்விடத்தில் விளக்க எழுதுவோம்.

கம்பரைப் பற்றி யாம் குறை கூறுகின்றோமெனச் சில நண்பர்கள் நினைக்கலாம். அது மிகவும் தப்பிதமான எண்ணமெண நாம் அந்நண்பர்களுக்குக் கூறுகின்றோம். கம்பர் தமிழ் மக்களை இழித்துரையாடும் இராம கதையைப் பாடியதோடு ஆரியர் தம் ஏற்றமும் பற்பல இடங்களிலும் குறித்துத் தமது இனத்தவருடைய தாழ்வைக் கருதினர் என்பதே எமது உள்ளத்தை ஈர்வது. அதனால் அவருடைய மனநிலையை உள்ளவாறு எடுத்தியம்புகின்றோம். எமது உடன் பிறப்பாளராகிய தமிழ் மக்களுக்கு உண்மையை எடுத்தியம்புவதே எமது உண்மையான நோக்கம். கம்பர் தாரையாகிய ஓர் பெண்மணியை இழித்துரைப்பானேன் என்று கைம்மை நோற்றதாகக் கூறுகிறார் எனச் சிலர் நினைக்கலாம். அற்றன்று; ஏனெனில், கம்பர் உண்மையில் பெண்மை பே

ணும் தன்மையினரேல், இத்தாரையின் கோலத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுவாரா என அன்பர்களைச் சிந்திக்க வேண்டுகிறோம். தாரையின் கைம்மைக் கோலத்தை விவரிக்க வந்த கம்பர் பின்வருமாறு பாடுகிறார். (கிட்கிந்தைப் படலம் பாடல் 52)

"மங்கல அணியை நீக்கி மணி அணி துறந்து வாசக்
கொங்கலர் கோதைமாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குமம் முலைகள் பூசக் கழுத்தொடு மறையப்போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நபனங்கள் பணிப்ப நின்றான்"

ஒரு கற்புடைய பெண்மணியை ஒழுக்கமுடைய புலவனொருவன் விவரிக்கும் முறை இது தானோ? தாலியில்லாமல் வேறு நகையில்லாமல் முக்காடிட்டு வந்து இலக்குவன் முன் தோன்றினாள் தாரை என்று கூறி அமைதலாகாதோ; குங்குமச் சாந்திழந்த திரண்ட கொங்கைகள் மறைய முக்காடிட்டாள் என்று தான் கூற வேண்டுமோ? அறிஞரே சிந்தியுங்கள். இதனால் நமது கம்பர் வேறு எந்நோக்கம் கொண்டு வால்மீகியினுடைய கதையை மாற்றியிருப்பரென அறிஞர் தெளிதல் சுலபமாம். இன்னும் நமது புலவர் பெருமானாகிய கம்பர் மனநிலையை இதே படங்களில், இவர் கூறும் பாடல் பகுதிகளால் கூறுவோம்.

கார்காலப்படலத்தில் பாடல் 34ல் கம்பர் பெருமான் "காட்டாறுகள், பூமாதேவி தனது மலைகளாகிய பெரிய கொங்கைகளிலிருந்து சுரந்த பால் போன்றன" எனப்பாடுகிறார். கம்பர் சீதையைப்பற்றிக் கூறும்போது பாடல் 49-ல் "தேனைக்கொண்ட பேர் அல் குலாள்" என்றும் பாடல் 52-ல் "வாரேர் முலையாள்" என்றும் கூறுகிறார். கம்பர் இதே கார்காலப்படலத்தில் பாடல் 13-ல் "புழுங்குறு புணர்முலை" என்றும், பாடல் 47-ல் "முகிழ்முலை ஆய்ச்சியார்" என்றும், பாடல் 82-ல் "செறிகுரம்பைத் தாமரு எயிற்றியர்" என்றும், பாடல் 85-ல் "இழைப்படுங் கொங்கையும்" என்றும், பாடல் 110-ல் "பாசிழை மடந்தையர் பகட்டுவெம்முலை" எனவும் பல இடங்களில் கொங்கைச் சொல்லைக்கூறி மகிழ்கிறார். இம்

மகிழ்ச்சி கருதியே தாரையையும் முன் கூறியபடி விவரித்தார் என்பதில் என்ன தடை?

தாரை இலக்குவன் முன் வந்ததைக் கூறும் கம்பர் அவளுடன் வந்த பெண்களை வருணிக்கிறார். அப்பாடல் வருமாறு.— (கிட்கிந்தைப்படலம் 45)

''விலங்கு மெல் இயல் வெண்நகை வெண்மதி
இலங்கு நுண் இடை ஏந்திள மென்முலைக்
குலங்கள் தோகை மகளிர் குழாத்தினால்
வலங் கொள்வீதி நெடுவழி மாற்றினாள்''

பின்னர் பாடல் 77-ல் இலக்குவனைப் பிரிந்து தாரை தோழியருடன் போனாள் என்று கூறுமிடத்தும் கம்பர் ''தேரல்குல் கலசக் கொங்கை மாதர் குழாத்தோடும் தாரை போனாள்'' எனப் பாடுகிறார்.

சுக்ரீவனுக்கு இளம் பெண்கள் கால் பிடித்தனர் எனக் கூறவந்த கம்பர் (பாடல் 18) ''இள முலைச்சியர் ஏந்தடிதை வர'' எனக் கூறுகிறார். இவ்வித வருணனைகளையெல்லாம் அறிஞர் சிந்தித்து உண்மை தெளிய வேண்டுகின்றோம்.

தாரை உண்மையில் சுக்கிரீவனுக்கு மனைவியாக உடன்பட்டிருப்பாளா? வயதானவள், வாலியினுடைய மனைவி, பெரிய அங்கதனென்ற மகனை உடையாள். இவளைக் காமவயப்பட்டு அறிவு கெட்டாள் என்பது அறிஞர் ஒப்புமாறில்லை. இது ஆசிரியர் புரட்டேயாதல் வேண்டும். அதுவும் வால்மீகியால் எழுதப் பெறாமல் பிற்காலத்திய தீமதியாளர் சிலரால் இங்ஙனம் எழுதப்பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு வாலியைப்பற்றிக் கூறுமிடத்துப் பல மாறுதல்களைப் பிற்காலத்தார் செய்திருக்க வேண்டுமென்று மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் எழுதிய குறிப்பை முன் கட்டுரையில் எடுத்துக் காட்டினோம். இவர்கள் தம் தீமதி இருந்தவாறென்னே? சுக்கிரீவன் மிகவும் தீமதியாளனெனினும் அவனைப்பற்றி இலக்குவனைக் கண்டபோது வால்மீகி கூறும் கூற்றுக்கள் அறிவுடையார் அருவருக்கும் நிலைமையிலுள்ளன. அத்தகைய

சிரியனாகிய சுக்கிரீவனுடைய நட்பை விரும்பிப்பெற்ற இராமன் எந்நிலையினனாதல் வேண்டும் !! தாரை, "சுக்கிரீவனுக்கு அபாயம் நேருமோ என ருமை முதலியோர் அஞ்சுகின்றனர் என இலக்குவனிடம் கூறிய இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 130-ல் "சுக்கிரீவன் செய்த பிரதிக்ஞையை மறந்தானா? சீதையைத்தேட என்ன ஏற்பாடு செய்திருக்கிறானென்று கேட்டுத் தெரிந்துகொள்; அப்படிச்செய்யாவிட்டால் இவ்விதமாகக் கண்டித்து வா என்று ராமனும் சொல்லவில்லை. இலக்குவனும் தாரையைக் கேட்கவில்லை. இது இருவரிடத்திலும் புத்திக் குறைவைக் காட்டுகிறது. தாரை இலக்குவனுக்குச் சமாதானம் சொல்லி அவன் கோபிக்க இடமேயில்லை என்று நிரூபித்து விட்டாள். அப்பொழுது இலக்குவனுக்கு வெட்கமுண்டாயிருக்க வேண்டும். வாலியைக்கண்டு கேட்டு விசாரிக்காமல் சுக்கிரீவனுடைய வார்த்தையையே நம்பி வாலியைக்கொன்றதாகும்" என எழுதுகிறார். இதனால் இராம இலக்குவருடைய அறிவில்லாமை விளங்குகின்றது. சுக்கிரீவனுடைய பேச்சைக்கேட்டு இலக்குவன் மகிழ்ந்து மன்னிப்புக்கேட்ட இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 132-ல் "சீக்கிரமாகக் கோபிப்பதும், சீக்கிரமாகச் சந்தோஷப்பட்டு மெச்சுவதும் குழந்தைகளைப்போல் இலக்குவனுடைய சுபாவம்" என்று எழுதுகிறார். இதனால் இலக்குவனுடைய அற்ப சுபாவம் விளங்குகிறது. இனி கம்பருடைய ஏனைய மாறுபாடுகளையும் காண்போம். இலக்குவன் சுக்கிரீவனைக்கொன்று அங்கதனைத் துணைக்கொள்ள வேண்டுமெனக் கூறிய பேச்சைக் கம்பர் மறைத்தார். மேலும் அங்கதன் சுக்கிரீவனுடைய மயக்கங் கண்டு அமைச்சரை யழைத்து வந்து அவனுக்கு உணர்வுறுத்தினன் என்று வால்மீகி கூற, அவன் அனுமானிடம் போய் அவனுடன் தன் தாரையை அடைந்து நிகழ்ந்ததுரைத்தனரென்றும், அவர் அவனுடைய செயலைக் கண்டித்துரைத்தனரென்றும் கம்பர் கூறுகிறார்.

சுக்கிரீவனுடைய ஆணையின் மேல் இலக்குவன் ஊருள் வந்தனனென்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ குரங்குகள் கதவையடைத்துப் பல மலைகளைப்பறித்து கதவைத்திறக்க

முடியாமல் சார்த்தினனென்றும், இலக்குவன் சினங்கொண்டு காலால் மிதிக்க அது சிதறித்திறந்தவுடன் அவன் ஊருள் நுழைந்தனனென்றும் கூறுகிறார். இலக்குவன் வரும் செய்தியுணர்ந்த சுக்கிரீவன் தாரையை யனுப்பினனென வால்மீகி கூற, கம்பர் அவள் தானே அனுமனோடு தன் தோழியர் சூழ வந்தனள் என்கின்றார். மிகஅலங்கோலமாக வந்தனளென வால்மீகிகூற, கம்பர் அவள் உத்தம ஒழுக்கத்தினளாய் கைம்மையளாய் வந்தனள் எனக் கூறுகிறார். தாரை கூறிய கூற்றால் இலக்குவன் சினம் தணிந்ததுகண்ட அனுமான் அவன் முன்னிலையில் வெளிப்பட்டுச் சினந்தணியப்பேசி அவனைச் சுக்கிரீவனிடம் அழைத்துப்போகின்றானெனக் கம்பர் புதுக்கதை புனைகிறார். பின்னர் இலக்குவன் அங்கதனிடம் தன் வருகை கூறியனுப்ப அவன் சுக்கிரீவனிடம் சென்று கூற சுக்கிரீவன் "குடிவெறியால் இத்தனை தீங்கு விளைந்தது. கள்ளினால் வருங்கேடுகள் அளப்பில; இனி நான் கள்ளுண்டேனேல் இராமனது சேவடி சிதைக்க" என்று சபதம் செய்கின்றனன். எனவும் அவர் புதுக்கதை புனைகிறார். கட்குடியை இனி விரும்புவதில்லை யெனச் சுக்கிரீவன் சூளுரைத்தமை யொன்றும் வால்மீகி கூறாதொழிய அவன் கூறியதாகக் கம்பர் கூறுவானேன்? ஈதெல்லாம் தீயவனாகிய சுக்கிரீவனை நல்லவனாகக் கூறி உலகை ஏமாற்றவல்லவா? இதே சிந்தனைதான் சுக்கிரீவன் தாரையைக் கூடினனெனக் கூறாமலிருக்கச் செய்ததும்! இங்கே அறிஞர் ஆழ்ந்து சிந்திப்பாராக. பின்னர் சுக்கிரீவன் அங்கதனை எதிர் கொண்டழைத்துவர ஏவிதான் வாசலண்டையில் நின்றான் எனவும், அங்கதன் இலக்குவனை அழைத்துப் போகிறானென்றும் அவர் புது வரலாறே புனைந்தனர். சுக்கிரீவன் காட்டிய அரியணையில் ஏறாமல் இலக்குவன் தரையிலிருந்தனனென்றும், பின்னர் இராமனிடம் போகும்போதும் நடந்து சென்றனனென்றும் வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கமபர் கூறினார். சேனைகள் வந்தபின் இலக்குவன் வேண்ட சுக்கிரீவன் இராமனைக் கண்டனனென வால்மீகி கூற, கம்பர் இலக்குவனைக் கண்டவுடனே சுக்கிரீவன அனுமானைப் படைதிரட்ட இருத்திஇராமனைச்சென்று கண்டனன் எனக் கூறுகிறார்.

# ஏழாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 39 முதல் 47 முடிய)

தன்னை மார்போடணைத்துச் சீதையைத் தேடச் சொன்ன இராமனிடம் சுக்கிரீவன் சேனைகள் வருகின்றன என்று கூறினான். இராமன் அவனை மறுபடியும் அணைத்துக்கொண்டு "முன்பு புலோமனென்ற அசுரனுடைய பெண்ணான பௌலோமியை அனுக்லாதன் என்ற தைத்தியனும் இந்திரனும் மணம்புரிய விரும்பினர். ஆனால், புலோமன் தன் மகளை அனுக்லாதனுடன் அனுப்பி விட்டான். அது கண்டு இந்திரன் அவனைக்கொன்று அப்பெண்ணைத் தூக்கிப் போனான். அதுபோல இராவணன் சீதையை எடுத்துச் சென்றான். இந்திரன் அவளுடைய தந்தையாகிய புலோமனைக் கொன்றதைப்போல நான் இராவணனைக் கொல்வேன்" என்றான். அப்போது வானரசேனைத் தலைவர்கள் வந்து மேலாடைகளை அரையில் கட்டிக்கொண்டு சுக்கிரீவனைப் பணிந்தனர். சுக்கிரீவன் அவர்களை இராமனுக்குக்காட்டி "இவர்களை வேண்டுமாறு செய்யக்கட்டளையிடு" என்றான். இராமன் அவனை மறுபடியும் தழுவிக்கொண்டு, "நீயே தலைவனாதலின் கட்டளையிடு" என்றான்.

சுக்கிரீவன் வினதன் என்ற சேனைத்தலைவனையழைத்து கிழக்குத்திசை சென்று இன்னின்ன இடங்களிலெல்லாம் தேட வேண்டுமென்று விவரமாகக் கூறினான். அங்கதன் அநுமான், சாம்பவன் முதலிய வீரர்களைத் தெற்கிலும், சுஷேணனை (தாரையின் தந்தை) வணங்கி மேற்கிலும், சதவலியை வடக்கிலும் தேடும்படி கட்டளையிட்டு, சுக்கிரீவன் இன்னின்ன இடங்களில் இவ்வாறு தேடவேண்டுமென அவர்களுக்கு அத்திசைகளைப்பற்றிய முழு விவரமும் கூறி அனுப்பி அவர்களை ஒரு மாதத்திற்குள் திரும்பிவரவேண்டுமென்றும் ஆணை தந்தான். அவன் தெற்கே செல்வோரிடம் தாமிரபரணியைத் தாண்டி முத்துக்கள் மலிந்த பாண்டிய மன்னரின்

தங்கமயமான தலை நகரைக்கண்டு அதற்குத் தெற்கே உள்ள கடற்கரையில் மகேந்திர மலையைக் காணவேண்டுமென்றும், அதற்கு நூறுயோசனைக்கப்பால் இலங்கை இருந்ததென்றும் கூறினான். பின் அவன் அனுமானை யழைத்துப் புகழ்ந்து முயற்சியில் தளராதிருக்கக் கூறினான்.

இராமன் அனுமானை யழைத்துத் தன் மோதிரத்தைச் சீதைக்கு அடையாளமாகக் காட்டும்படி கொடுத்து, "இதனால் சீதை உன்னைத்தெரிந்து செய்தி சொல்லியனுப்புவாள். உன்னால் என் காரியம் நிறைவேறிற்றென்று எண்ணுகிறேன்" எனப்புகன்றான். எல்லோரும் விடைபெற்றுத் தேடப் புறப்பட்டுச் சென்றார்கள். சுக்கிரீவனுக்கு உலகமுழுவதுமுள்ள இடங்களெல்லாம் எப்படித் தெரியுமென இராமன் வினாவினான். சுக்கிரீவன், "நான் வாலி நுழைந்திருந்த குகையை மூடிவிட்டு அரசேற்று தாரையையும் ருமையையும் பெற்று வாழும்போது வாலி வந்து என்னைத் துரத்தினான். அப்போது நான் உலகமெல்லாம் சுற்றிச்சுற்றி ஓடினேன், அதனால் எல்லாம் எனக்குத் தெரியும். கடைசியாக அனுமான் வாலி வாமுடியாத இம்மதங்க மலையில் நான் தங்கும்படி ஏற்பாடு செய்தான். நீ வரும் வரை அதில் தங்கியிருந்தேன்" என மறுமொழி கூறினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இந்திரனை நாம் முன்னர் கொலை பாதகத்துக்கு அஞ்சாத பாவியென்றும், மிகவும் தீய ஒழுக்கமுடையவனென்றும், பற்பல இடங்களில் விளக்கிக் காட்டினோம். இங்கு அவனைப்பற்றி இராமன் கூறும் வரலாற்றைப் பார்த்தால் அவன் மிகவும் கேவலமானவனாகக் காணப்படுகின்றான். பௌலோமி என்ற பெண்ணைத் தனக்குக்கொடாமல் இருந்ததற்காக அப்பெண்ணின் தந்தையைக் கொன்றதோடு அப்பெண்ணை அவளுடைய தந்தை அநுமதிப்படி அழைத்தேகியவனையும் கொன்று அப்பெண்ணைத் தூக்கிப் போனானாம். இவ்விந்திரனால் எத்தனை கொலைகள்? எத்தனை அழிவுகள்? இத்தீயவன் தேவர்கள் தலைவனாம்! அவனுக்குத் தெய்வங்களெல்லாம் உதவி செய்தனவாம்! இவ்விழிந்த கதைகளைப்

பாராட்டிப் படிப்போர் சிந்தனை தான் கெடாமல் என்செயும்? இவைகளெல்லாம் புண்ணியந் தரக் கூடியவைகள் !

தீயவனாகிய இந்திரனைப் போல இராமணன் சீதையைத் தூக்கிப் போயினனாம் ! இராவணன் தன்னுடைய தங்கையாகிய சூர்ப்பணகையை இராமன் கேடு செய்ததனாலேயே அவன் சீதையைத் தூக்கிப் போனான். ஆனால் இந்திரனுக்கு எவன் என்ன கேடு செய்தான்.? பெண்ணைக் கொடுக்க மாட்டேனென்பது ஒரு கேடாகுமா?

இராமன் சுக்கிரீவனை ஒரு முறையல்ல பல முறை மார்போடு தழுவிக் கொள்ளுகிறான். இக்கட்டுரை வரலாற்றுப் பகுதியில் மட்டுமல்ல; ஏனைய இடங்களிலும் அவன் சுக்கிரீவனை அவ்வாறு செய்தானென வால்மீகி பல முறை கூறுகிறார். சுக்கிரீவன் உண்மையில் குரங்காயிருந்தால் இராமன் அவ்வாறு தழுவிக்கொள்வானா? மேலும் வானரப்படைகள் தங்கள் மேலாடையை அரையில் கட்டிக்கொண்டு சுக்கிரீவனை வந்து பணிந்தனவாம்! அவ்வாறாயின் குரங்குகளுக்கு மேலாடையேது? அவைகளுக்கு அரசனைக் காணவரும்போது அதை அரையில் கட்டிக்கொண்டு வரவேண்டுமென்ற ஒழுக்க அறிவு தான் ஏது?

ஆதலின் இவர்களைக் குரங்கெனக் கூறிய தெல்லாம் ஆரியர் வேண்டுமென இழிவுபடுத்தச் செய்த முயற்சிகளே என்பது புலனாகும். இவ்வுண்மையை நாம் முன்னரும் நிலை நாட்டினோம்.

சுக்கிரீவன் தன்னைக் குகையில் வைத்து அடைத்ததோடு தன் மனைவியையும் கைப்பற்றியதைக் கண்ட வாலி துரத்த சுக்கிரீவன் உலகமெல்லாம் அலைந்து தவித்தானாம்; அப்போது அனுமான் அவனை மதங்க மலையிலிருக்கச் சொன்னானாம். இந்த இடத்தில் மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 155ல் "இந்த யோசனை அனுமானுக்கு முன்பு ஏன் தோன்றவில்லை?" எனக்குறித்திருக்கிறார். இது கவ

னிக்கத் தகுந்த குறிப்பே. இனி கம்பர் புரளியை ஆராய்வோம்.

இராமன் கூறுவதாக வால்மீகி கூறுகிற மிக இழிவான இந்திரனுடைய கொலைபாதகச் செயலைக் கம்பர் கூறவில்லை. அனுமான் சுக்கிரீவனுடனேயே வந்திருக்க அவனை சேனை சேர்க்கக் கிட்கிந்தையிலிருந்தனனாகக் கூறிய கம்பர் அவனைப்பற்றி இராமன் சுக்கிரீவனிடம் வினாவினானென்றும், அவன் பின்னர் சேனைகளோடு வந்து இராமனைக் கண்டனனென்றும் கூறினார். சுக்கிரீவன் இராமனைச் சென்று கண்ட அந்நாள் இரவு சுக்கிரீவனையும் அங்கதனையும் இராமன் அனுப்பிவிட்டு இலக்குவனோடு தனித்திருந்து அவன் கிட்கிந்தை சென்று மீண்ட வரலாற்றை முழுவதும் ஒன்றுவிடாமல் அவனிடம் வினாவியிருந்தனன் என்றும் கம்பர் புதுக்கதை புனைகிறார். கம்பர் கதை முழுதும் புதுக்கதைதானே! சேனைகள் வந்ததும் இராமன் தம்பியோடும் சுக்கிரீவனோடும் ஒரு மலைச் சிகரத்தில் ஏறிக்கொண்டு அவைகளை நோக்கி நெடுநேரம் கண்டும் எல்லை காணாமல் சேனை முழுதும் பார்க்க நாள் பல செல்லும். ஆதலின் மேல் நடக்க வேண்டியவைகளைச் செய்வோம் எனப் புகன்றனனெனவும் அவர் கூறுகிறார்.

சுக்கிரீவன் தான் நான்கு திசைகளில் அனுப்பிய வீரர்களுக்கு அவ்வத்தேசங்களிலுள்ள விவரங்களையெல்லாம் மிக விரிவாகக் கூறினனென வால்மீகி கூற, கம்பரோ அவன் தென்திசை விவரங்களை மட்டுமே விரித்துரைத்ததாகக் கூறுகிறார்.

வால்மீகி 40, 42, 43 ஆகிய மூன்று சருக்கங்களிலே முறையே கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைவிவரங்களை மிக விரிவாகக் கூறுகிறார். கம்பரோ அவைகளையெல்லாம் கூறாமல் விடுத்து ஒரே பாடலில் இன்னின்னாரை இன்னின்ன திசைக்கு அனுப்பினான் என்று மட்டும் கூறி அமைகிறார். இராமன் சுக்கிரீவனை நோக்கி உனக்கு இத்திசை விவரங்களெல்லாம் எவ்வாறு தெரியுமென்று வினாவியதை

யும் அதற்கு அவன் தன்னை வாலி துரத்தியபோது அங்கெல்லாம் ஓடிக் கண்டதை மொழிந்ததையும் கம்பர் கூறவில்லை. இராமன் அனுமானிடம் மோதிரம் தந்தபோது சொல்லிய மொழியெல்லாம், "இதனால் சீதை உன்னை இன்னாரெனவறிந்து செய்தி சொல்லியனுப்புவாள். உன்னால் என் காரியம் முடிந்ததாகவே நினைக்கிறேன்" என்பது மட்டுமேயாக, கம்பர் அனுமானிடம் இராமன் சீதையைக்கண்டுபிடிப்பதற்கு அவளுடைய அடையாளங்களையெல்லாம் மிகவும் விவரமாகக் கூறினனென ஒரு புதுக்கதை கட்டிக்கொண்டு சீதையை உள்ளங்கால் முதல் உச்சிவரை விவரித்துரைத்து மகிழ்கின்றார். ஒரு பெண்ணை ஒவ்வோருறுப்பாக வருணித்து மகிழவேண்டுமானால், அதற்குக் கம்பர் இவ்வாறுதான் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமோ? அதற்காக அவர் ஒரு தனி நூல் எழுதி மகிழ்ந்திருக்கலாமே!

கம்பர் சீதையின் அங்கங்களை விவரித்து முப்பத்து நான்கு பாடல்கள் பாடியிருக்கிறார். அந்த முப்பத்துநான்கு பாடல்களிலும் விவரித்த அங்க அடையாளங்களைக்கொண்டு அனுமான் சீதையைக் கண்டுபிடிக்கவேண்டுமாம்.

"மங்கையர் அவளை ஒப்பார் மற்றுளர்
இல்லர் என்னும்
சங்கையில் உள்ளம்தானே சான்றெனக்
கொண்டு சான்றோய்!
அங்கவள் நிலைமையெல்லாம் அளந்தறிந்து
அருகுசார்ந்து
திங்கள்வாள் முகத்தினாட்குச் செப்
பெனப் பின்னும் செப்பும்."

சீதையினுடைய பாதம், புற அடி, கணைக்கால், தோள், முன்கை, கை, நகம், கழுத்து, அதரம், பற்கள், மூக்கு, காது, கண்கள், புருவம், நெற்றி, முகம் கூந்தல், சொல், நடை, நிறம்

இவைகளையெல்லாம் மிகவும் விரிவாக விவரித்து அவளை அவ்வடையாளங்களால் கண்டு பிடிக்கவேண்டுமென்று இராமன் அநுமானிடம் சொல்லியனுப்புகின்றனன். இவைகளையாவதுவெளியில் தோன்றும் உறுப்புக்களாதலின் அநுமான் ஆராய்வான். ஆனால் இவைகளுள்ளும் அதரத்தைத் தேன் ததும்புவதென்றும், வாய், அமுதத்தினும் தேனினும் இனிய இரசமுடையதென்றும் கூறுகின்றார். இவைகளை நுகர்ந்தாலன்றி அறிவதெங்ஙனம்? இவைகளை ஆராயும்படி அநுமானிடம் இராமன் சொல்லியதாகக் கூறும் கம்பருடைய நோக்கம் யாதாமோ?

மேலும் கண்ணுக்குத் தெரியாமல் ஆடையுள் மறைந்திருக்கும் உறுப்புக்களாகிய தொடை, பெண் குறி, இடை, வயிறு, நாபி, நாபிக்கு மேல் வயிற்றிலுள்ள மயிரொழுங்கு, வயிற்றிரேகை, கொங்கைகள் இவைகளை யெல்லாம் விவரித்து அநுமானை ஆராய்ந்தறியுமாறு இராமன் கூறினதாகக் கம்பர் கூறுகிறார். இவைகளை ஆராய்வது எங்ஙனம்? விலைமாதும் இவ்வாறு ஆராய்வதற்கு இடங்கொடுக்க மாட்டாளே! அவ்வாறாக உலக மாதாவாகிய சீதா பிராட்டியாரின் இவ்வங்கங்களைச் சின்னத் திருவடியாகிய அநுமான் ஆராயுமாறு உலக நாயனாகிய திருமாலின் தோற்றமான இராமபிரான் வேண்டிக்கொண்டனனென்று கம்ப நாட்டாழ்வார் கூறுவது வியப்பாகவே உள்ளது! சீதையின் பெண் குறியைப் பற்றிக் கம்பர்,

"வாராழிக் கலசக் கொங்கை
வஞ்சிபோல் மருங்குலாள் தன்
தாராழிக் கலைசார் அல்குல் தடங்
கடற்கு உவமை தக்கோய்!
பாராழி பிடரில் தங்கும் பாந்தளும்
பணிவென்றோங்கும்
ஓராழித் தேரும் கண்ட உனக்கு
நான் உரைப்பதென்னே?

என (நாட விட்ட படலம் பாடல் 37ல்) இராமன் வாக்கால் கூறுகிறார். இதில் அவர், தாம் விரும்பி அடிக்கடி கூறும் கொள்கையினையும் மறந்தாரல்லர். இதை அவர் இம் முப்பத்துநான்கு பாடல்களுள் நான்குஇடங்களில் கூறுகிறார். இடையின் தன்மை கூறும்போது "கையில் தொட்ட எற்கு ணரலாம்" என்று இராமன் கூறியதாகக் கூறுகிறார்.

சீதை திருமகளினும் அழகி என்று கூறுமிடத்தும், அவளுடைய சொல்லை விவரிக்குமிடத்தும் புகழ்ந்து மகிழ்ந்த அவளுடைய கொங்கைகைப் பற்றிக் கம்பர்.

"செப்பென்பன் கலசம் என்பன்
செவ் விளநீரும் தேர்வன்
துப்பொன்று திரள் சூதென்பன்
சொல்லுவன் தும்பிக் கொம்பை
தப்பின்றிப் பகலின் வந்த சக்கர
வாகம் என்பன்
ஒப்பொன்றும் உலகில் காணேன்
பல நினைந்து உலைவன் இன்னும்"

என (நாடவிட்ட படலம் 43ல்) இராமன் வாக்கால் கூறி தமதுஉண்மை இயல்புவெளிப்படநின்றார். "உலகில் ஒப்பொன்றும் காணாது இன்னும் பல நினைந்து உலைவேன்" என்று கம்பர் கூறுகின்றார்.

"மேலே விவரித்தபடி அங்கங்களையெல்லாம் ஆராய்ந்து சீதை இவளே என அறிந்து அவளிடம் இன்னின்ன செய்திகளைக் கூறவேண்டும்" என இராமன் அனுமானை நோக்கிக் கூறியதாக ஆறு பாடல்கள் கம்பர் பாடுகிறார். அவற்றுள் ஒன்றில் (நாடவிட்ட படலம் 68ல்) கூட "முலைக்கிரிசுமந்த இளங்கொடி" எனச் சீதையைப் புகழ்ந்துஒப்புவமை ஆராய்கிறார். இவைகளை யெல்லாம் அறிஞர் ஆராய்ந்து சிந்தித்துக் கம்ப நாட்டாழ்வாரது திருவுளப் பாங்கைக் கணித்தறிய வேண்டுகின்றோம்!!

# எட்டாவது அத்தியாயம்.

—0—

(சருக்கங்கள் 48 முதல் 53 முடிய.)

அனுமான், அங்கதன் முதலியோர் புறப்பட்டு விந்திய மலையிலும், காடுகளிலும் தேடியும் சீதையைக் காணாமல் ஒரு பாழான காட்டைச் சேர்ந்தார்கள். அதில் கண்டு முனிவன் முன் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்தனன். அவனுடைய பதினாறு வயது மகன் வழி தப்பி இறந்து விட்டான், அதற்காக அம்முனிவன் அக்காட்டின் மேல் கோபங் கொண்டு உயிர்கள் மடிந்து பாலை வனமாம்படி சபித்தான்.

அக்காட்டைத் தாண்டிப் போகையில் அவர்கள் எதிரே ஓர் அரக்கனைக் கண்டு துணியை இறுகக் கட்டிக்கொண்டு போர் தொடங்கினர். அவன் அவர்களைக் கொல்ல ஓடி வந்தான். அங்கதன் அவனை இராவணன் என்று எண்ணிக் கொன்றான். அவர்கள் அவனே இராவணனென்று துணிந்து அங்கே பலகாலம் தேடி அலுத்துப் போனார்கள். அங்கதன் தேற்றத்தேறி அவர்கள் மறுபடியும் தேடினர்.

அவர்கள் ஓர் குகையைக்கண்டு அதனுள் துணிந்து நுழைந்து சென்றனர். அது மிகவும் இருட்டாக இருந்ததால் அவர்கள் அஞ்சினவர்களாய் ஒருவரை யொருவர் பிடித்துக் கொண்டு நெடுந்தூரம் சென்று பின் ஒளிமயமான இடத்தைக் கண்டனர். அது பல உயர்ந்த கட்டிடங்களோடு பொன்மயமாக விளங்கிற்று. அவர்கள் அவ்விடத்தில் மேலும் தேடிச் சென்றபோது ஓர் கிழப் பெண்மணியைத் தவக்கோலத்துடன் கண்டனர். அனுமான் அவளை யாரென வினவி அத்தங்கமயமான வனத்தின் வரலாற்றைக் கூறுமாறு பணிந்தான். அப்பெண்மணி, "மயன் என்பவன் இவ்வனத்தைப் படைத்தான். அவன் தன் மகள் மண்டோதரியை இராவணனுக்கு மணம் செய்து தந்ததாலும், ஏமையென்ற தேவப்

பெண்ணிடம் மிக விருப்பங் கொண்டிருந்ததாலும் இந்திரன் அவனைக்கொன்றான். அதன்பிறகு நான்முகன் இக்காட்டை அமைத்துத்தந்தான். நான் அவளுக்குத் தோழி. என் பெயர் சுயம்பிரபை. அவள் நான் முகனுலகத்துக்குப் போயிருக்கிறாள் நான் அவளுடைய ஆற்றலால் இங்கே ஒருவரும் வராமல்பாது காத்துளேன். நீங்கள் இங்கே எங்ஙனம் வந்தீர்கள்? பழங் களைத் தின்று நீருண்டு களைதீர்ந்த பின் கூறுங்கள்'' என் றாள்.

அனுமான் தங்கள் வரலாற்றை விவரமாகக் கூறி, "நீ எங்களுக்கு உணவளித்து மகிழ்வித்ததற்கு நாங்கள் என்ன உதவி செய்யவேண்டும்'' என வினாவினான். அவள், "நல்ல தவத்தைச் செய்துவரும் எனக்குப் பிறரால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை'' என மறுமொழி கூறினாள். அனுமான் அவ ளை வணங்கி, "அம்மா! நாங்கள் உனக்கு அடைக்கலம்; எங் கள் அரசன் சுக்கிரீவன் தந்த ஒருமாதமும் கழிந்தது; எங் களை இக்குகையிலிருந்து வெளியில் கொண்டுபோய் விட வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். அவள் அவர்க ளைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னாள். அவ்வாறே செய்தார்கள். உடனே அவள் அவர்களை வெளியே கொண்டு வந்து விட்டு வாழ்த்திக் குகையினுள்ளே சென்றாள். இவ்வ ரலாற்றை ஆராய்வோம்.

அனுமான் முதலியோர் அடைந்த காடு பாழாகக் கிடந்த தற்குக் காரணம் கண்டு முனிவன் சாபமாம். தன்னுடைய மகன் வழிதப்பி மடிந்தனனென்றால் அதற்குக் காடு என்ன செய்யும்? காடு உயிர்ப் பிராணியா? உயிர்ப் பிராணியாயி னும் அறிவுடையதாயின் அன்றோ வழிதப்பியவனுக்கு வழி காட்டும்? இவ்வளவு கூட அறிவில்லாத ஒருவன் முனிவனாம்! அவன் அறிவில்லாது கூறிய தீபசொல் பலித்ததாம்; அதனா லேயே அக்காடு உயிர்ப் பிராணிகளற்றுப் பாழாயிருந்ததாம்; என்ன பாருங்கள் இவ்வரிய முனிவருடைய அறிவுடைமையை! இத்தகைய கதைகளையும் மெய்யென மயங்கிப் படிப்போரும் உளரே! அது எதனால்? கல்வி அறிவில்லாமையினாலல்லவா?

அறிவென்பது ஒரு சிறிது மற்ற மிருகத்திலும் கேடுகெட்ட கண்டு முனிவன் ஒரு பாவமும் அறியாத காட்டைச் சபித்தான். அதனால் அக்காட்டில் வாழும் உயிர்ப் பிராணிகள் அழிந்து அது பாழாயிற்று என்பது மதியில்லாதவர்களும் நடைபெற்றதென நம்ப முடியாத வீண் கதையாகவன்றோ உள்ளது! இவ்விதமான இழிந்த கதைகள் மலிந்து கிடக்கும் இராமாயணத்தை இனியாவது உண்மையில் இத்தகையதென உணர்ந்து அறிஞர் ஒதுக்குவார்களாக.

குரங்குகள் அரக்கனைக் கண்டவுடன் தமது ஆடைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு போருக்குத் தயாராயினவாம்! இவை உண்மையில் குரங்குகளானால் இவைகளுக்கு ஆடையேது? இதனை முன் கட்டுரைகளிலும் குறித்தோம். இந்த ஏதுக்களெல்லாம் வானரர் என்று வால்மீகி கூறுபவரெல்லாரும் உண்மையில் மக்களே; குரங்குகளல்லர் என்ற உண்மையை மெய்ப்பிப்பனவன்றோ?

இந்திரனென்ற பாதகனுடைய கொலைபாதகச் செயலை இவ்வரலாற்றுப் பகுதியிலும் காண்கின்றோம். மயன் தனது மகளாகிய மண்டோதரியை இராவணனுக்கு மணம் செய்து கொடுத்ததாலும், ஏமையென்ற தேவப் பெண்ணை விரும்பியதாலும் இந்திரன் அவனைக் கொன்றானாம்! இந்திரன் தேவர்களுக்கெல்லாம் அரசன். இவன் ஒருவனைக் கொல்லுவதற்குக் கொள்ளும் காரணங்களைப் பாருங்கள்! இவ்வளவு அறிவு கெட்ட கொலைபாதகனும், பெரிய தாயாரின் உடலினுட் புகுந்து கருவழித்தவனுமாகிய இச்சண்டாளனாய இந்திரனுக்கு திருமால், நான்முகன், சிவன் முதலிய தெய்வங்களெல்லாம் உதவி செய்து வந்தனவாம்! அவ்வாறாயின் அத்தெய்வங்களின் இயல்புதான் எவ்வாறு இருந்திருக்க வேண்டும்? அறிஞரே சிந்தித்துணர்ந்து கொள்ளுங்கள்.

குகையினுள் அகப்பட்டுக்கொண்ட அனுமான் வழிதெரியாது வெளிவர மாட்டாமல் தட்டழிகின்றனன். பின் அவன் சுயம்பிரபையைப் பணிந்துவேண்ட, அவள் அவர்களைக் கண்

மனை மூடச் செய்து வெளியில் கொண்டு வந்து விடுகிறாள். இனி, கம்பர் புரளியைக் காண்போம்.

கண்டு முனிவனுடைய அறிவில்லாத சாபத்தைக் கம்பர் கூறாது மறைத்துவிட்டார். மேலும் அங்கதன் அரக்கனைக் கொன்ற பின்னரே அவர்கள் குகையினுட் புகுந்தனராகக் கம்பர் பிலம் புகுந்து வெளிவந்த பின்னரே அரக்கனைக் கண்டனர் என்று கூறுகிறார். வானரர்களனைவரும் பிலம் புகுந்தனரென வால்மீகிகூற, கம்பர் பிலம்புகுமுன் அனுமான் முதலிய சிலவீரர்மட்டும் தனித்து ஏனைய சேனையை முழுவதும் பிரித்து மகேந்திர மலையில் வந்து தம்மைக் கூடும்படி அனுப்பிவிட்டு தாம் பாலைவனங்கடந்து பிலம் புகுகின்றனர் என்று கூறுகிறார்.

கம்பருக்கு அனுமானை அளவில்லாத ஆற்றலுடையவனென்று பலவாறு புகழ்ந்து உலகத்தாரை ஏமாற்றவேண்டும்; அதற்காக அவன் பிலம்புகுந்த கதையையே மாற்றி எழுதுகிறார். அதாவது, பிலம்புகுந்தபோது வானரர் அனைவரும் வழி தெரியாமல் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு சென்றனரென வால்மீகி கூறியிருக்க, கம்பர் வழி தெரியாது அவர்கள் முறையிட்டதாகவும், உடனே அனுமான் அவர்களைத் தன் வாலைப் பிடித்துக்கொண்டு வரும்படி செய்து உள்ளே அழைத்துப் போனான் என்றும் கூறுகிறார்.

கம்பருக்கு எங்காவது ஒரு பெண்ணைப் பற்றிக் கூற வேண்டுமாயின் அவளுடைய கொங்கையை விவரிக்காது போனால் தூக்கம் வராதுபோலும்! இவ்வுண்மையை நாம் நெடுக எடுத்துக்காட்டி வருகின்றோம். கம்பருக்கு கவித்திறம் எவ்வளவிருந்தாலும் இச்செயல் அவருடைய பெருமையை முழுதும் குறைத்தே விடுகின்றது. வானரர் தெய்வத் தவத்திருந்த சுயம்பிரபையைக் கண்டனர் எனக்கூறிய இடத்தில் அவளைப் பற்றி அவர் நான்கு பாடல்கள் பாடுகிறார். (பிலம்புகு படலம் 46-49) அவைகளுள் இரண்டு பாடல்களில் அவர் தமது கருத்தை நிறைவேற்றுகிறார். அவை வருமாறு:—

(பாடல் 46)

"மருங்கு அலசவற் கலைவரிந்து வரிவாளம்
பொரும் கலசம் ஒக்கும் முலை மாசு புடை பூசி
பெருங்கலை மதித்திரு முகத்தள் பிறழ் செங்கேழ்
கருங்கயல் களிப்புறவு மூக்கினுதி கண்ணாள்"

(பாடல் 47)

"தேர் அனைய அல்குல் செறிதிண் கதலி செப்பும்
ஊருவினொ(டு) ஒப்புற ஒடுக்கிஉற வொல்கும்
நேரிடை சலிப்புற நிறுத்தி நிமிர்கொங்கைப்
பாரமுள் ஒடுக்குள உயிர்ப்பிடை பரிப்ப"

தவத்திற் சிறந்த பெண்ணொருவளை விவரிக்கும்போது அவளுடைய தவக்கோலத்தையும், பெருமையையும் விவரிப்பதை விடுத்து அவளுடைய கொங்கையையும், இடையையும், தொடையையும், ஏனைப் பாகங்களையும், அல்குலையும் விவரிப்பதுதான் தெய்வப் புலவர்களது இலக்கணம் போலும்!

சுயம்பிரபையைக் கண்டபோது வானரர் சீதையோ என ஐயுறறு அனுமானை ஆராயவேண்டினரெனவும், அவன் ஆராய்ந்து அல்லள் என்றனனெனவும் கம்பர் புதுக்கதை புனைகிறார். நான்முகன் ஏவலால் தனது தோழியினுடனிருந்த சுயம்பிரபையை மிகவும் கேவலமானவளாகக் காட்டக் கருதி, தமது மனம்போல அவர் மயனுடைய ஏவுதலால் தேவ தாசிகளுள் ஒருத்தியை அவள் கூட்டி வந்து மயனிடம் சேர்த்தாள் எனக் கூறுகிறார். அவ்வரம்பையைக் கூறும்போதும் அவள் கொங்கையைக் கம்பர் மறவாது கூறி மகிழ்கிறார். தேவதாசியைத் தேடி வந்து கண்டு இந்திரன் மயனைக் கொன்று குகைவழி இருளடையச் சபித்துச் சுயம்பிரபையைக் காவல் வைத்தகன்றன னெனவும், அவள் இந்திரனிடம் சாப விடைகேட்க இராமனுடைய தூதர்களாகிய வானரர்கள் அங்கே வரும்போது சாபம் நீங்குமென இந்திரன் கூறினனெனவும், அந்நாளை எதிர்பார்த்துக் கொண்டு அவள் தவங்கிடந்தா ளெனவும் கம்பர்

புதிதாகக் கதை கட்டுகிறார். இது எதற்கென்றால் இராமனைத் தெய்வமெனக் கூறி உலகை ஏமாற்றவே! முன்னர் அகலிகையைக் கல்லாக்கி இராமனை மிதிக்கச்செய்து பெண்ணாக்கிப் புதுக்கதை கட்டியவர் தானே கம்பர்! "கூற்றினும் பாவலர் கொடியராவரே" என்ற கவி இது பற்றியே எழுந்தது போலும்!! சுயமரியாதை உணர்ச்சி யென்பது கொஞ்சமாவது இவருக்கிருந்திருந்தால் இவ்வளவு கேவலமாகக் கதையை மாற்றி எழுதிப் பகைவர் புகழ் பேணுவாரா?

சுயம்பிரபை தனது வரலாறு கூறி வானரர்களை உண்ணச் செய்து அவர்கள் களைப்பு நீங்கிய பின் அவர்களுடைய வரலாறு வினவினாளென அவளை மிகவும் அருளுடையவளாக வால்மீகி கூற, கம்பர் அவர்களைக் கண்டவுடன் அவள் சினம் கொண்டு வரலாறு வினவினளென்றும், இராமன் பெயர் கேட்டவுடன் மகிழ்ந்து ஆடி அவர்களுக்கு உணவு கொடுத்து தன் வரலாறு கூறினளெனவும் மாற்றிக் கூறுகிறார். அவர்கள் பழங்களை உண்டதாக வால்மீகி கூற, அவள் படைத்த உணவை உண்டனரெனக் கம்பர் கூறுகிறார்.

அனுமான் பணிந்து அம்மே! உனக்கு யாம் செய்யத் தகுந்த கைம்மாறுளதோ என வேண்டிக் கொண்டும் கூட, அவள் தவமுதியளாகிய எனக்கு ஒன்றும் தேவையில்லை எனக் கூறிவிடுகின்றாள். உண்மை இவ்வாறாக அவள் வலிய அனுமானிடம் தான் தேவருலகடைய வழி உண்டோ என வினவியதாகவும், அதற்கு அனுமான் உன்னைச் சுவர்க்கத்தில் சேர்ப்பேனென வாக்களித்ததாகவும் கம்பர் பொய்க் கதை புனைகிறார். ஈதெல்லாம் தாம் வைணவரிடம் புகழ்பெறுமாறு அனுமானிடம் தெய்வத்தன்மை காட்டும் பொருட்டே கம்பர் இவ்வளவில் நின்றார். வானரர் பிலத்தினின்றும் வெளியே கொண்டு போய் விட வேண்டிக் கொண்டவுடன் அனுமான் பேருருவெடுத்து பிலத்தின் மேற்பாகத்தைப் பிளந்து பிடுங்கிக் கடலில் எறிந்தான் எனவும், வானரர் வெளிப்பட்டனரெனவும், சுயம்பிரபை விண்ணிடைப் போயினளெனவும் அனுமானுடைய புகழை அவர் மிக எடுத்தோதி

னார். உண்மை இதுவன்று. அனுமான் வெளியே வர முடியாமல் தட்டழிந்து அவளை வேண்டிக் கொள்ள அவ்வம்மை அவர்களைக் கண்ணை மூடிக் கொள்ளச் செய்து வெளியில் கொண்டு வந்து சேர்த்து மறுபடி பிலத்துட் போயினள் என்பதே உண்மை. உண்மையை உரைத்தால் அனுமானைச் சாதாரணக் குரங்கென உலகினர் சிந்தித்து மிகைபடப் புகழ மாட்டார்களல்லவா? அதற்காகவே கம்பர் இவ்வாறு பொய்யை மெய்போலக் காட்டி உலகை மயக்க முயன்றார்.

அரக்கன் வானருக்கெதிரே தோன்றி அவர்களைக் கொல்லவர, அங்கதன் அவனை அடித்துக் கொன்றான் என வால்மீகி கூறுகிறார். கம்பரோ இக்கதையை மாற்றி குரங்குகள் ஒரு குளக்கரையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவன் தோன்றிக் கொல்ல வந்து அங்கதனை அடித்தான் எனவும், அங்கதன் விழித்து அவனை அறைந்து கொன்றானெனவும், பின்னர் குரங்குகளெல்லாம் விழித்து நடந்ததுணர்ந்து வேறு யாரேனும் வந்தாலும் வரலாமென அதன் பின் தூங்காதிருந்தனரெனவும் கூறுகிறார். இது உறங்கும்போது கூடக் கொல்லவரும் தீய சிந்தையன் என அவர் அவ்வரக்கனை உலகத்தாருக்கு மிகக் கொடியவனாகக் காட்ட விரும்பியதையே விளக்கும்.

---

# ஒன்பதாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 53 முதல் 57 முடிய)

சுயம்பிரபை வானரர்களைக் கொண்டுவந்து விட்ட இடம் பெருங்கடல். அவர்கள் கடற்கரையிலிருந்து மலையடிவாரத்தில் உட்கார்ந்து கொண்டு சுக்கிரீவன் கொடுத்தகெடு(தவணை) நீங்கி விட்டபடியாலும், சீதையைக் காணாமையினாலும் கலங்கினார்கள். அங்கதன் அவர்களை நோக்கி, "நமக்கு சுக்

கிரீவன் விதித்த கெடு நீங்கி விட்டபடியால் நம்மைக் கட்டாயம் கொன்று விடுவான். அங்கே போய்ச் சாவதிலும் இங்கேயே பட்டினி கிடந்து சாவது நலம். என்னை இளவரசாக்கிய சுக்ரீவன் இப்பொழுது கொல்வானோ என்றால் அவன் என்னிடத்திலுள்ள அன்பினாலா பட்டங் கட்டினான்? இராமனுடைய ஆணையால் அப்படிச் செய்தான். இப்பொழுது நான் செய்த குற்றத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு என்னிடத்தில் அவனுக்கு முன்னமேயுள்ள பகையைத் தீர்த்துக் கொள்வான். இதில் ஐயமில்லை. ஆகையால் இக்கடற் கரையில் படுத்துப் பட்டினியிருந்து உயிரை விடுவோம்'' என்று கூறினான்.

அதைக் கேட்டு எல்லோரும், ''சுக்கிரீவன் மிகவும் கொடுமையானவன்; இராமனுடைய கோபத்தைத் தணிக்க விரும்பி நம்மைக் கொன்று விடுவான். ஆதலின் சீதையைக் கண்டு பிடிப்போம், இல்லையானால் உயிரைவிடுவோம்'' என்று கூவினர். அப்போது தாரன், ''உங்களுக்கு விருப்பமிருந்தால் மறுபடியும் அந்தக்குகையுள்ளே போய் வாழ்வோம். அங்கே இராமன் முதலியோர் வரமுடியாது'' என்று கூறினான்.

அதற்கு அங்கதன் இயைவது கண்டு, அனுமான் அங்கதனுடைய சிறந்த குணங்களை நோக்கி வாலியைப் போல அரசாளுவதில் நல்லனாவானெனத் துணிந்தான். அதனால் அனைவரும் அவனுடைய பேச்சைக் கேட்டு நடக்காமலிருக்கும்படி அனுமான் பல பல எண்ணி ஒற்றுமையில்லாமற் போகும்படி அவர்களைக் கலைத்து அவர்களைத் தனக்கு அனுகூலமாக்க முயன்றான். பின் அங்கதனுக்கு அச்சமுண்டாகும்படி அனுமான், ''இவர்கள் உன்னோடு நிலைத்திருக்க மாட்டார்கள். இவர்கள் உன்னைக் காட்டிலும் வல்லவர்களானதால் உனக்கு அடங்கி நடக்கமாட்டார்கள். சாம்பவன் நீலன் இவர்கள் சுக்கிரீவனை விட்டு உன்னோடு ஒரு நாளும் சேர மாட்டார்கள். மேலும் குகைக்குள் ஒருவராலும் வர முடியாதென்று எண்ணாதே. இலக்குவனுடைய அம்பு அதைத் தூளாக்கி விடும். இந்த வானரர்கள் தம்முடைய

மனைவி மக்களைப் பிரிந்து எத்தனை நாள் தான் துன்புற்றிருப்பார்? அவர்கள் உன்னை விட்டு ஓடி விடுவர். சுக்கிரீவனோ நல்லவன்; உன்னிடத்தில் அன்புடையவன்; உன் தாயிடம் விருப்புடையவன்; ஆகலின் உனக்கு நலமே செய்வான். ஆகையால் நீ அஞ்சாமல் எங்களுடன் வா'' என்று அழைத்தான்.

இப்படி அனுமான் சுக்கிரீவனைப் புகழ்ந்துரைத்ததைக் கேட்ட அங்கதன், ''அனும! திண்மையும், நல்லெண்ணமும், அருளும், ஆண்மையும் சுக்கிரீவனிடத்தில் இல்லை. தமையனுடைய மனைவி தனக்குத் தாயல்லவா? அவன் பிழைத்திருக்கும்போதே அவனுடைய மனைவியைக் கைப்பற்றுகிறவனுக்கு நல்லெண்ணமாவது கலக்கமில்லாமையாவது இருக்குமா? என் தந்தை மாயாவியுடன் போர் செய்யும் போது குகையின் வாயிலை மூடினவன் கொடுமையில்லாதவனென்று எப்படிச் சொல்ல முடியும்? தீசான்றாக இராமனுக்குக் கையடித்துக் கொடுத்து அவனிடத்தில் ஒப்பில்லாத உபகாரத்தைப் பெற்று அவனுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை மறந்தவன் எவன் செய்த உபகாரத்தை நினைக்கப் போகிறான்? அவனிடத்தில் வஞ்சகமென்ற தன்மை நன்றாக விளங்கவில்லையா? சேனைகளை வரவழைத்து சீதையைத் தேட அனுப்பினது அதர்மத்திற்குப் பயந்து செய்ததல்லவே! இலக்குவனுடைய பாணங்களுக்குப் பயந்து செய்ததல்லவா? இது ஒரு தர்மமா?

சுக்கிரீவன் பாவி, நன்றியற்றவன், சஞ்சல புத்தியுள்ளவன், மறதியுள்ளவன்; இப்படிப்பட்டவனிடத்தில் மேன்மையான சுபாவமுள்ள எவனாவது நம்பிக்கை வைப்பானா? நான் அவனுக்குத் தாயாதி; அவனுக்குப் பிறகு பட்டத்தை அடைய வேண்டியவன். எனக்குப் பிழைக்க ஆசையிருந்தால் அவனை நம்பலாமா? உன்னை இளவரசாக்கவில்லைபோ என்றால், அரசர்கள் தமக்குப் பிறந்த மகனுக்குப் பட்டங்கட்டுவார்கள், அவன் குணசாலியானாலும், குணமில்லாதவனானாலும், கவனிக்க மாட்டார்கள். சத்துரு குலத்தில் பிறந்த

என்னை உயிரோடு வைப்பானு? நான் அவனுக்கு அபகாரம் செய்தவன், பலமில்லாதவன், அநாதை, அவனுக்கு விரோதி யென்பதைப் பிறருக்குத் தெரியும்படி சொல்லியும் விட்டேன். உங்களுடன் கிட்கிந்தைக்கு வந்து உயிர் தப்புவேனா? சுக்கிரீவன் குரூரன், இரக்கமற்றவன், இரகசியமாகக் கெடுதி செய்பவன்; நாட்டை ஆளுவதற்கு நான் இடையூறா யிருக்கிறேனென்று என்னைக் காவலில் போடுவான்; அதைக் காட்டிலும் இங்கேயே பட்டினி கிடந்து உயிரை விடுவது நலமல்லவா? நீங்களெல்லோரும் திரும்பிப் போங்கள்; நான் உங்களுடன கிட்கிந்தைக்கு வருவதில்லை; இது உறுதி. இங்கேயே உயிரை விடுவேன். இதுவே எனக்கு நன்மை. நீங்கள் நான் இராம லக்ஷுவரையும், எனது சிறிய தகப்பனையும், தாய்மாரையும் கேட்டதாகச் சொல்லுங்கள். என் தாய் எனக்காக வருந்தாதபடி தேற்றுங்கள். நான் இறந்ததைக் கேட்டு அவள் கட்டாயம் இறப்பாள்'' என்று கூறி சாம்பவன் முதலிய பெரியோரை வணங்கி பூமியில் தருப்பைகளை விரித்து அழுது கொண்டே படுத்தான்.

அதைக் கண்டு வானரர்கள் அனைவரும் கண்ணீர்பெருக வாய் விட்டலறிச் சுக்கிரீவனை இகழ்ந்து, வாலியைப்புகழ்ந்து அங்கதனைச் சுற்றி தாங்களும் உயிரை விட நிச்சயித்து தருப்பை மேல் கிழக்குமுகமாக இருந்தார்கள். அவர்கள் சடாயு வதையையும், வாலி வதையையும் பற்றிப் பேசினார்கள்.

அப்போது ஒரு குகையிலிருந்து சடாயுவின் அண்ணனாகிய சம்பாதி என்ற கழுகு வெளியே வந்து, ''இவர்கள் வலிய வந்து அகப்பட்டார்கள்; இவர்களை ஒவ்வொருவராகப் பிடித்துத் தின்று பசியாறுவேன்'' என்றான். இதைக் கேட்ட அங்கதன் வருத்தமடைந்து அனுமானை நோக்கி ''நாம் சீதையைத் தேடிக் காணாமல் உயிரை விடப் போகின்றோம். சடாயு சீதையை மீட்க இராவணனோடு சண்டை செய்து கொல்லப் பட்டான்; அதனால் சுக்கிரீவனுடைய பயத்தினின்றும் நீங்கினான். சடாயு இறந்ததாலும், தசரதன்

மாண்டதாலும், சீதை எடுத்துப் போகப் பட்டதாலும் நம்முடைய உயிருக்கு முடிவு காலம் வந்து விட்டது" என்று கூறினான். இந்நிகழ்ச்சிகளைக் கேட்ட சம்பாதி, "என் தம்பியாகிய சடாயுவின் சாவைப் பற்றிக்கூறி என் மனதை நடுங்கச் செய்தவன் யார்? அவன் இறந்த காரணமென்ன? இவ்வளவு நாட்கழித்து என் தம்பியின் பெருமைகளைக் கேட்டு மகிழ்ந்தேன். எல்லா விவரத்தையும் கூறுங்கள். நான் சிறகற்றுப் பறக்க முடியாதவனாக இருக்கிறேன். என்னை இறக்கி விடுங்கள்" என்றான். அவர்கள் அவன் சொல்லை நம்பவில்லையானாலும் விரைவில் இறப்பது நல மென எண்ணினர். அங்கதன் சம்பாதியை கீழே இறக்கி விட்டு, "நான் ரிட்சரஸ் என்ற வானரத் தலைவனுடைய பேரன். என் தந்தையைக் கொன்று என் சிற்றப்பனுக்கு முடி சூட்டிய இராமனால் ஏவப்பட்டு சீதையைத் தேட வந்து முடியாமல் இறக்கத்துணிந்துளோம்" என்று கூறி சடாயு இறந்த வரலாற்றையும் விரித்துரைத்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அங்கதனுடைய உள்ளக்கிடை மேலே கண்ட வரலாற்றால் தெளிவாக விளங்குகிறது. அதனால் சுக்கிரீவனைப் பற்றி வானரர் யாது நினைத்திருந்தார்கள் என்ற உண்மையும் வெளியாகிறது. சுக்கிரீவன் மிகவும் பொல்லாதவனாகையால் தன்னைக் கொன்று விடுவானென அங்கதன் கூறுகிறான். அதைக் கேட்ட வானரரும் சுக்கிரீவனை மிகவும் தீயவனெனவே கூறி உயிரிழக்கத் துணிகின்றனர். அப்போது தாரன் என்பவன் குகையினுள்ளே போய் வாழலாமெனக் கூறுகிறான். அதற்கு அங்கதன் முதலியோர் இணங்குகின்றனர்.

அனுமான் சுக்கிரீவனுக்கு உயிர் நண்பன். ஆதலின் வானரர்கள் அங்கதனோடு சேர்ந்து சுக்கிரீவனை இகழ்வதைக் கண்டு அவர்களுக்கு வேண்டியபடிபேசி, அவர்களுடைய மனைவி மக்களை நினைவுறுத்தி, அவர்களைத் தன் வசப்படுத்த முயல்கின்றான். அவர்கள் சிறிது கலங்கி

யமை கண்டு அங்கதனையும் வெருட்டுகின்றான்; வெருட்டி சுக்கிரீவனை நல்லவனெனச் சொல்லி அங்கதனைத் தம்மோடு வருமாறு அழைக்கின்றனன். இதனால் அனுமானுடைய சூழ்ச்சி வன்மையும், தீயவனாகிய சுக்கிரீவனுக்காக அவன் பட்ட பாடும் விளங்குகின்றன.

இதன்மேல் அங்கதன் கூறுகின்ற மறுமொழிதான் மிகவும் கவனித்தற்பாலது. அதனை நம் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் எழுதியுள்ளபடியே எழுதியிருக்கின்றோம். அதனை ஒவ்வொருவரும் மறுமுறையும் படிக்க வேண்டுகின்றோம். அதனால் அங்கதனுடைய மனப்பான்மை தெளிவாகிறது. அவன் தனது தாயைச் சுக்கிரீவன் கைப்பற்றியது பற்றி மிகக் கவலை கொண்டிருந்தனன். சுக்கிரீவனுடைய கொடுந் தன்மைகளும் அப்பேச்சால் வெளிப்படுகின்றன. சுக்கிரீவன் மறைவாகச் சூழ்ச்சிகள் செய்து தீமை விளைவிப்பவன். தனது கூடப்பிறந்த அண்ணனை உயிரோடு குகைக்குள்ளே வைத்து மூடி விட்டு அரசேற்று அவனுடைய மனைவியையும் தன் மனைவியாக்கிக் கொண்டவன். தனது அண்ணனை இராமனால் மறைந்திருந்து கொல்லச் செய்தவன். இராமனுக்கு மிகவும் நல்ல நண்பனைப் போல நடந்து தன் காரியம் முடிந்து அரசனானவுடன் தனது நண்பனாகிய இராமனுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை மறந்து கள்ளிலும், காமத்திலும் ஈடுபட்டிருந்தவன். இலக்குவன் கொன்று விடுவனோ என அஞ்சியே வானரரை அனுப்பிச் சீதையைத் தேடச் செய்தவன். இத்தகைய கொடும் பாவியினிடத்தில் கருணையையாவது, இரக்கத்தையாவது, அன்பையாவது, பெருந்தன்மையையாவது எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என அங்கதன் வினாவுகிறான். இவ்வளவையும் கூறி அழுது தன்னால் கிட்கிந்தைக்கு வர முடியாதெனப்பகன்று உயிர் விடத் துணிகிறான் அங்கதன்.

இத்தனையையும் கேட்ட மாத்திரத்தில் வானரர்களெல்லோரும் மெய்மைக்குக் கட்டுப்பட்டவர்களாகி அங்கதனோடு இறக்கத்துணிகின்றனர். அவர்கள் வாலியை வாயாரப்

புகழ்ந்து வாழ்த்தி சுக்கிரீவனைப்பலவாறு இகழ்ந்து பேசுகின்றனர். உண்மையே என்றும் நின்று நிலவுமல்லவா? அநுமான் செய்த சூழ்ச்சிகளெல்லாம் பயனில்லாதன ஆயின. இதனால் வானர வீரர்கள் வாலியிடத்தில் எவ்வளவு அன்பும், பற்றும் கொண்டிருந்தனரென்பதும், அவர்கள் சுக்கிரீவனை எவ்வளவு தூரம் வெறுத்தார்களென்பதும், வாலி அன்பும், அறனும், அருளும் கொண்டு செங்கோலோச்சிய மெய்யரசன் என்பதும் தெளிவாக விளங்குகிறது.

அங்கதன் தான் எவ்வளவுதூரம் சுக்கிரீவனை வெறுத்தான் என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றனன். அதனால்தான் கிட்கிந்தைக்கு வந்தால் சுக்கிரீவன் கட்டாயம் கொன்றுவிடுவானென அஞ்சுகின்றனன். சம்பாதியைக் கண்ட பின்னர் அங்கதன் அநுமானிடம், "சடாயு இறந்தனன், அதனால் சுக்கிரீவனுடைய பயத்தினின்றும் நீங்கினான்" என்று கூறுகிறான். இதனாலும் சுக்கிரீவனுடைய தீக்குணம் வலியுறுகின்றது. மேலும் சுக்கிரீவன் காட்டில் வாழும் உயிர்ப் பிராணிகளையெல்லாம் துன்புறுத்தி வந்தனனென்ற உண்மையும் புலனாகிறது.

சம்பாதி வானரர்களை யெல்லாம் பிடித்துத் தின்னத் துணிகின்றது. அது சடாயுவினுடைய அண்ணன்; இவர்கள் அருணனுடைய பிள்ளைகளாம்! இவ்வாறு உயிர்க்கொலை சால்புடைத் தென்று திரிந்த பறவைகள் அருளுடைய மக்களினும் அன்போடு நடந்தன எனக் கூறுவது பொய்யுரையாவதுமன்றி வியப்புரையுமாகின்றது! இனி கம்பருடைய புரளியை வெளிப்படுத்துவோம்.

கம்பர் தமது இயற்கைக் கொப்ப மேலே கண்ட வரலாறு முழுவதையுமே மாற்றி விடுகிறார்.

வானரர் குகையிலிருந்து வெளிவந்தவுடன் தெற்குப் பெருங்கடலை கண்டனரென வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவர்கள் வெளிவந்த பின் அரக்கனால் தூங்கும்போது

எதிர்க்கப்பட்டு பெண்ணைநாடு, விதர்ப்பநாடு, தண்டகாரணியம், முண்டகத்துறை, பாண்டுகிரி இவைகளிலெல்லாம் சீதையைத் தேடிக்காணாமல் கோதாவரியை அடைந்தனரென்றும், பின் சுவரைத் துறை, அருந்ததிமலை, வேங்கடமலை தொண்டைநாடு தமிழ் நாடு, இவைகளில் எல்லாம் காணாமல் மகேந்திர மலையை அடைந்து கடல் கண்டனரென்றும், அங்கே குகை புகுமுன் பிரிந்தனுப்பிய வானரச்சேனை அவர்களை வந்து சேர்ந்ததென்றும் விரித்து ஆறு செல்படலமெனவே ஒரு படலம் பாடியிருக்கிறார். சுக்கிரீவன் தென்திசை வழிபற்றி விரித்துரைத்ததாக வால்மீகி கூறுவனவற்றை உண்மையில் வானரர் போகவில்லையானாலும் போனதாக வைத்துக்கொண்டு தாம் பாடவேண்டுமென்னும் விருப்பால் பாடினார் கம்பர் என்றாலும், வால்மீகி போக்கில் அவர் போய்த் தமது விருப்பத்தை முன்னேற்ற சுக்கிரீவன் கூறினானென விரித்துரைத்திருக்கலாம். அவ்வாறும் அவர் செய்தாரல்லர். மேலும் கம்பரும் வால்மீகியும் தெற்கு நோக்கிப் போவாருக்குக் கூறிய வழி விவரம் பிழைபாடுடையதாகவே காணப்படுகிறது. ஏனெனில், இராமன் சீதையை இழந்தது பஞ்சவடியிலே. பஞ்சவடியோ கோதாவரி நதிக்கரையிலிருந்தது. அவ்வாற்றில் இராமன் பல முறை சீதையுடன் சென்று நீர் விளையாடினனென்றும், சீதையைப்பிரிந்தபின் இலக்குவன் அவளை அவ்வாற்றின் கரையிலெல்லாம் போய்த் தேடிவந்தானென்றும், அதன் பின்னர் இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடித்தெற்கு நோக்கியே வந்து கிட்கிந்தையை அடைந்தனரெனவும் படித்துளோம். இஃது இவ்வாறாக, கோதாவரிக்கு எவ்வளவோ தெற்கேயிருந்த கிட்கிந்தையிலிருந்து கொண்டு சுக்கிரீவன் கோதாவரிக்கும் வெதூரம் வடக்கேயிருந்த பல இடங்களையும் கூறி, கோதாவரியையும் கூறிப்பின் தெற்குப் பக்கங்களை விவரித்தனனென வால்மீகி கூறுவதும், கம்பரும் அவ்வாறே விவரிப்பதும் எங்ஙனம் பொருந்தும்? அறிஞர் இதனைச் சிந்திப்பார்களாக.

சுக்கிரீவனுடைய வெறுக்கத்தகுந் தீச்செயல்களை யெல்லாம் விவரித்துரைத்து அங்கதன் இறக்கத்துணிந்ததையும் வானரர் சுக்கிரீவனை இகழ்ந்தமையையும், அனுமான் செய்த சூழ்ச்சிகளையும், பின்னர் அங்கதன் மிக விரிவாகச் சுக்கிரீவ னுடைய தீய தன்மைகளை எடுத்தோதி இறக்க முன்வந்த தையும், வானரர் அனைவரும் வாலியைப் புகழ்ந்து சுக்கிரீ வனை இகழ்ந்து அங்கதனோடு இறக்கத் துணிந்ததையும் கம் பர் முற்றிலும் மறைத்துவிட்டார். சுக்கிரீவனை மிகவும் நல்ல வனாகக் காட்டும் நோக்கத்தில் முனைந்து நிற்கும் கம்பர் இவ் வரலாற்றை எவ்வாறு கூறுவார்? அதனால் அவர் இவைக ளையெல்லாம் மறைத்ததோடு அங்கதன் முதலியோர் சுக்கிரீ வனாதியோரிடம் மெய்யன்புடையவர்போல் நடந்ததாகவும் அவர் புதுக் கதை கட்டுகிறார். அது வருமாறு:—

“சீதையைக் கண்டுபிடித்துத் தம் வாக்குறுதியை நிறை வேற்றாமல் திரும்பிக் கிட்கிந்தை போகவில்லை” என வான ரர் தமது உயிரைவிடத் துணிகின்றனர். அங்கதன் அவர்க ளோடு இசைந்து தன்னுயிரைவிடத் துணிகிறான். (இந்த இடத்தில் கம்பர் அங்கதன் கூறியதாக “எந்தையும்முணியும்” எனக்கூறுகிறார். இது வெறுப்பால் கூறியதாகாமல் உண்மை யன்போடும் பற்றுதலோடும் இதனைக் கூறியதாகவே கூறுகி றார்) சாம்பவன் அங்கதனைத் தடுத்து தாம் எல்லோரும் உயிர்விட்ட செய்தியைக் கிட்கிந்தையில் சென்று சொல்லும் படி வேண்டுகின்றான். ஆனால் அங்கதனோ “நீங்களெல் லோரும் சாக நான் மட்டும் உயிருடன் போதல் அழகோ? அதனால் நீங்கள் இறப்பதன் முன் நான் இறப்பேன். நான் இறந்த செய்தியை அறிந்தவுடன் சுக்கிரீவனும் தாரையும் உயிர் விடுவர்; இராமனும் தம்பியுடன் மடிவான். இதனை அறிந்த அயோத்தியாரும் மடிவர். சீதையால் இத்தனை துன்பம் விளைந்ததே” என அழுதான். சாம்பவனோ, “உன் குலத்துக்கு உன்னைத் தவிர வேறு பிள்ளைகளில்லை. அரச குலம் அற்றுப்போம். ஆதலின் நீ போய்ச் சீதையைக்காண முடியாமையும் எமது அறிவையும் கூறு” என்றனன். இத னைக்கேட்ட அனுமான், நாம் சீதையைக் கண்டுபோனால்

குறித்த காலவரம்பு கடந்தோமென அரசன் கூறுவானா? மாட்டான். ஆதலின் நாம் சீதையைத்தேடி அம்முயற்சியில் மடிவதே வீரம்'' என்று கூறினான்.

மேலே கண்டதுவே கம்பர் கூறும் வரலாறு. அறிஞரே! இதனால் கம்பர் எவ்வளவு தூரம் உண்மையை மறைத்துப் பொய்யை மெய்யாகப் பாடியிருக்கிறார் என்பதையும், இதனால் தமிழுலகு எவ்வளவு தூரம் ஏமாந்து போம் என்பதையும் சிந்திப்பீராக. சம்பாதி வானரரையெல்லாம் தின்று விடுவனெனக் கூறியதையும், அது கேட்டு அங்கதன் அனுமானிடம் கூறியதையும் கம்பர் மறைத்து விட்டு, அனுமான் "சடாயுவைப்போல நாமும் சீதையைத் தேடுவதில் உயிரை விடுவோம்'' எனக் கூறினனெனவும், அதுகேட்டுச்சம்பாதி வந்தனனெனவும் கூறுகிறார். நடக்கவும் முடியாதநிலையிலிருந்த சம்பாதியை அங்கதன் இறக்கிவிட்டனனென வான்மீகி கூற, கம்பர் சம்பாதி தானே நடந்து வந்ததெனக் கூறுகிறார். சம்பாதிவானரரைக்கொன்று தின்பேனென்றதைக் கம்பர் கூறாது மறைத்ததேன் என்றால், இராமனுக்கு வேண்டியவர்களுடைய தீய தன்மைகளை யெல்லாம் மறைத்து நலம் பெறக் காட்டுவதே கம்பருடைய தொழில், அதுபற்றியே அதை மறைத்தவராவர்.

---

# பத்தாவது அத்தியாயம்.

---

(சருக்கங்கள் 58 முதல் 67 முடிய)

**சம்பாதி** கண்ணீர் பெருக்கி, "சடாயு என்னுடைய தம்பி; எனக்கு இப்போது அவனைக்கொன்ற இராவணனைப் பழிவாங்க ஆற்றலில்லை. நானும் சடாயுவும் ஒருவரையொருவர் வெல்லக்கருதி உயரப்பறந்தோம்; சூரிய வெப்பத்தால் சடாயு வருந்தினான்; அவனை என் சிறகுகளால் மறைத்துக் காத்தேன்; அதனால் வெப்பந் தாங்கமாட்டாமல் என் சிறகு

கள் எரிந்துபோக நான் இங்கே விழுந்தேன்; அது முதல் சடாயுவைப்பற்றிய செய்தி எனக்குத் தெரியாது'' என்றான். அங்கதன் இராவணனைப்பற்றி வினாவினான். சம்பாதி, "ஒரு நாள் இராவணன் ஒரு பெண்ணைத் தூக்கிப்போனான்; அவள் இராமா இலக்குவனா என்று கூவி நகைகளைக் கழற்றி எறிந்தனள்; அவன் சீதையை இங்கிருந்து நூறு யோசனைக் கப்பாலுள்ள இலங்கையில் வைத்திருக்கிறான்; நீங்கள் போய் அவளை மீட்டுக்கொண்டு வாருங்கள்'' என்று கூறி அவர்கள் உதவியால் கடலில் தம்பிக்கு நீர்க்கடன் கழித்தது. சாம்பவன் சீதையைத் தூக்கிச்சென்ற விவரம் கேட்க, சம்பாதி "கேளுங்கள்! ஒரு நாள் என் மகன் உணவில்லாமல் திரும்பி வந்தான்; நான் கண்டித்தேன்; அதற்கு அவன் தான் அன்று ஒரு பெண்ணைத் தூக்கி வந்த இராவணனை அப்பெண்ணோடு கொன்றுவர எண்ணினதாகவும், அப்பெண்ணைத் தூக்கிச் சென்றவன் பணிந்து விடை பெற்றுச் சென்றதாகவும், அதனாலேயே உணவில்லாமல் வந்ததாகவும் கூறினான். இதனாலும் இராவணனே தூக்கிச் சென்றான் என்பதை அறிந்தேன், முயற்சியை விடாதீர்கள்'' என்று கூறிற்று. அப்போது சம்பாதிக்கு இறகுகள் முளைத்தன. அதனால் அது மகிழ்ந்து 'நான் சிறகற்று இந்த மலையில் விழுந்தேன். இங்கே நிசாசர முனி தவமியற்றினன். அவனுக்கப்புறமும் நான் எண்ணாயிரம் ஆண்டுகளாக இங்கே வாழ்ந்தேன். அம்முனிவன், ஒருநாள் நானும் சடாயுவும் மனித உருவுடன் அவனை வணங்கியதை நினைப்பூட்டியதோடு என் சிறகற்ற செய்தியறிந்து சீதையை இராவணன் தூக்கிச் செல்வானென்றும், சீதை பட்டினி கிடப்பதையறிந்து இந்திரன் அவர்களுக்கு அமுதம் அனுப்ப அவள் உண்டு ஓராண்டுவரை பசியாதிருப்பாள் என்றும், வானரர் இங்கே அவளைத் தேடி வருவார்களென்றும், நான் அவர்களிடம் நடந்ததைக் கூறவேண்டுமென்றும், அப்போது எனக்கு சிறகு மறுபடியும் முளைக்குமென்றும் சொன்னான். முயன்று சீதையைக் கண்டு பிடியுங்கள்' எனறு கூறிப்பறந்து போயிற்று.

மறுநாள் அங்கதன் சபை கூட்டிக்கடலைத்தாவ ஆலோசித்தான். பலரும் தங்களால் இயலாதென்று கூறிவிட்டனர். அங்கதன் தான் போகிறேனென்ன, சாம்பவன், "அரசனாகிய நீ போதல் தக்கதன்று; நீ ஏவ நாங்களே போகவேண்டும்" என்றான். அங்கதன், "ஒருவரும் போகவில்லையென்றால் என் செய்வது? தக்காணைத்தேடு." என்றான்.

சாம்பவன் தனியிருந்த அநுமானை நோக்கி, "வல்லமையுடையோய்! வானர வீரனாகிய கேசரியின் மனைவி அஞ்சனையென்பாள் ஒருத்தி இருந்தனள்; அவள் குஞ்சரன் என்ற வானரனுக்கு மகள். அவள் மனித உருவுடன் ஒரு நாள் உலாவ, காற்றரசன் (வாயுபகவான்) அவளுடைய வெண் பட்டை அவிழ்த்து அவளைக் காமத்துடன் இறுகத்தழுவி அவளை கருக்கொள்ளச் செய்தான். அவள் தன்னைக் கெடுத்த பாவி யாரென்ன, வாயு நிகழ்ந்தது கூற, அவள் மகிழ்ந்தாள். அவள் பெற்ற பிள்ளையே நீ; பிறந்தவுடன் நீ சூரியன் மேல் பாய, இந்திரன் வச்சிரத்தால் உன்னை அடிக்க, உனது இடது அநு கன்னம் ஒடிந்து விழுந்தது. அதனால் அநுமான் எனப்பெயர் பெற்றாய். அது கண்டு வாயு சினம்கொள்ள, நான்முகனும் இந்திரனும் உனக்கு வரம் தந்தனர். ஆதலின் நீ கேசரியின் க்ஷேத்திரத்தில் வாயுவுக்குப் பிறந்தாய். அதலால் நீ கேசரிக்கு க்ஷேத்திர புத்திரன்; வாயுவுக்கு ஔரச புத்திரன். இவ்வளவு பெருமையை உடைய நீயே கடலைத் தாண்டவேண்டும்" என அநுமானைப் புகழ்ந்தான். அநுமானும் அதற்கு இணங்கித் தனது பெருமைகளை மிகைபடப் பேசி வளர்ந்தான். சாம்பவன் மறுபடியும் அவனைப் புகழ, அநுமான் தன்வேகத்தைத் தரை தாங்காதாகையால் கடலைத் தாண்டும்பொருட்டு மகேந்திர மலையில் ஏறி நின்றான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சம்பாதியும், சடாயுவும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு விண்ணில் பறந்தனராம்! சூரியனை அணுகினால் வெப்பம் தாக்கும் என்ற உணர்ச்சி கூட அவர்களிடம் இல்லை

போலும்! இவர்களுடைய தந்தையாகிய அருணன் சூரியனுடைய தேரை ஓட்டிப் போகிறவனாயிருக்க, சூரியன் கொஞ்சமும் அருளில்லாமல் இவர்களைக் காய்ந்தனனே! அருணன் நொண்டி; இவன் இரவும் பகலும் ஓயாமல் சூரியனுடைய தேரைச் செலுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறாக இவன் இந்த இரண்டு பிள்ளைகளை எங்ஙனம் பெற்றெடுத்து வளர்த்தானோ? எல்லாம் வியப்பே.

சம்பாதிக்கு ஒரு மகன் இருந்தனனாம். அவன் காட்டோறும் பல உயிர்களை அடித்துக்கொன்று சம்பாதிக்குக் கொடுத்து வந்தனனாம். அவர் தம் அருள் ஒழுக்கம் மிக அழகியதே!

சம்பாதியை உயிர் விடாமல் எண்ணாயிரம் ஆண்டுகளிலிருந்தால் இராம தூதரைக் கண்டவுடன் சிறகுகள் முளைக்குமென நிசாசர முனிவன் கூறினனாம். இந்திரன் சீதைக்கு அமுதம் அனுப்புவானென்றும், அதை அவள் உண்டு பசியாதிருப்பாளென்றும் அம்முனிவன் கூறினனாம். மிகவும் உத்தமோத்தமனாகிய இந்திரனிடமிருந்து வந்த அமுதத்தைச் சீதை வாங்கி உண்ணவேண்டியது அவசியமே! இவ்வொழுக்கமும் அழகியதே.

ஒருவனுக்கு ஓர் உறுப்புக்கேடடைந்து விட்டால், அவன் இளைஞனாயின் அது விரைவில் பொருந்திவிடும்; வயதாய் விட்டதால் பொருந்துவதில்லை. மிக்க கிழப்பருவத்தை உடைய சம்பாதிக்கோ சிறகு எரிந்து எண்ணாயிரம் ஆண்டுக்கப்புறம், அதுவும் வானரர்களைக் கண்டவுடன் வளர்ந்ததாம்! என்னே விந்தை! இதனினும் வியப்பு நிசாசர முனிவன் இந்நிகழ்ச்சியை எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்ததுதான்!

காற்றரசனுடைய தகாத செயலைப் பாலகாண்டத்தில் கண்டோம். அங்கே அவன் அரசனுடைய நூறு பெண்களைத் தன்னை மணக்க இசையாத குற்றத்திற்காக முடமாக்கிய தீய செய்கை காணப்பட்டது. அதைப் போலவே இங்

கே உலாவிச் சென்ற அஞ்சனையை அவளுடைய விருப்ப மில்லாமலே தழுவிக் கருவுண்டாக்கிய தீய செயல் காணப்படு கின்றது. அப்பெண் தன்னைச் சேர்ந்தவன் காற்றரசனென உணர்ந்ததும் மகிழ்ந்தனளாம். அவ்வுத்தமி தன் கணவனாகிய கேசரியை விடுத்து அந்நியனாகிய காற்றைக் கூடிப்பெற்ற பிள்ளையே அனுமான்! கேசரிக்கு அனுமன் க்ஷேத்திர புத் திரன்; அதாவது அவனுடைய க்ஷேத்திரத்தில் (வயலில்) வேறொருவன் பயிரிடப்பிறந்த பிள்ளை. அவன் வாயுவுக்கு ஔரசபுத்திரன்; அதாவது தனக்கே பிறந்தபிள்ளை. இவ்வாறு சாம்பவன் அனுமானை ஏ வியபசாரி பிள்ளையே! எனப் புகழ்ந்தனனாம். அதைக் கேட்டு அனுமான் மகிழ்ந்து கட லைத்தாண்ட இசைந்தனனாம். என்னே அழகு! அழகு! அனுமானுடைய மனப்பான்மை இருந்தவாறு மிக அழகிய தே.

அனுமான் எவ்வாறு வியபசாரி பிள்ளையெனக் கூறப்ப டுகின்றானோ, அதைப்போலவே வாலியும் சுக்கிரீவனும் கூறப் படுகின்றனர். ரிட்சரஸ் என்ற வானர மன்னனுக்கு இந்திர னால் வாலியும், சூரியனால் சுக்கிரீவனும் பிறந்தனராம்! ரிட்ச ரஸ் என்பவனுடைய மனைவிக்குப் பிறந்தனரோ, அன்றி அவனுக்கே பிறந்தனரோ! கதையில் ஒருநாள் ரிட்சரஸ் என்ற வானரன் பார்வதியால் சாபம் பெற்றகுளத்தில் விழுந்து பெண்ணுருவடைய, அவனைக்கூடி இந்திரன் வாலியையும், சூரியன் சுக்கிரீவனையும் பெற்றனராம்! (ஆண்கருக்கொண்டு பெற்ற பிள்ளைகள் கண்டிராப் புதுமையே) இதைப்போலவே பெண்ணுருவெடுத்த திருமாலைப்புணர்ந்து சிவன் ஒரு பிள் ளையைப் பெற்றனராம்! அப்பிள்ளையே சாத்தனாம்! என் னே புதுமை! இனி, கம்பர் போக்கைக் காண்போம்.

சம்பாதியிடம் அங்கதனும் சாம்பனுமே பேசினராக, கம்பர் அதனிடம் பேசியவர் அனுமானே எனக்கூறுகின்றார். சம்பாதியே அனைவரையும் கொன்று தின்பேனெனக் கூறிய தாக, அதனை ஓர்அரக்கனென அனுமன் எண்ணிக் கொல்லப் போயினன் என அவர் கூறுகின்றார். சடாயுவின் இறப்பை அனுமான் சம்பாதி கேட்கக் கூறினனென்றும், சம்

பாதி வருந்தி வானரர் அனைவரையும் இராமனுடைய பெயரைக் கூறச் செய்தது எனவும், அதனால் சம்பாதிக்குச் சிறகு வளர்ந்ததெனவும் அவர் புதுக்கதையைக் கூறுகிறார். இராமனைத் தெய்வமாகவும், அவனுடைய பெயருக்கே இவ்வளவு தெய்வத்தன்மை இருக்கிறதென்றும் உண்மையறியா மக்களிடை உணர்ச்சியைப் பரப்புவது தான் கம்பருடைய நோக்கம். இதற்காக முழுப்பொய்களையா அவர் அளத்தல் வேண்டும்? கம்பருடைய கவிகள் அழகாகவும், வியப்பாகவும், இனிமையாகவும் இருக்கலாம். ஆனால் அவைகளால் விளையும் நன்மையினும் தமிழ் மக்கள் அடைந்த தீமை நூறாயிரமடங்கு அதிகமென்பதையும், தமிழ் மக்களிடைப் பரவியுள்ள குருட்டு நம்பிக்கைகளுக்கும், தமது பகைவனாகிய இராமனிடைக்கொண்டுள்ள அழியா அன்புக்கும் இக் கம்பரே முதற்காரணமாவர் என்பதையும் அறிஞர் சிந்திப்பாராக. வால்மீகி கூறியிருப்பதையே கம்பர் கூறுகிறார் என்பதும் இல்லையே? நாய் கடித்தது கூடவலிக்கவில்லை, அதன் பின்பட்ட அடியே மிகுதியும் துன்புறுத்துகிறது என்று உலகினர் சொல்வார்கள். அதற்கேற்ப வால்மீகியாவது தம்மினத்தவன் கதையை அதிகமாக ஒன்றும் மறைக்காமல் கூறினார் என்னலாம். அவர் எழுதிய வரலாற்றைப்படித்தால் தமிழ் மக்களுடைய அறிவுமாறாது. அவ்வாறிருக்க நமது கம்பர் உண்மையை மறைத்துப் பொய்யைப் புனைந்து பகைவனைப் புகழ்ந்து பாடிப் போற்றினாரே! இவரால் விளைந்த தீமைக்கோர் அளவு முண்டோ?

சம்பாதியும் சடாயுவும் வல்லமை காணப் போட்டி போட்டு உயரப் பறந்தனராகக் கம்பர் அவர்கள் தேவருலகைக் காணப் பறந்து சென்றனரென்று கூறுகிறார். சிறகற்று விழுந்த சம்பாதியை நோக்கிச் சூரியன், வானரர் இராமன் பெயர் கூறச் சிறகு பெறுவாய் என்று வரந்தந்தனனென்று இல்லாததொன்றைக் கூறினதோடு, அவர் முனிவன் கூறியதையும் கூறுகிறார். சம்பாதிக்கு ஒரு மகன் இருந்ததையும், அவன் இராவணனைச் சீதையோடு சந்தித்ததையும் அவர் கூறவில்லை. வாயு, கேசரியின் மனைவியாகிய அஞ்சனையைச் சேர்ந்த விவரத்தைக் கம்பர் கூறாது மறைத்தார். இத்துடன் கிட்கிந்தாகாண்ட ஆராய்ச்சி இனிது நிறைவு பெறுகிறது. இனி தொடர்ந்து சுந்தரகாண்ட ஆராய்ச்சி வெளிவருவதாகும்.

## பகுத்தறிவு நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெண் ஏன் அடிமையானாள்? (ஈ.வெ.ரா) | 0 | 5 | 0 |
| 2. | முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 5 | 0 |
| 3. | கடவுள் | 0 | 5 | 0 |
| 4. | மதம் மக்களுக்குச்செய்த நன்மை என்ன? | 0 | 3 | 0 |
| 5. | பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.) | 0 | 3 | 0 |
| 6. | மதமும், விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | 3 | 0 |
| 7. | பிரபஞ்ச உற்பத்தி | 0 | 3 | 0 |
| 8. | நான் ஏன் கிருஸ்தவனல்ல? | 0 | 3 | 0 |
| 9. | நான் சம்சயவாதி ஆனதேன்? | 0 | 3 | 0 |
| 10 | மெய்ஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும் | 0 | 6 | 0 |
| | ,, 2-ம்பாகம் | 0 | 5 | 0 |
| 12. | ஞானசூரியன் | 0 | 5 | 0 |
| 13. | மரணத்திற்குப் பின் வாழ்க்கை உண்டா? | 0 | 4 | 0 |
| 14. | மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| 15. | வால்டையரின் சரிதம் | 0 | 4 | 0 |
| 16. | பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் | 0 | 4 | 0 |
| 17 | பெண் ணுரிமையும் மதமும் | 0 | 3 | 0 |
| 18. | தேவதாசி | 0 | 8 | 0 |
| 19. | இந்தியமாதா | 0 | 4 | 0 |
| 20. | இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம் | 0 | 2 | 0 |
| 21. | மதம் என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| 22. | தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி | 0 | 3 | 0 |

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்) | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை | 0 | 1 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 8. | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9. | ,, கிட்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம் | 0 | 5 | 0 |
| 11 | தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 13. | பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைப் பாடல் | 0 | 2 | 0 |
| 18. | கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 19. | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | 0 |
| 20. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 21. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 22. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 23. | ஈ. வெ. ரா இலங்கை உபன்யாசம் | 0 | 0 | 9 |
| 24 | கத்தோலிக்கர் வீண் கூச்சல் | 0 | 0 | 6 |
| 25. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 26. | சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | [illegible] |
| 27. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | [illegible] |
| 28. | மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | [illegible] |
| 29. | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | [illegible] |
| 30. | புது ரஷ்யா (200 பக்கம்) | 0 | [illegible] | [illegible] |
| 31. | புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் | 0 | 8 | 0 |
| 32. | கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |

கிடைக்குமிடம்:— குடி அரசுபதிப்பகம் ஈரோடு.